Vol.6, Issue 3 | Annual Subscription ₹ 480

@NewsRotary

/RotaryNewsIndia

ஆகஸ்ட் 2023

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

ADVT.



CREATE HOPE in the WORLD



A Project by
Rotary Club of Virudhunagar Dist-3212

RYLA

Be an Entrepreneur

Certification in Entrepreneurship




Rotary

**Who Can Participate in RYLA?**

Rotaractors | Third & Fourth Year UG Students
First & Second Year PG Students
Graduates & Post Graduates between ages 18 and 28

A Comprehensive
**ENTREPRENEURSHIP DEVELOPMENT WORKSHOP**
in 3500 Minutes



Only **32** Participants Per Batch

**To build and groom young Entrepreneurs**

STOP searching jobs
START producing jobs

- Formula to Choose the Right Business
- Procuring Investments at Ease
- Productive People Management
- Digital & Organic Marketing Strategies
- Profit Making Techniques
- Showstopper Business Plans

**The Top 2 Performers of Each Batch FLY TO SINGAPORE (Industrial Visit) Free of Cost.**



On Board **812** Through 26 Editions

LEKHA ads/July 23/ Rotary/1

BUSINESS PLAN | POWER SPEAKERS | CONTINUOUS HANDHOLDING | INVESTORS MEET | LOT MORE SURPRISES

**UPCOMING BATCH DATES**
**Batch 28 : 18th, 19th & 20th AUG, 2023**
Batch 29 : 15th, 16th & 17th SEP, 2023
Batch 30 : 19th, 20th & 21st OCT, 2023
Batch 31 : 17th, 18th & 19th NOV, 2023

**INVESTMENT** - Rs.2500 Only
(Incl. Accommodation / Food / T-Shirt / Certification / E-Book / CREA Programs)

**VENUE**
Hotel St.Antony's Residency
Sipcot Industrial Growth Center
Gangaikondan, Tamilnadu

**CONTACT FOR REGISTRATION: 94431 66650 / 94433 67248**

PG | IDHAYAM PROMISE OF HEALTH AND HAPPINESS | Srinidhi Building Sustainable Relationship | K.V. Ramaswamy MEMORIAL TRUST

# உள்ளே


**12**
பெங்களூரு சங்கம் ரூ.4 கோடியில் 214 அங்கன்வாடிகளை சீரமைத்துள்ளது

**20**
ஜெய்சால்மரில் பழங்குடியினர் பள்ளியில் ரோட்டரி நூலகம்

**24**
ஜெய்ப்பூர் மூட்டுகள் மூலம் நம்பிக்கையை அளிக்கிறோம்

**30**
ஊரகப் பெண்களுக்கு ஆங்கிலப் பேச்சுத்திறன் அளிக்கும் RID 3212

**32**
இதய அறுவைச் சிகிச்சைக்குப்பின், மினி மாரத்தான் ஓட்டத்தில் வெற்றி

**34**
தானேவில் ஒரு மூங்கில் பேருந்து நிறுத்தம்

**38**
இளைஞர்களின் எதிர்காலம் கருதி அவர்களையும் ஈடுபடுத்துங்கள்: பானர்ஜி

**48**
பள்ளி மாணவர்களுக்கு நூலகங்கள்

**52**
ரோட்டரி இந்தியாவின் 7 பெண் ஆளுநர்கள்

**54**
ஒரு பல்லுயிர் பூங்கா

**56**
போலியோவை ஒழிக்க அமெரிக்க ரோட்டேரியன்களின் உலகளாவிய விமான பயணம்

**64**
பிளாஸ்டிக்கை தவிர்க்கும் வழிகள்

**68**
சுசீலா, தென்னாட்டின் கானக்குயில்

**76**
மூளையின் நச்சுக்களை அகற்றுவோம்!




## சிறப்பான நேர்காணல்

*RI இயக்குநர்கள் ராஜூ, வித்யா இருவருடைய தலைமையின்கீழும் நெருங்கிப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ராஜூ அவர்கள் மாவட்ட ஆளுநராகப் பொறுப்பேற்றபோது நான் GSE குழுவில் அமைய ஆர்வத்துடன் இருந்தது நினைவிருக்கிறது. அவரைப் பல ஆண்டுகளாகப் பார்த்துவரும் நான், அவரைப்போன்ற ஒரு தலைவர் இந்தியாவுக்கு ஒரு வரம் என உணர்கிறேன். அவருடைய சங்கத்தில் நானும் இருக்கிறேன் என்பது, ரோட்டரியின் பணியை முன்னெடுத்துச் செல்ல நாங்கள் செய்யும் மிகச் சிறந்த பணியை எண்ணி என்னைப் பெருமை கொள்ளச்செய்கிறது.*

*விவேக் கன்டேல்வால்,*
*RC தியோனார் — D 3141*

*ஒரு 'துடிப்பான', வெளிப்படையாகப் பேசுகிற, இயல்பான RI இயக்குநர் என்ற தலைப்பில் ராஜூ சுப்ரமணியன் பற்றி வெளியாகியிருந்த கட்டுரை மிகச் சிறப்பானது. நான் அவரை நேரில் சந்தித்ததில்லை, ஆனால், அவருடைய*



*பார்வைகள் மிகவும் சரியானவை, இன்றைக்குத் தேவையானவை. இந்த ஆர்வமூட்டும் கட்டுரைக்கென ரஷீதா பகத் அவர்களுக்கு நன்றி.*

*சமீர் தக்கர், RC பாவ்நகர் ரவுண்ட் டவுன் — D 3060*

*ராஜூ சிறந்த ரோட்டரியன், சிறந்த மனிதர், மிகச் சிறந்த தலைவர். ரோட்டரி இந்தியா தன் பொதுத் தோற்றத்தை மேம்படுத்த இவரைப் போன்ற தொலைநோக்குள்ள தலைவர் தேவை.*

*ஜோதி டாட்டெ, RC டோம்பிவ்லி வெஸ்ட் — D 3141*

## செயல்பட அழைக்கும் RI தலைவர்

ஜூலை இதழ் மிகச் சிறப்பாக இருந்தது. RI தலைவர் கார்டன் மெக்இனல்லி அவர்களுடைய அழகான புகைப்படத்தை அட்டையில் பார்த்து மகிழ்ந்தேன். செயல்படுவதற்கான என் அழைப்பு என்ற தன்னுடைய செய்தியில் அவர் உலகத்தில் நம்பிக்கையை உருவாக்க நமக்குள் அமைதியைக் கட்டமைத்தலையும் அதைப் பரவலாகப் பரப்புதலையும் வலியுறுத்துகிறார்.

RID அனிருதா ராய்சௌத்ரி, வருங்காலச் சவால்களை எதிர்கொள்ள மாற்றங்களுக்கு அழைப்பு விடுக்கிறார். TRF அறங்காவலர் துணைத் தலைவர் பரத் பான்ட்யா கதைகள் மற்றும் நிகழ்ச்சிகளின் வழியாக, வழங்குதலின் மகிழ்ச்சியைப்பற்றி நன்கு விளக்குகிறார்.

செயலாகும் பண்பு என்ற முதன்மைக் கட்டுரை, மெக்கினலி அவர்களுடைய வாழ்க்கையைப் பேசும் சுவையான, படிக்க வேண்டிய படைப்பு. RI இயக்குநர்கள் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ராஜூ சுப்ரமணியனுடனான பேட்டிகள் அடிப்படையில் அமைந்த இந்தியாவில் ரோட்டரியின் திறன் தொகுப்பின் முழுச் சாத்தியத்தை நாம் இன்னும் முழுக்கப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

PRIP ஜொனாத்தன் மஜியாக்பெ அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் PRIP கல்யாண் பேனர்ஜி அவருடைய பொறுப்புக் காலத்தில் அவர் செய்த உயர்ந்த பணியை விவரித்துள்ளார். ரோட்டரி உலகம் அவருடைய சேவையை என்றென்றும் நினைவில் வைத்திருக்கும்.

ஃபிலிப் முலப்பொனெ M T, RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211

RI தலைவர் மெக்கினலி தன்னுடைய முதல் செய்தியில், உலகில் நம்பிக்கையை உருவாக்க அழைப்பு விடுத்துள்ளது சரியான தாக்கத்தை வழங்கியுள்ளது. இது, ஒவ்வொரு ரோட்டரியனையும் இலக்கெனக் கொண்ட தெளிவான அழைப்பு.

R முரளி கிருஷ்ணா
RC பெர்காம்பூர் — D 3262

## சாதனைக்கு வாழ்த்துக்கள்

ஆசிரியர் குறிப்பில் நீங்கள் ஒரு நல்ல தொடக்கத்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளீர்கள். இது ஒரு பொருத்தமான நிறைவுக்கு நம்மை வழிநடத்தும். ஒவ்வோர் ஆண்டும் எல்லா நிலைகளிலும் தலைமை மாறுவது ரோட்டரியின் தனித்துவங்களில் ஒன்று. ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் அறிவுரை புதிய தலைவர்களுக்குள் இருக்கும் பொறியைத் தூண்டிவிடும், உலகில் மாற்றத்தை உண்டாக்கும் அவர்களுடைய தேடலை ஊக்குவிக்கும்.

V R T துரைராஜா
RC திருச்சிராப்பள்ளி — D 3000

ஆசிரியர் குறிப்பு எல்லா நிலைகளிலும் உள்வரும் ரோட்டரி தலைவர்களுக்கு மகிழ்ச்சி தரும் சொற்களைக் கொண்டுள்ளது. RI தலைவர் மெக்கினலி தன்னுடைய செயல்படுவதற்கான என் அழைப்பு என்ற செய்தியில், அனைவரும் மன நலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும்படி கேட்கிறார்.

K M K மூர்த்தி,
RC செகந்திராபாத், D 3150

## இழந்த வாய்ப்புகள்

TCA ஸ்ரீனிவாச ராகவன் அவர்களுடைய LBW பத்தி தொடர்பாக ஒரு விஷயத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். 1970களின் பிற்பகுதியில் இளம் முதுநிலைப் பொருளாதாரப் பட்டதாரியான நானும் இதே இக்கட்டான நிலையைச் சந்தித்தேன். அவரைப்போல, பல்கலைக்கழகப் படிப்பை நிறைவுசெய்தபின் என்ன செய்வது என்று எனக்கும்

தெரிந்திருக்கவில்லை. அப்போது ஆயிரக்கணக்கான இளம் பட்டதாரிகள் செய்ததுபோல் நானும் சிவில் சர்வீஸ் தேர்வை எழுதினேன். அப்போதைய அடுத்த மிகச் சிறந்த விஷயம், வேலை இல்லாப் பட்டதாரிகளுடைய மிகச் சிறந்த தேசியப் பொழுது போக்கு அதுதான். அன்றைக்கு எல்லாரும் சொன்ன நகைச்சுவை என்ன வென்றால், சிவில் சர்வீஸ் தேர்வின் பொருளாதாரத் தாளைத் திருத்தியவர்கள் மதிப்பெண்களைப் பொறுத்த வரை மிகச் சிக்கனமாக இருந்துவிட்டார்கள். அதனால், என்னைப் போன்றவர்கள் வேறு தலைப்புகளைத் தேர்ந்தெடுத்தோம்.

இந்தக் கட்டுரை ஆசிரியரைப் போல் நானும் தேர்வில் தோற்றேன், சட்டம் பயில முயன்றேன், அதிலும் வெற்றி பெறவில்லை.

N அந்த்ரி வேடி, RC ஹைதராபாத் மெகா சிட்டி — D 3150

முன்னாள் தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் ரோட்டரியன்களுக்கு வழங்கிய தன்னுடைய கடைசிச் செய்தியில், உலகெங்கும் பலரிட மிருந்து தான் பெற்ற கதகதப்பான வரவேற்பையும் வாழ்த்துகளையும் நினைவுகூர்ந்துள்ளார்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

முன்னாள் TRF அறங்காவலர் தலைவர் இயான் ரைஸ்லி தன்னுடைய ஜூன் செய்தியில், உலகை அனைவருக்கும், குறிப்பாக, ஏழைகள், ஆபத்துக்கு ஆளாகக்கூடியோர் மற்றும் ஒதுக்கப் பட்டோருக்கு இன்னும் சிறப்பாக ஆக்குவது நம் கைகளில் உள்ளது என்கிறார்.

புதிய அறங்காவலர் தலைவர் பாரி ராஸ்ஸினுக்கு TRF வழியாக மாற்றத்தை உருவாக்குவதில் வெற்றி கிடைக்க நான் வாழ்த்துகிறேன்.

அபய் கிஷோர் சான்ட்வர்
RC தன்பாத் மிட்-டவுன் — D 3250

ஆசிரியர் எழுதிய, ஜூன் இதழின் அட்டைப் படக் கட்டுரையான, மெக்கினலி-க்கு ரோட்டரி என்பது தொடர்ச்சி தொடர்பானது அழகிய படங்களுடன் புதிய RI தலைவரைப்பற்றிய மிகச் சிறந்த தகவல்களை வழங்கியது. ரஷீதா பகத் எழுதிய பெரிய கனவுகளை காணுங்கள் என்ற கட்டுரை பெரிய இலக்குகளை அமைக்கவும் தாக்கம் மிக்க தலைப்புகளைச் செய்யவும் நம்மை ஊக்குவிக்கிறது. S D பர்மனைப் பற்றிய மிகச் சிறந்த மந்திரவாதி இசைக் கலைஞர் என்ற கட்டுரை இந்த மிகச் சிறந்த இசையமைப் பாளரைப் பற்றிய தகவல்களால் நிறைந்திருந்தது.

S N சண்முகம்
RC பண்ருட்டி — D 2981

அட்டையில்: ராஜஸ்தானில் உள்ள ராஜ்குமாரி ரத்னாவதி பள்ளி மாணவி. இந்த பள்ளியில் RCs ஹைதராபாத் ஸ்மார்ட் மற்றும் ஜெய்சால்மர் ஸ்வர்ண நகரி ஒரு நூலகம் அமைத்துள்ளது.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

## சிந்தனையைத் தூண்டும் ஆசிரியர் பக்கம்

*ஜூன் இதழில், நியூ யார்க்கைச் சேர்ந்த ஒரு புதிய சங்கத்தைப்பற்றி நீங்கள் எழுதியிருந்த "ரத்து செய்யப் பட்டோருக்கான ஒரு சங்கம்" என்ற ஆசிரியர் பக்கக் கட்டுரை சிறப்பாக அமைந்திருந்தது. வெவ்வேறு நபர் களுடைய எண்ணங்களில் கருத்து வேறுபாடு இருக்கிறது, பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சனைகளைப்பற்றிய தங்கள் சிந்தனைகளை முன்வைக்கும் உரிமை எல்லாருக்கும் உள்ளது.*

*'எழுந்து நின்று உரக்கப் பேசுகிற' இந்தச் சுதந்தரம் லண்டன் ஹைட் பூங்காவிலும் காணப்படுகிறது, இங்கு ஒருவர் எந்த அச்சமும் இன்றித் தன் கருத்துகளை வெளிப்படுத்தலாம். எங்களுக்குப் புதிய கருத்துகளைத் தொடர்ந்து தெரிவித்துவாருங்கள்.*

*ராதேஷ்யாம் மோடி,*
RC *அகோலா* —D 3030

*ஜூன் மாத ஆசிரியர் பக்கக் கட்டுரை யான நிமிர்ந்து நில் துணிந்து சொல் ஒரு வலுவான செய்தியைத் தெரிவித்தது, விஷயங்களை அப்படியே ஏற்றுக் கொண்டு விடவேண்டாம், பிரச்சனை களை ஆழமாக ஆராயுங்கள், அல்லது, அவற்றைக் கேள்வி கேளுங்கள் என்று நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. திருநபர்கள் கண்ணியமாக வாழவும் வளங்குன்றாத வாழ்வாதாரத்தைச் சம்பாதிக்கவும் அவர்களுடைய வாழ்க்கைகளை மாற்றும் தனித்துவமான திட்டத்தை நடத்திவரும்* RC *கல்கத்தா பிரசிடென்சி-க்குப் பாராட்டுகள்.*

*நம்பிக்கைத் திட்டத்தின் கீழ்* RC *சென்னை இன்டஸ்ட்ரியல் சிட்டி நடத்திய மன நலப்பராமரிப்பு வளாகத்தை மேம்படுத்துதல் மிகவும் பாராட்டவேண்டியது.*

*ராஜ் குமார் கபூர்,*
RC *ரூப்நகர்* — D 3080




மோனிகா லோஜின்ஸ்கா

# அக்கறை எண்ணங்கள்

மெல்போர்னில் நடைபெற்ற 2023 RI மாநாட்டில், மன நலத் தேவைகளை நிறைவு செய்கிற நம் முயற்சியில் இணையும்படி அனைத்து ரோட்டரி உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொண்டேன்.

அமெரிக்க அறுவைச் சிகிச்சைப் பொது வல்லுனர் சமீபத்தில் தனிமையை ஒரு பொது நல நோய்ப் பரவலாக அறிவித்தார். டாக்டர் விவேக் மூர்த்தி இதுபற்றிச் சொன்னது, “புகையிலை, உடல் பருமன், போதைப் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்தும் குறைபாடுகள் போன்ற மற்ற முக்கியமான பொது நலப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நாம் முக்கியத்துவம் அளித்ததுபோல், சமூக இணைப்புகளைக் கட்டமைப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.” இந்த வகைச் சமூக இணைப்புகளைக் கட்டமைக்க ரோட்டரி பல தலைமுறைகளாகச் செயல்பட்டுவருகிறது என்பது எனக்குப் பெருமையளிக்கிறது.

நம்முடைய உலகளாவிய சமூகமும் தனக்கு மேல் சேவைக்கு முக்கியத்துவம் அளிக்கிற நம்முடைய அடிப்படையான மதிப்பும் சேர்ந்து ரோட்டரியை மன நலனுக்கான ஆற்றல் மிக்க பன்னாட்டுக் குரல் கொடுப்பவராக ஆக்குகின்றன. மக்கள் ஒருவரோடு ஒருவர் மேலும் இணைந்திருப்பதாக உணரச்செய்ய உதவுகிற மூன்றே மூன்று மன நல இடையீடுகளில் ஒன்று, அன்புச் செயல்களைச் செய்வது என்கிறது ஒகையோ மாநிலப் பல்கலைக்கழகம் சமீபத்தில் பதிப்பித்த ஓர் ஆய்வு. “அன்புச் செயல்களைச் செய்வது அந்த இணைப்புகளை முன்னிறுத்தும் மிகச் சிறந்த வழிகளில் ஒன்றாகத் தோன்றுகிறது” என்கிறார் இந்த ஆய்வின் இணை ஆசிரியர் டேவிட் கிரெக்.

நாம் முன்பே அறிந்த ஒரு விஷயத்தை இந்த ஆய்வு விளக்குகிறது: நன்மை செய்வது நாம் சேவை புரியும் சமூகங்களைமட்டும் மாற்றுவதில்லை, அது நம்மையும் மாற்றுகிறது.

நாம் இந்த முயற்சியைப் புதிதாகத் தொடங்கவில்லை. மன நல முன்னெடுப்பு களுக்கான ரோட்டரி செயல் குழு பல ஆண்டுகளாக இதுபோன்ற பிரச்சனைகளில் கவனம் செலுத்திவருகிறது. நாம் தொடர்ந்து இது பற்றிய விழிப்புணர்வை உருவாக்கு வதற்கு அந்தக் குழுவின் உறுப்பினர்கள் தலைமையேற்பார்கள் என்று நாம் எதிர்பார்ப்போம்.

மன நலப் பராமரிப்பு என்பது, நம்முடைய கவனப் பகுதிகளில் பலவற்றுக்கு நன்கு பொருந்துகிறது. மே மாதம் வரையில், மன நலக் கவனம் கொண்ட, பன்னாட்டு நல்கைகளால் ஆதரிக்கப்படும் 41 திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. இவற்றில் பலவும் மிகச் சிறந்த நம்பிக்கையைத் தருகின்றன, நாம் எதிர்வரும் மாதங்களில் அவற்றைச் சுட்டிக் காண்பிப்போம்.

மன நலத் தேவைகளைப்பற்றிய விழிப்புணர்வைப் பெருக்குவோம், தடுக்கக்கூடிய மற்றும் இடையீட்டு மன நலச் சேவைகளின் அணுகலை மேம்படுத்துவோம்.

ஒன்றாகச் சேர்ந்து, நாம் உலகில் நம்பிக்கையை உருவாக்குவோம்.

R **கோர்டன்** R **மெக்கினலி**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



# இழந்ததை மீட்டெடுப்போம்!

எல்லோருக்கும் இல்லாவிட்டாலும் நம்மில் பெரும்பாலானவர்களுக்கு ஒரு வாட்ஸ் ஆஃப் செய்தி வந்திருக்கும். ஒரு காலத்தில் தமக்கு சொந்தமான இடத்தை நதி எப்படி மீட்டெடுக்கிறது என்ற செய்திதான் அது. நதி எதையும் எப்போதும் மறப்பதில்லை. பல தசாப்தங்கள் மற்றும் பல நூற்றாண்டுகள் கடந்து விட்டாலும் நதி தனது எல்லையை மீட்டெடுக்க வரும். இங்கு பேசப்படுவது யமுனை நதி. அதனுடன் வெளியான படங்கள் மற்றும் வீடியோக்கள் யமுனை கோபத்துடன் சீறிப்பாய்ந்து தில்லியின் பல பகுதிகளை வெள்ளத்தில் மூழ்கடிப்பதை சித்தரிக்கிறது. இந்தப் பகுதிகள் ஒரு காலத்தில் யமுனைக்கு சொந்தமான பகுதிகளாகவே இருந்தன. யமுனை வெள்ளம், தில்லி சாலைகளை வெள்ளக்காடாக்கியது. பாதிக்கப்பட்ட மக்களை வேறு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல படகுகள் பயன்படுத்தப்பட்டன. வீடுகள், குடியிருப்புகள், அலுவலகங்களில் வெள்ளம் சூழ்ந்தது. வெள்ளம் தில்லி செயலகத்தையும் விட்டுவைக்கவில்லை. தில்லி முதல்வர் அரவிந்த் கெஜரிவாலை அரசியல் ரீதியாக எதிர்ப்பவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மீம்ஸ் போடத் தொடங்கினர். தில்லியை ஏரி நகரமாக மாற்றுவோம் என்று கெஜ்ரிவால் எப்போதோ பேசியது மீம்ஸ்களாக வெளிவந்தன. அமைச்சர்கள் அதிகாரிகளை குற்றஞ்சாட்டினார்கள். சரியாக செயல்படவில்லை அல்லது தாமதமாக செயல்பட்டார்கள் என்ற குற்றச் சாட்டை அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை. யமுனைக் கரையில் உள்ள ஆக்கிரமிப்புகள், குறைந்த காலத்தில் அளவுக்கு அதிகமான மழை, ஆற்றுப்படுகையை உயர்த்திய வண்டல்மண் குவிப்பு ஆகியவையே காரணம் என நிபுணர்கள் தெரிவித்தனர்.

இமாச்சல பிரதேசம், உத்தரகண்ட், அஸ்ஸாம், உத்தரப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹரியானாவிலும் நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆனாலும், வழக்கம்போல ஊடகங்கள் தில்லியின் பாதிப்பை பிரதானப்படுத்தியே செய்திகள் மற்றும் காட்சிகளை வெளியிட்டன. இதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

இந்தியா முழுவதும் மீண்டும் மீண்டும் வெள்ளம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அறிவுள்ள மனிதர்களின் அத்துமீறல்களும் ஆக்கிரமிப்புகளும்தான்! ஆனால், நாம் இதிலிருந்து பாடம் கற்றுக்கொண்டோமா? பதில் அனைவருக்கும் தெரிந்ததுதான்.

மிகவும் மகிழ்ச்சியான செய்திக்கு வருவோம். ஜூலை மாதம் புதிய தலைவர்கள் பதவியேற்கும் மாதமாகும். இந்த முறை நமது மண்டலத்தில் 7 பெண்கள் அவர்களின் மாவட்டத்தில் ஆளுநர்களாக பதவியேற்றுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரே ஆண்டில் இத்தனை பெண் ஆளுநர்கள் பதவியேற்று நாம் பார்த்ததில்லை. அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதற்கான அறிகுறி இருக்கிறதா தெரியவில்லை. ஆனால், இந்த தருணத்திலாவது பெண்ணுரிமைக்காக பாடுபட்ட சிமோன் டீ பிவோயர், கூறுவது போல, இரண்டாம் பாலினத்தை கொண்டாடுவோம். மணிப்பூரில் இரண்டு குக்கி-ஜோ பெண்களை நிர்வாணமாக அணிவகுத்து செல்லும் வீடியோ, ஆதரவற்ற பெண்களுக்கு எதிரான கொடூரம் தொடர்கிறது என்பதை நிரூபிக்கிறது. ஆனால், அநீதி இழைக்கப்பட்ட நதிகளைப் போல பெண்களும் தங்களுக்குரிய உரிமைகளை ஒருநாள் மீட்டெடுப்பார்கள்.

மக்களுக்கு நல்லது செய்யவும், மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தவும், சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் சிறப்பாக செயல்படவும் ஏழு பெண் ஆளுநர்களுக்கும் வாழ்த்துக்கள்!



ரஷீதா பகத்

# நகர் முழுவதும் பசுமை



உங்கள் சங்கம் பசுமையைப் பாதுகாப்பது எப்படி என்று சிங்கப்பூரில் உங்களுக்குப் பல யோசனைகள் கிடைக்கும், மாநாட்டு நிகழ்ச்சிகளில் மட்டுமில்லை, நகர் முழுவதும்தான். இந்தச் சிறிய தீவு நாடு காலநிலை மாற்றத்தைக் கையாளும் தன்னுடைய புதுமைச் சிந்தனைகளால் உலகை ஊக்கு விக்க விரும்புகிறது, தன் பசுமைப் படைப்புணர்வை எல்லா இடங் களிலும் காட்சிப்படுத்துகிறது.

2024 ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டை நடத்தும் இந்த நகர நாட்டின் அலுவலர்கள் இதை 2050க்குள் தன் கார்பன் உமிழ்வை நிகரப் பூச்சியத்துக்குக் குறைக்கும் நோக்கத்தைக் கொண்ட வாழும் ஆய்வகம்'' என்று அழைக்கிறார்கள். 2030க்குள் நடைபெறவுள்ள முதன்மை மைல்கற்கள்: 1 மில்லியன் மரங்களை நடுவது, சூரிய ஒளி ஆற்றல் அமைப்புகளை 400% பெருக்குவது, குப்பைக் குவியல்களை மூன்றில் ஒரு பங்கெனக் குறைப்பது, உள் எரிப்பு வண்டிகளின் வளர்ச்சியை நிறுத்துவது.

சிங்கப்பூரில் உங்களை மகிழ் விக்க வேறு சில சுற்றுச்சூழல் திட்டங்கள்: ஒவ்வொரு துளி நீரையும் மறுபடி பயன்படுத்த நீர் மறு சுழற்சி, எரிக்கப்பட்ட குப்பையைக் கட்டுமானத்துக்கான மண்ணாக மாற்றுதல், நடப்போர், மிதிவண்டி ஓட்டுவோருக்கெனக் கார்கள் இல்லாத (தரையடிச் சாலைகளைக் கொண்ட) நகர மையங்கள், உள்ளூர் உணவு உற்பத்தியைப் பெருக்க, நெட்டுக்குத்துப் பண்ணைகள், காற்றுப் பாதைகளை வலுவாக்க, முன்னேற்றத்துக்கான நுண் காலநிலை மாதிரியாக்கல், கட்டடங்களை இயற்கைக் காற்றோட்டத்துக்கேற்ப அமைத்தல் மற்றும் பசுமைக்கான இடங்களை அடையாளம் காணுதல்.

சிங்கப்பூர் தன்னுடைய பசுமைப் பொருளாதாரத்தை வளர்ச்சியைத் தூண்டுகிற, புதிய பணி வாய்ப்புகளை உருவாக்குகிற நன்மையாகப் பார்க்கிறது. மே 25 முதல் 29 வரை நீங்கள் இந்தப் பூங்காவில் நகரத்துக்கு வரும்போது, சுற்றுச்சூழலின் நண்பராக, உலகத்துடன் நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ள உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org

**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| 2981 | செங்குட்டுவன் G |
| 2982 | ராகவன் S |
| 3000 | ஆனந்த ஜோதி R |
| 3011 | ஜீதேந்தர் குப்தா |
| 3012 | ப்ரியதோஷ் குப்தா |
| 3020 | சுப்பாராவ் ராவுரி |
| 3030 | ஆஷா வேணுகோபால் |
| 3040 | ரீத்து க்ரோவர் |
| 3053 | பவன் கண்டேல்வால் |
| 3055 | மேஹுல் ரத்தோட் |
| 3056 | நிர்மல் ஜெயின் குனாவத் |
| 3060 | நிஹிர் தாவே |
| 3070 | விப்பன் பாசின் |
| 3080 | அருண் குமார் மோங்கியா |
| 3090 | கன்ஷியாம் கன்சல் |
| 3100 | அஷோக்குமார் குப்தா |
| 3120 | சுனில் பன்சல் |
| 3131 | மஞ்சு ஃபாட்கே |
| 3132 | ஸ்வாதி ஹெர்கல் |
| 3141 | அருண் பார்கவா |
| 3142 | மிலின்த் குல்கர்னி |
| 3150 | சங்கர் ரெட்டி |
| 3160 | மணிக் பவார் |
| 3170 | நாசிர் போசத்வாலா |
| 3181 | கேஷவ் H R |
| 3182 | கீதா B C |
| 3191 | உதயகுமார் பார்கவா |
| 3192 | ஸ்ரீனிவாச மூர்த்தி V |
| 3201 | விஜய்குமார் T R |
| 3203 | Dr S சுந்தர்ராஜன் |
| 3204 | Dr சேது ஷிவ்ஷங்கர் |
| 3211 | Dr G சுமித்ரன் |
| 3212 | முத்தையா பிள்ளை R |
| 3231 | பரணிதரன் P |
| 3232 | ரவி ராமன் |
| 3240 | நிலேஷ் குமார் அகர்வால் |
| 3250 | பகாரியா S P |
| 3261 | மஞ்சித் சிங் அரோரா |
| 3262 | ஜெயஸ்ரீ மோஹன்டி |
| 3291 | ஹுராலால் யாதவ் |

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.
**ஆசிரியர்: ரஷீதா பகத்.**

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரைகளை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| அனிருதா ராய்சௌத்ரி<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3291 |
| T N சுப்ரமணியன்<br>RI இயக்குனர் | RID 3141 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF அறங்காவலர்<br>துணை தலைவர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2023–24)

| | |
|---|---|
| ஸ்வாதி ஹெர்கல்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3132 |
| ஹீராலால் யாதவ்<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3291 |
| முத்தையா பிள்ளை R<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3212 |
| மிலின்த் குல்கர்னி<br>ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3142 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*




இதழ்





# உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்போம்!

நமது சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான உங்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் கடமை உணர்வுக்கு எனது ஆழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் உங்கள் சேவை மற்றும் அயராத முயற்சிகள் எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல.

தூய்மையான குடிநீர், இளைஞர்கள் வளர்ச்சி, நிவாரண உதவிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் அர்த்தமுள்ள மாற்றத்தை கொண்டு வருவதில் கூட்டு நடவடிக்கையின் சக்தியை நீங்கள் நிரூபித்துள்ளீர்கள். வெவ்வேறு பின்னணி மற்றும் கலாசார பாரம்பரியங்களைக் கொண்ட மக்களை ஒன்றிணைப்பதில் உங்களின் திறன் ரோட்டரியின் மதிப்பிற்கும், வலிமைக்கும் சான்றாகும்.

அமைதியை வளர்ப்பதற்கும், கல்வியை மேம்படுத்துவதற்கும், போலியோவை ஒழிப்பதற்கும் உங்கள் அர்ப்பணிப்பு உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற தனிநபர்கள் மற்றும் சமூகங்களிடையே ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. TRF மற்றும் அதன் உன்னதமான காரணங்களுக்கான உங்கள் அர்ப்பணிப்பு வாய்ப்பு களை உருவாக்குவதற்கும் தேவைப் படுபவர்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்த உதவியது.

நெருக்கடிகள் மற்றும் நிச்சயமற்ற காலங்களில் இயற்கை பேரழிவுகள், மோதல்கள் மற்றும் மனிதநேயம் தேவைப்பட்ட இடங்களில் நமது அமைப்பு நம்பிக்கையின் ஒளியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளித்து வந்துள்ளது. இக்கட்டான நேரத்தில நீங்கள் தயார் நிலையில் முன்னோக்கிச் சென்று உதவிக்கரம் நீட்டியது உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

இந்த உறுப்பினர் மாதத்தில் ரோட்டேரியனாக இருப்பதன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள அதிக நபர்களை நாம் கொண்டுவர வேண்டும். நமது அமைப்புக்கு நல்ல குடிமக்களை அழைத்து வரும்போது நமது நல்ல செய்கைகளை அவர்களுக்கு எடுத்துரைப்போம். புதிய நண்பர்களுடன் சேர்ந்து சங்கத்தையும் அமைப்பையும் பலப்படுத்துவோம். ரோட்டரியின் நெறிமுறைகளையும், நன்மதிப்பையும் அவர்கள் மனதில் புகுத்துவோம். வெறும் உறுப்பினர்கள் என்றில்லாமல் அவர்களை ரோட்டேரியன்களாக உருவாக்குவோம். நிலையான வளர்ச்சிக்கு தக்கவைத்தல் என்பது முக்கியமானது. ரோட்டேரியன்களை எப்போதும் எதிலாவது ஈடுபாட்டுடன் வைத்திருப்பது அவசியமானது. சங்கத்துக்கு புதிய உறுப்பினர்களை சேர்ப்பதாக இருந்தாலும் சரி, புதிய பகுதியில் புதிய சங்கத்தை உருவாக்குவதாக இருந்தாலும் சரி நாம் நெறிமுறையுடன் செயல்படுவோம். வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. அதைப் பயன்படுத்தி நிலையான வளர்ச்சியை உறுதி செய்வது நம்கையிதான் உள்ளது.

உங்களது சேவை, தாராளமனப்பான்மை மற்றும் தன்னலமற்ற சேவைக்கான அர்ப்பணிப்பு நம் அனைவருக்கும் வழிகாட்டியாக இருக்கும். உங்கள் செயல்கள் எங்களை மேலும் சிறப்பாகச் செயல்படத் தூண்டுகிறது. நாம் ஒன்றாக தொடர்ந்து ஈடுபட்டு மாற்றத்தை உருவாக்குவோம். உலகில் நம்பிக்கையை ஏற்படுத்துவோம்.

**TN சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25

# எதிர்காலத்தை எட்டிப்பார்ப்போம்



இந்த ஆண்டு, நீங்கள் அனைவரும் ரோட்டரி அறக்கட்டளையைப்பற்றிப் பெரிதாக எண்ணவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம் இலக்குகளை எட்ட, நாம் புதுமையாகச் சிந்திக்கவேண்டும்.

அறக்கட்டளையால் ஆதரிக்கப்படும் திட்டங்களைப்பற்றிப் பெரிதாகச் சிந்தியுங்கள். உங்கள் சங்கம் ரோட்டரி அறக்கட்டளை மாவட்ட நல்கை அல்லது பன்னாட்டு நல்கையில் பங்குபெறவில்லை என்றால், இந்த ஆண்டு அதைச் செய்யுங்கள். rotary.org/showcase என்ற இணையத் தளத்தில் உள்ள ரோட்டரி காட்சிப் பக்கத்தைப் பாருங்கள், அல்லது, உங்கள் சங்கத்தினரை உங்கள் மாவட்ட ரோட்டரி அறக்கட்டளைத் தலைவருடன் பேசச் சொல்லுங்கள்.

இந்த ஆண்டு, நம் இளம்பிள்ளைவாத எதிர்ப்பு நிதி திரட்டலைப்பற்றியும் பெரிதாகச் சிந்திப்போம். 24 அக்டோபருக்கான உலக இளம்பிள்ளைவாத நிதி திரட்டலுக்கு நீங்கள் இன்னும் திட்டமிடவில்லை என்றால், அதைத் தொடங்குங்கள்.

ஒவ்வோர் ஆண்டும், ரோட்டரி அறக்கட்டளை உறுப்பினரால் வழிநடத்தப்படுகிற, வெற்றியைக் காண்பித்துள்ள, மூன்று முதல் ஐந்து ஆண்டுக் காலகட்டத்தில் இன்னும் கூடுதல் மக்களைச் சென்றடையக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ள ஒரு பெரிய அளவு (Programs of Scale) திட்டத்துக்கு $2 மில்லியன் வழங்குகிறது.

நம் பெரிய அளவுத் திட்டங்கள் பெரிதாகச் சிந்தித்தலின் எடுத்துக்காட்டுகள். இதன் மூலம், ரோட்டரியும் அதன் அறக்கட்டளையும் இன்னும் கூடுதல் இடங்களில் இன்னும் கூடுதலான மக்களை அணுகி, அவர்களுக்கு உதவலாம்.

உலகை இன்னும் மேம்பட்ட இடமாக மாற்றும் நம் முயற்சிகள் நமக்குப் பிறகும் தொடரவேண்டும் என்பதை நினைவில் கொள்வோம். ரோட்டரியின் நன்கொடை நிறுவலுக்கு 2025க்குள் $2.025 பில்லியனைப் பெற நாம் பணியாற்றிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், ரோட்டரி நன்கொடை நிறுவலுக்கு ஒரு பரிசு அல்லது வாக்குறுதியை அளிப்பதன்மூலம் உங்கள் அடையாளத்தை உறுதியாக்குவதுபற்றி எண்ணுங்கள். இதன்மூலம், இன்றைக்கு நாம் பல வழிகளில் நேர்விதமான மாற்றத்தை உருவாக்கிக்கொண்டிருப்பது போல், ரோட்டரியின் வருங்காலத் தலைமுறைகளும் செய்யலாம், அதற்கான மிகச் சிறந்த நிதி வளங்கள் அவர்களுக்குக் கிடைப்பதை இது உறுதிசெய்யும்.

**பேரி ரசின்**
TRF அறங்காவலர் தலைவர்

# 2024 Rotary Convention @ Singapore



# ஒரு புதிய தொடக்கம்

கோர்டன் மெக்கினலி அவர்களிடம் RI தலைவர் பொறுப்பை ஒப்படைத்தபின், ஜூலை 1 அன்று ஜெனிஃபர் ஜோன்ஸ் ஃபேஸ்புக்கில் பதிவு செய்த குறிப்பு, இதோ:

RI தலைவராக என் ஆண்டு நிறைவடைந்துவிட்டது. 2022–23 ரோட்டரி ஆண்டை வழிநடத்தும் பொறுப்பை என்னை நம்பி வழங்கியதற்கு உங்களுக்கு நன்றி. கார்டன் மெக்கினலி நான் இந்தப் பொறுப்பை வழங்க மிகச் சிறந்த நபர்.

இந்தக் கணம் கசப்பு கலந்த இனிப்பு என்று பலர் சொல்வார்கள். ஆனால், இங்கு கசப்பு ஏதும் இல்லை, இனிப்பு மட்டும்தான். இந்த ஆண்டு நாம் சாதித்தவற்றை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். நாம் ஒன்றாகச் சேர்ந்து, அக்கறையான, பரிவான, இன்னும் சமமான உலகைக் கற்பனை செய்தோம். நாம் செய்ய நினைத்த அனைத்தையும் நாம் சாதித்தோம் என்று நான் நம்புகிறேன். ரோட்டரியைக் கற்பனை செய்த உங்கள் முயற்சிகள் அனைத்துக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. உலகில் தொடர்ந்து நம்பிக்கையை உருவாக்குவோம்!■



*இவான்ஸ்டனில் RI தலைமையகத்தில் IPRIP ஜெனிஃபர் ஜோன்ஸ் அவர்களுடன் RI தலைவர் கோர்டன் மெக்கினலி.*

Rotary PEOPLE OF ACTION

# கொழும்பு மருத்துவமனையில் ரோட்டரி இந்தியா அமைத்துள்ள ICU

ரோட்டரி செய்திக்குழு



*(இடமிருந்து) RC காரமடை தலைவர் மகேஷ், IPDG இளங்குமரன், அவர் மனைவி பிரேமா, RC குன்னத்தூர் தலைவர் பார்த்திபன், RC அவினாசி தலைவர் பூபதி, PDG A கார்த்திகேயன் மற்றும் RC வட்டலா தலைவர் ஜெயபாலன் ஒரு தாய் மற்றும் அவரின் குழந்தையுடன் கொழும்பு மருத்துவமனையில்.*

இலங்கையில் உள்ள கொழும்பிலிருந்து 18கிமீ தொலைவில், கம்பஹா மாவட்டத்திலுள்ள ரகமா-வில் இருக்கும் கொழும்பு வடக்கு கற்பித்தல் மருத்துவமனையில் ஓர் உயர் சார்பு ICUவை அமைக்க காரமடை ரோட்டரி சங்கம், RID 3203 மற்றும் RC வட்டலா, RID 3220, இலங்கை உதவியுள்ளன. RID 3203ன் குன்னத்தூர், அவினாசி மற்றும் திருப்பூர் நார்த் ரோட்டரி சங்கங்களும் இந்தத் திட்டத்தில் பங்கேற்றன. இது பற்றித் திட்டத் தலைவர் மகேஷ் பேசுகையில், “RID 3203 பன்னாட்டு நல்கை இல்லாமல் நடத்தியுள்ள முதல் பன்னாட்டுச் சேவைத் திட்டம் இது’’ என்றார்.

இந்த ICU இந்த மருத்துவமனையின் தாய்மார்கள் நலப் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது. இது ஆண்டு தோறும் குறைந்தது 2,000 தாய்மார்கள், குழந்தைகளைத் தீவிரச் சூழல்களிலிருந்து காப்பாற்றும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வளாகத்தின் தொடக்கத்தில் IPDG B இளங்குமரன், PDG A கார்த்திகேயன், DGN தனசேகர் பங்கேற்றார்கள். RID 3220 IPDG புபுடு டெ ஜோய்சா மற்றும் DG ஜெரோம் ராஜேந்திரம் இந்திய ரோட்டரியன்களுடைய தாராளமான உதவிக்கு நன்றி தெரிவித்தார்கள். RC காரமடை தலைவர் மகேஷ், RC வட்டலா தலைவர் ஜெயபாலன் சகோதரச் சங்க ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்கள்.■

# பெங்களூரு சங்கம் ரூ.4 கோடியில் 214 அங்கன்வாடிகளை சீரமைத்துள்ளது

ரஷீதா பகத்



இந்த நாட்களில் ரோட்டரி பற்றிய பேச்சு எல்லாம் ஒரு நிலையான பெரிய திட்டத்தை உருவாக்கி, செயல்படுத்தி மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களிடம் ரோட்டரி பற்றிய எண்ணத்தை உயர்த்துவது எப்படி என்பது பற்றித்தான். ரோட்டரி மாவட்டம் 3192-க்கு உட்பட்ட பெங்களூரு இந்திராநகர் ரோட்டரி சங்கம், கர்நாடகத்தில், பெங்களூர் ஊரக மாவட்டங்களான ஹொசக்கோட்டை, கோலார் மன்றும் அனேக்கல் தாலுகாவில் 214 அங்கன்வாடிகளை சீரமைத்து மீண்டும் உயிர்கொடுத்துள்ளது. இவையெல்லாம் 30 முதல் 80 கி.மீ. சுற்றளவுக்குள் இருப்பவை.

இந்த திட்டம் 2017–18 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. முதல் கட்டமாக ரோட்டரி சங்கம் 10 அங்கன்வாடிகளை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொண்டது. அதன் பின் இந்த ஆண்டு இறுதிக்குள் 200 அங்கன்வாடிகளை புதுப்பிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. எனினும் ரூ.4 கோடியில் சுமார் 214 அங்கன்வாடிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு பெங்களூரு இந்திரா நகர் ரோட்டரி சங்கத்தால் அப்போது இருந்த தலைவரால் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தை அடுத்தடுத்து வந்த தலைவர் தொடர்ந்து நிறைவேற்றியது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. இது தொடர்பாக 151 உறுப்பினர்களைக் கொண்ட சங்கத்தின் PDG சுரேஷ் ஹரி கூறுகையில், எங்களிடம் ஒரு திட்டக் கண்ணோட்டம் உள்ளது. திட்டக்குழு ஆலோசனை நடத்தி பெரிய நீண்டகால நிலையான திட்டங்களை பரிந்துரைக்கும். அதை ஏற்றுக்கொண்டு நாங்கள் செயல்படுத்துவோம். பெரிய திட்டங்கள்தான் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். அவைதான் எங்கள் குறிக்கோள் என்றார் அவர்.

இந்த திட்டத்திற்கு பின்னணியாக இருந்து செயல்பட்டவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஃபஸல்

---

*பள்ளியை புதுப்பித்ததைவிட அங்கன்வாடிகளை சீரமைத்தது எங்களுக்கு அதிக உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. 2027–28-க்குள் 500 அங்கன்வாடிகளை புதுப்பிக்க திட்டமிட்டுள்ளோம்.*

**ஃபஸல் உர் ரஹ்மான்**
முன்னாள் தலைவர்
RC பெங்களூர் இந்திரா நகர்

---




உர் ரஹ்மான். ஹொசக்கோட்டை தாலுகாவில் சென்னஹள்ளிபுரா கிராமத்தில் முதல் முதலாக பணியை தொடங்கியபோது அவர் சங்கத்தின் செயலாளராக இருந்தார். இங்கு பெங்களூரு இந்திரா நகர் ரோட்டரி சங்கம் மருத்துவ முகாம், பல்மருத்துவ முகாம், வாராந்திர மருத்துவ முகாம், கால்நடை மருத்துவ முகாம், ஏழை பெண்களுக்கு பசுமாடு வழங்குதல், சூரியசக்தி மின்விளக்குகள் அமைத்தல், பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தியுள்ளது.

2016–17-ஆம் ஆண்டில் அவர் சங்கத்தின் செயலாளராக இருந்தபோது அந்த கிராமத்தில் ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் அரசு பள்ளியை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. சங்கத்தின் சமூக சேவை திட்ட இயக்குநர் என்ற முறையில் நான் அந்தப் பள்ளிக்கு அடிக்கடி சென்று புதுப்பிக்கும் பணியை பார்வையிட்டதுண்டு. அந்த கிராமத்துப் பள்ளியின் ஒரு மூலையில் ஒரு கட்டடம் பாழடைந்த நிலையில் இருந்தது. அதுபற்றி விசாரித்த போது அது ஒரு அங்கன்வாடி என்று தெரிவித்தனர். சுற்றுச்சுவர்கள் பெயர்ந்துவிழும் நிலையில் இருந்த்து. அதன் மேற்கூரை ஒழுகும் நிலையில் இருந்தது. தரைகள் குண்டும் குழியுமாக இருந்தன என்று அவர் நினைவுகூர்ந்தார்.

மிகவும் மோசமான இருள்சூழ்ந்த அந்த கட்டடத்தில் 3 முதல் 6 வயது வரையிலான குழந்தைகள் நாள் முழுவதும் இருக்கவேண்டிய சூழ்நிலை இருந்தது. அங்கன்வாடி கழிப்பறையில் குழாய்களோ, குடிநீர் இணைப்போ இல்லாததால் பயன்பாட்டில் இல்லை. குழந்தை களுக்கு சுகாதாரமான கழிப்பிட வசதிகளுடன் சுகாதார சூழலை ஏற்படுத்த விரும்பிய நாங்கள் பள்ளியை புதுப்பிப்பதுடன் அங்கன்வாடியையும் சீரமைக்க முடிவு செய்தோம்.

தொடக்க நிகழ்வில் அங்கன் வாடியில் சேர்ந்துள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் கிராமத் தினரிடமிருந்து கிடைத்த வரவேற்பு எங்களை உற்சாகப்படுத்தியது. பள்ளியை புதுப்பித்ததைவிட அங்கன் வாடிகளை சீரமைத்தது எங்களுக்கு அதிக உற்சாகத்தையும் மகிழ்ச் சியையும் ஏற்படுத்தியது. இதை யடுத்து நூறு அங்கன்வாடிகளை புதுப்பிக்க முடிவு செய்தோம்.

எனவே அங்கன்வாடிகள் சீரமைப்புத் திட்டத்தை கையில் எடுத்துக் கொண்டோம். இப்போது அங்கன்வாடிகளை புதுப்பிப்பது எங்கள் சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் விரும்பிச் செய்யும் திட்டமாக மாறிவிட்டது.

இந்த சமயத்தில் அங்கன்வாடி என்றால் என்ன? அதன் செயல் பாடுகள் என்ன? அவை கிராமத்தில் அமைந்துள்ளதன் முக்கியத்துவம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வோம். இது தொடர்பாக சங்கத்தின் சமூக சேவை திட்டங்களின் முன்னாள் இயக்குநர் நரசிம்மன் கண்ணன் கூறுகையில், இது தாய் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு மையம். 1970-களில் மத்திய அரசின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்பு திட்டத்தின்

கீழ் உருவாக்கப்பட்டதுதான் அங்கன்வாடிகள். குழந்தைகளின் பசியை போக்கவும், அவர்களுக்கு ஊட்டச்சத்து கிடைக்கச் செய்வதும் தான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கர்நாடகத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடிகள் 3 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு பல்வேறு வசதிகளை செய்து தருகின்றன. கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களையும் பராமரித்து வருகிறது.

தங்களது சங்கம் புதுப்பித்துள்ள 214 அங்கன்வாடிகளில் 25 அல்லது 26 அங்கன்வாடிகள் பெங்களூரு நகரப்புற பகுதிகளில் அமைந்துள்ள சேரிகளில் உள்ளது. 175 அங்கன் வாடிகள் மேற்குறிப்பிட்ட மூன்று தாலூகாக்களில் உள்ளன. பொதுவாக 1500 மக்கள் தொகை கொண்ட இடத்தில் ஒரு அங்கன்வாடி செயல்பட வேண்டும். 5,000 பேருக்கு மேல் வசிக்கும் பெரிய கிராமங்களாக இருந்தால் அங்கு மூன்று அங்கன்வாடிகள் இருக்கலாம் என்பதுதான் விதி என்று தெரிவித்தார் ரஹ்மான்.

உதாரணமாக பெங்களூரு விலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள சூலிபெலி என்னும் சிறிய நகரத்தில் 9 அங்கன்வாடிகள் உள்ளன. அவற்றில் நாங்கள் 6 அங்கன்வாடிகளை புதுப் பித்துள்ளோம் என்கிறார் ரஹ்மான். சராசரியாக ஒரு அங்கன் வாடியை புதுப்பிக்க ரூ.2 லட்சம் செலவாகிறது. பெரும்பாலும் சுவர்களுக்கு வர்ணம் பூசி, கழிப்பறைகளுக்கு குழாய் வசதி செய்வதற்கும், 2 குடிநீர் தொட்டிகள் அமைத்து மின்சார மோட்டார் பொருத்துவதற்கும் தான் முக்கியமாக பணம் செலவாகிறது.

அங்கன்வாடியை கட்டும்போது அரசு கழிப்பறை வசதியும் செய்து கொடுத்துள்ளது. ஆனால், ஊரகப் பகுதிகளில் தண்ணீர் வசதி இல்லாததால் குழந்தைகள் திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்துகின்றனர். இதனால் கழிப்பறை குப்பைபோடும் இடமாக







PDG சுரேஷ் ஹரி (இடமிருந்து 4வது), அவர் மனைவி அனிதா, திட்டத்தலைவர் ஃபஸல் உர் ரஹ்மான் (இடதிலிருந்து 8வது) மற்றும் சங்கத்தினர் ஹொசக் கோட்டையிலுள்ள ஒரு அங்கன்வாடியில். சிட்ரிக்ஸ் R&D இந்தியா இயக்குனர் குமார சிவண்ணா (வலதிலிருந்து 6வது) அவர்களும் புகைப்படத்தில் உள்ளார்.

மாறிவிட்டது. இப்போது அந்த கழிப் பறைகள் புதுப்பிக்கப்பட்டு குழாய் இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. நவீன உபகரணங்களும் பொருத்தப் பட்டுள்ளன. அவற்றை குழந்தைகள் பயன்படுத்துகின்றனர். மேலும் உணவு தயாரிக்கும் சமையலறையில் குடிநீர் குழாய் இணைப்புடன் தொட்டியும் கட்டித்தரப்பட்டுள்ளது. இவை சமையலறையை சுத்தமாக வைத்திருக்க உதவுகின்றன.

அங்கன்வாடி என்பது அடிப் படையில் 3 முதல் 6 வயது வரையிலான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை பராமரிக்கும் இடமாகும். இங்கு வரும் குழந்தைகளுக்கு தினசரி ஊட்டச் சத்து வழங்கப்படுகிறது. மேலும் குழந்தைகளுக்கு தமிழ், ஆங்கில எழுத்துகள், எண்கள், வண்ணங்கள், பறவைகள் மற்றும் விலங்குகளின்

## அரசியல்வாதிகளை இழுக்காதீர்கள்! ரோட்டேரியன்களுக்கு எம்.எல்.ஏ. சொன்ன அறிவுரை

ஃபஸல் உர் ரஹ்மான் ஒரு சுவாரஸ்யமான தகவலை பகிர்ந்து கொள்ள விரும்புகிறார். 2018–19 ஆம் ஆண்டு ரோட்டேரியன்கள் இந்த திட்டத்தை செயல்படுத்த தொடங்கிய போது ஹொசக்கோட்டையில் 10 அங்கன்வாடிகள் புதுப்பிக்கப்பட்டன. இந்த தகவல் தாலுகா முழுவதும் பரவி ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. நாங்கள் இந்த அங்கன்வாடிகளுக்குச் செல்லும்போதெல்லாம் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த அங்கன்வாடி பணியாளர்கள் எங்களிடம், எப்போது எங்கள் அங்கன்வாடியை புதுப்பித்து தரப் போகிறீர்கள் என்று ஆர்வமுடன் கேட்டனர். இந்த தகவல் எம்.எல்.ஏ.வுக்கு எட்டியதும் ஒரு நாள் காலை மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறையிடமிருந்து எங்களுக்கு அழைப்பு வந்தது. எம்.எல்.ஏ. பணிகளை நிறுத்தச் சொல்கிறார். என்னிடம் சொல்லாமல் இந்த பணியை எப்படி அனுமதித்தீர்கள் என்று கேட்கிறார் என்று கூறினர். எம்.எல்.ஏ. எங்களை சந்திக்க விரும்புவதாகவும் தெரிவித்தனர். அவரை சந்திக்க நேரமும் குறிக்கப்பட்டது.

2018–19ல் நான் செயலாளராகவும், எம்.ஜெகதீஷ் சங்கத்தின் தலைவராகவும் இருந்தோம். நாங்கள் எம்.எல்.ஏ.வை சந்தித்தோம். ரோட்டரி பற்றிய தகவல்கள், அதன் செயல்பாடுகள் செய்து வரும் பணிகள், அங்கன்வாடிகன் புதுப் பிக்கப்பட்ட புகைப்படங்களை அவரிடம் காட்டினோம். அடுத்த இரண்டு நிமிடங்களில் அவரது மனோநிலையே மாறிவிட்டது. நீங்கள் உங்கள் பணியைத் தொடருங்கள். உங்களுக்கு அரசு ஏஜென்சிகள் போதுமான ஒத்துழைப்பை அளிக்கும் என்றார்.

இதில் சுவாரஸ்யம் என்ன வென்றால், அடுத்த அங்கன்வாடி புதுப்பிக்கப்பட்டு திறப்பு விழாவுக்கு எம்.எல்.ஏ.வை அழைத்தபோது அவர், நீங்கள் அதை மட்டும் செய்யாதீர்கள். நீங்கள் நல்லதொரு பணியை செய்து வருகிறீர்கள். இதில் அரசியல்வாதிகளை இழுக்காதீர்கள் என்று கூறினார். அதன் பிறகு எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை. அரசு இயந்திரங்களும் எங்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கின்றன.



ஒரு அங்கன்வாடியில் புதுப்பிக்கப்பட்ட சமையலறை.

பெயர்கள் என அடிப்படையான விஷயங்கள் சொல்லித்தரப்படுகின்றன. இங்கு வரும் குழந்தைகளுக்கு பால், பிஸ்கட் மற்றும் மதிய உணவு கொடுக்கப்படுகிறது. அங்கன்வாடியில் இரண்டு ஊழியர்கள் இருப்பார்கள். ஒருவர் ஆசிரியர். மற்றொருவர் உதவியாளர். அவர் உணவு தயாரிப்பார். மாதம் ஒரு முறை 6 மாதங்கள் முதல் 3 வயது வரையிலான குழந்தைகள் வருவார்கள். அவர்களின் உயரம், எடை மற்றும் பொது சுகாதாரம் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடு வராது என்றால் அவை பதிவு செய்யப்படும். இந்த குழந்தைகளுக்கு வீட்டில் மதிய உணவு தயாரிக்கத் தேவையான ரேஷன் பொருள்கள் தாய்மார்களிடம் வழங்கப்படும்.

இது தவிர கர்ப்பிணிப் பெண்களும் பாலூட்டும் தாய்மார்களும் அங்கன் வாடிக்கு வந்து மதிய உணவு பெற்றுக் கொள்ளலாம். அல்லது அவர்கள் டிபன் மற்றும் சூடான உணவுகளை வழங்கலாம் என்று அவர் விளக்கினார். அரசு அங்கன்வாடியில் இது போன்ற சேவைகள் வழங்கப்படுவது குறித்து நான் ஆச்சரியத்தை வெளிப்படுத்திய போது கர்நாடகாவில் மட்டுமே கர்ப்பிணி பெண்களுக்கு அல்லது பாலூட்டும் தாய்மார்களுக்கு இந்த சேவை கிடைக்கும் என்று ரஹ்மான் கூறினார். இந்த திட்டத்தின் நான் ஈடுபட்டுள்ளதால் நான் கடந்த ஆறு வருடங்களில் பல அங்கன்வாடிகளுக்குச் சென்று இருக்கிறேன். இந்த திட்டம் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது எனது கருத்தாகும். இதற்கான நிதியில் 90 சதவீதத்தை மத்திய அரசும், மீதமுள்ள 10 சதவீத நிதியை மாநில அரசும் வழங்கு கின்றன. ஒவ்வொரு மாதத்தின் முதல்நாள் அங்கன்வாடிகளுக்குத் தேவையான பொருள்கள் வந்துசேர்ந்துவிடும் என்றார்.

உணவின் தரமும் நன்றாக இருக்கும். நான் இங்கு பலமுறை சாப்பிட்டு இருக்கிறேன். குழந்தைகளுக்கு மதிய உணவாக சாம்பார், காய்கறிகளுடன் கூடிய உணவு வழங்கப்படுகிரது. அவை சுவையாக இருக்கும். வாரத்தில் ஒருநாள் புலவ் பரிமாறப்படுகிறது. பண்டிகை நாட்களில் அல்லது ஏதாவது விசேஷமான நாட்களில் கேசரி அல்லது ஏதாவது ஒரு ஸ்வீட் வழங்கப்படும். இங்குள்ள அங்கன்வாடிகள் திங்கள் முதல் சனிக்கிழமை வரை செயல்படும்.



## உண்மையான சீரமைப்பு பணிகள்

*புதுப்பித்தலின் போது அங்கன் வாடிகளில் அறைகளில் புதிய நவீன டைல்ஸ்கள் பொருத்தப் பட்டுள்ளன. சமையலறையில் மேடைகள் அமைக்கப்பட்டு அருகிலேயே கைகழுவும் சிறிய தொட்டிகள் கட்டித்தரப்பட்டுள்ளன. சாமான்கள் வைக்கும் அறையில் அலமாறிகள் அமைக்கப்பட்டுள்ளன. தரைத்தளத்தில் தண்ணீர் தொட்டி மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு குழாய் இணைப்புகள் கொடுக்கப் பட்டுள்ளன. கழிப்பறைகள் செராமிக் டைல்ஸ்கள் பதிக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றன. சமையலறை மற்றும் கழிப்பறை களில் தண்ணீர் வெளியே செல்வதற்கு வழி செய்யப் பட்டுள்ளது. அங்கன்வாடியின் மேற்கூரைகள் மழைபெய்தால் ஒழுகாதவாறு வாட்டர்புரூஃபிங் செய்யப்பட்டுள்ளன. குரங்குகள் வருவதை தடுக்க ஜன்னல்களில் வலைகள் பொருத்தப்பட்டுள்ளன. ஒவ்வொறு அறையிலும் மின்சார வயர்கள் புதுப்பிக்கப் பட்டு விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன. அறையின் உட்புற, வெளிப்புற சுவர்கள் மற்றும் ஜன்னல்களில் வர்ணம் பூசப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றன என்றார்.*








அங்கன்வாடி சீரமைப்புத் திட்டத்தின் சங்கத்தின் முக்கிய குழு ஈடுபட்டுள்ளது. இந்த திட்டத்தை மேற்பார்வையிடும் தாய்-சேய் பராமரிப்புக் குழுவின் தலைவராக இருக்கும் சங்கத்தின் முன்னாள் தலைவர் கூறுகையில் நாங்கள் ஆறுபேர் குழுவில் தவறாமல் ஈடுபட்டு வருகிறோம் என்றார்.

இந்த குழு திட்டத்திற்கு நிதி திரட்டும் பொறுப்பையும் ஏற்றுள்ளது. கார்ப்பொரேட் நிறுவனங்களுடன் தொடர்பில் உள்ளது. சங்கத்தின் உறுப்பினர்கள் தாராளமாக நன்கொடை அளித்து வருகின்றனர். குறைந்தது 20 உறுப்பினர்கள் சேர்ந்து ஒன்று அல்லது இரண்டு அங்கன்வாடிகளை புனரமைக்க ரூ.2 முதல் 4 லட்சம் வரை நிதியுதவி அளித்துள்ளனர். ஒரு உறுப்பினர் குறிப்பாக சுப்ரஜித் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைமை இயக்குநரும், சங்கத்தின் முன்னாள் தலைவருமான அஜித் ராய், தமது சுப்ரஜித் அறக்கட்டளை மூலம் 69 அங்கன்வாடிகளை புதுப்பிக்க நிதியுதவி செய்துள்ளார். மேலும் அவரது நிறுவனத்தின் கார்ப்பொரேட் நிறுவனங்களின் பொறுப்புணர்வு நிதித்திட்டம் மூலம் சர்வதேச மானிய உதவி மூலம் 20 அங்கன்வாடிகளை புதுப்பிக்க நிதி வரவிருக்கிறது. எனவே இத்திட்டத்திற்கான ரூ.4 கோடியில் 50 சதவீத நிதி எங்கள் சங்க உறுப்பினர்கள் மூலமே கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் கான்ஃபின் ஹோம்ஸ் நிறுவனமும் எங்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது. 31 அங்கன் வாடிகளை புதுப்பிக்க இதுவரை ரூ.62 லட்சம் நிதியுதவியுள்ளது. சிட்ரிக்ஸ R&D இந்தியா நிறுவனம் 31 அங்கன்வாடிகளை புதுப்பிக்க ரூ.60 லட்சம் வழங்கியுள்ளது.

எதிர்காலத்திலும் இந்த திட்டம் தொடரும் என்பதில் சங்கத்தின் தலைவர்கள் உறுதியாக உள்ளனர். சங்கத்தின் தலைவர் ஏற்கெனவே இத்திட்டத்தின் மீது ஆர்வம் காட்டி அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறார். புதிதாக பொறுப்பேற்கவுள்ள தலைவர்களும் இத்திட்டத்தை தொடருவார்கள் என்று நம்புகிறோம். புதிய தலைவர்கள் பொறுப்புக்கு வந்ததும் புதுப்பிக்கப் படும் அங்கன் வாடிகளின் எண்ணிக்கையை 2027–28-க்குள் 500ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளோம் என்று பெருமையுடன் குறிப்பிட்டார் ரஹ்மான். ■

# இவான்ஸ்டனில் மறக்கமுடியாத நாள்

கிஷோர் ராத்தி

போலந்து, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த ரோட்டேரியன்களுடன் ஜூன் 30-ஆம் தேதி அமெரிக்காவின் இவான்ஸ்டனில், ரோட்டரி தலைமையகத்தில் உள்ள ரோட்டரி மையத்தில் நான் இருந்தேன்.

எங்கள் வருகையின் சிறப்பு அம்சம் என்னவெனில் முன்னாள் தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், உள்வரும் தலைவர் கோர்டன் மெக்கினலியிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும் நிகழ்ச்சியை காண்பதுதான். நிகழ்வில் ஜெனிஃபர் ஜோன்ஸ், கோர்டன் மெக்கினலியுடன் சேர்ந்து தமது அலுவலகத்திலிருந்து தலைவர் அலுவலகத்துக்கு சென்றார். அங்கு சென்ற பிறகு புதிய தலைவர் 2023–2024 ஆம் ஆண்டுக்கான கருபொருளை பகிர்ந்து கொண்டார். உலக மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துங்கள் என்பதுதான் அது. அவரது கொள்கைத் திட்டம் போட்டோ பிரேமாக வைக்கப்பட்ட பிறகு, ஜெனிஃபர் ஜோன்ஸின் பணி நிறைவை ஷாம்பெயினுடன் கொண்டாடப்பட்டது.

பால் ஹாரிஸ் சிலைக்கு மரியாதை செலுத்தி, ரோட்டரி இயக்கத்தின் நோக்கம், கடமை, செயல்பாடுகள் மற்றும் உலகம் முழுவதும் சமூக மக்களிடம் ஏற்படுத்தி வரும் தாக்கம் இவை பற்றி ஜினா கிளார்க் விளக்கமாக உரையாற்றியதுடன் எங்கள் சுற்றுப் பயணம் தொடங்கியது. ரோட்டரி நிறுவனரின் முதல் கூட்டம் நடந்த அறையின் மாதிரியை நாங்கள் பார்வையிட்டோம்.

பின்னர் நாங்கள் 15-வது தளத்துக்குச் சென்று பல்வேறு காரணங்களுக்காக தாராளமாக நன்கொடையளித்து ஆதரித்த ரோட்டேரியன்கள் படங்கள், பெயர்கள் அடங்கிய ஆர்ச் கிளம்ப் அருங்காட்சியக சுவற்றை பார்வையிட்டோம்.

அதன் பின்னர் 16-வது தளத்தில் 200-க்கும் மேலான நாடுகளின் கொடிகள் மற்றும் ரோட்டரி இன்டர் நேஷனல் வாரியக் கூட்டம் நடைபெறும் அறையைப் பார்வையிட்டோம்.

இந்த பயணத்தின் போது நாங்கள் பொதுச் செயலர் ஜான் ஹுகோவை சந்தித்தோம். அவர் 2024-ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் நடைபெற உள்ள மாநாட்டில் அனைவரும் பங்கேற்குமாறு வலியுறுத்தினார்.■

*கிஷோர் ராத்தி (இடமிருந்து 3வது), அவர் மனைவி காஜல், PRIP ஜெனிஃபர் ஜோன்ஸ், RI தலைவர் கோர்டன் மெக்கினலி ஆகியோருடன் இவான்ஸ்டனில் உள்ள RI தலைமையகத்தில்.*



ADVT.

# KLE SOCIETY

## Lingaraj College Road, Belagavi, Karnataka, India

300 Institutions | 18000+ Faculty | 138000+ Students | 4000+ Healthcare Beds

XAVIER UNIVERSITY SCHOOL OF MEDICINE ARUBA

KARNATAKA LINGAYAT EDUCATION SOCIETY
Since 1916

# 6 YEARS

PRE-MED TO
**DOCTOR OF MEDICINE/**
**DOCTOR OF VETERINARY MEDICINE**
PROGRAMME





**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 2 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island - Netherland

**Next 2 years**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

**The session starts in September 2023**
**Last date - August 21, 2023**

To apply, Visit:
**application.xusom.com**
Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712
email: infoindia@xusom.com

**XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME**

# ஜெய்சால்மரில் பழங்குடியினர் பள்ளியில் ரோட்டரி நூலகம்

**கிரண் ஜெஹரா**

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்சால்மரில் உள்ள ராஜகுமாரி ரத்னாவதி மகளிர் பள்ளியைச் சேர்ந்த இளம் பெண்கள் குழுவினர் ஒரு மேஜை முழுவதுமான புத்தகங்களுடன் எங்களை அணுகினர். புத்தகங்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்தபோது அவர்களின் கண்கள் உற்சாகத்தில் மின்னியது. புத்தகங்களை துருவித் துருவி பார்த்து அவற்றில் ஒன்றை எடுத்து தங்களது கண்டுபிடிப்பை புன்னகையுடன் பகிர்ந்து கொண்டபோது எங்களது இதயம் நெகிழ்ந்தது என்கிறார் ரோட்டரி மாவட்டம் 3150-க்கு உட்பட்ட ஹைதராபாத் ஸ்மார்ட் சிட்டி ரோட்டரி சங்கத்தின் தலைவர் டாக்டர் சித்ரா ஐராவதம்.

ஜெய்சால்மர் அரச குடும்பத்தினர் ஆதரவுடன், CITTA Education Foundation India நிறுவனத் தினரால் நடத்தப்படும் இந்த பள்ளி, ஜெய்சால்மரிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள கனோய் கிராமத்தில் 2021-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த பகுதியில் பெண்கள் எழுத்தறிவு பெறுவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இந்த பள்ளியை மேம்படுத்தும் நோக்கில் ஹைதராபாத் ஸ்மார்ட் சிட்டி ரோட்டரி சங்கம் மற்றும் ஜெய்சால்மர் ஸ்வர்ண நகரி (RID 3055) ரோட்டரி சங்கங்கள் இணைந்து பள்ளிக்கு ஒரு நூலகத்தை வழங்கியுள்ளது.

இந்த புதிய நூலகத்தில் 150-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. கதைப் புத்தகங்கள், உரையாடல்கள் மற்றும கலைக்களஞ்சியம் என பல்வேறு புத்தகங்கள் இங்கு உள்ளன. இங்குள்ள இலக்கிய புத்தகங்கள், பெண்கள் அறிவை விரிவு படுத்திக் கொள்ள உதவும். ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளில் புத்தகங்கள் உள்ளன. இந்த புத்தகங்களை படிப்பதன் மூலம் பெண்கள் உலக அறிவைப் பெறமுடிவதும் பிராந்திய





*புகழ் பெற்ற ஆடை வடிவமைப்பாளர் சப்யாசாச்சி வடிவமைத்துள்ள சீருடைகளில் பள்ளி மாணவிகள்.*

இவர்கள் பெரும்பாலும் நெசவாளர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் தார் பாலைவனத்தைச் சேர்ந்த நாடோடிகள் குடும்பத்தினர். கல்வி, சீருடை, உணவு, போக்குவரத்து என அனைத்து வசதிகளும் அவர்களுக்கு இலவசமாக செய்துகொடுக்கப் பட்டுள்ளன என்கிறார் சங்கத்தின் தலைவர். மேலும் ஒரு சுவாரஸ்யமான தகவல் என்னவென்றால் சப்யா சாச்சி என்னும் புகழ்பெற்ற வடிவமைப்பாளரால் இங்குள்ள கலைஞர்களால் தயாரிக்கப்படும் அஜிரக் துணிகளால் சீருடை வடிவமைக்கப்பட்டது. உள்ளூர் கலாசார பாரம்பரியத்தை அவர்களின் அன்றாட வாழ்வில் ஒருங்கிணைப்பது அவர்களின் கல்வி அனுபவத்தை வளப்படுத்துகிறது. மேலும் ஒரு வலுவான தொடர்பை உறுதி செய்கிறது.

*ரோட்டரி அமைத்துள்ள நூலகத்தில் பள்ளி மாணவிகளின் ஒரு புத்தக வாசிப்பு நிகழ்ச்சி.*



மொழி அறிவையும் வளர்த்துக் கொள்ள முடியும் என்கிறார் அவர்.

இந்த நூலகத்துக்கு உயிர்கொடுக்க 6 மாதகால கூட்டு முயற்சி தேவைப் பட்டது. நுணுக்கமாக ஆய்வு செய்தபின் இளம் பெண்களுக்குத் தேவையான பல்வேறு வகையான புத்தகங்கள் வாங்க சங்கம் ஏற்பாடு செய்தது. இத்திட்டத்திற்காக ரூ.2 லட்சம் செலவிடப்பட்டது என்றார் சித்ரா.

தற்போது இந்த பள்ளியில் 100 மாணவிகள் படித்து வருகின்றனர்.

மாணவிகள் தங்களது கணினி அறிவை வளர்த்துக் கொள்வதற்காக ஹைதராபாத் ஸ்மார்ட் ரோட்டரி சங்கம் மெக்கானிக் கருவிகள் தொகுப்பு, அலமாரிகள் மற்றும் இரண்டு டெஸ்க்டாப் கம்ப்யூட் டர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த பள்ளியில் கல்வி உபகரணங்கள் போதுமான அளவு இல்லாததால் அவற்றை வழங்க இதர ரோட்டரி சங்கங்கள் முன்வரும் என நம்புகிறோம். எங்கள் சங்கங்களின் ஆதரவு மூலம் மாணவிகள் கற்பதற்கான



*பள்ளி மாணவிகள் லூடோ விளையாடுகின்றனர்.*

## *பள்ளியைப் பற்றி*

*ஜெய்சால்மரில் தார் பாலைவனப் பகுதியில் அமைந்துள்ளது ராஜகுமாரி ரத்னாவதி மகளிர் பள்ளி. இது தனித்துவமான ஓவல் வடிவத்திலானது பள்ளி கட்டடம். கடும் வெப்பத்தையும் தாங்கக்கூடியது. கிண்டர் கார்டன் வகுப்பு முதல் 10ம் வகுப்புவரை இங்கு 400 மாணவிகள் படிக்கலாம். உள்ளூர் மணல் கற்களைக் கொண்டு நியூயார்க்கை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் டயானா கெல்லோக் ஆர்க்கிடெக்ட்ஸ் நிறுவனம் மூலம் பள்ளி வடிவமைத்து கட்டப்பட்டுள்ளது. பள்ளி பெண்பால் வலிமையை குறிக்கிறது. வறண்ட பாலைவனப் பகுதியில் நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் கட்டடத்தின் முன்பகுதியில் மழைநீர் சேகரிப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வளாகத்தில் கைவினைக் கண்காட்சிகள் நடத்துவதற்கான அரங்கம் உள்ளது. இங்கு ஓவியம், கலைத்திறன், நெசவு, எம்பிராய்டரி உள்ளிட்ட பாரம்பரிய கலைத்திறன் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.*



ஆரோக்கியமான சூழல் உருவாகும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சற்று முன்னோக்கி பார்த்தால் இந்த மாணவிகள் எதிர்காலத்தில் சமூகத்தில் மாற்றத்தை கொண்டு வரும் ஏஜெண்டுகளாக இருப்பார்கள் என்பதே ரோட்டரி சங்கங்களின் கருத்தாகும். இவர்கள் தாங்கள் கல்வி கற்பதுடன் நில்லாமல் தங்கள் வீட்டில் உள்ள தாய்மார்களும் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுப்பார்கள் என்று நம்புகிறோம் என்கிறார் ஜெய்சால்மர் ஸ்வர்ண நகரி ரோட்டரி சங்கத்தின் தலைவர் பிரதீஷ் சந்தக். இவர் சமீபத்தில் ஜெய்சால்மர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவரும் பள்ளியின் நிர்வாகியுமான சைதன்ய ராஜ்சிங்கை சந்தித்து பேசியுள்ளார். அவர் சில மூத்த மாணவர்களை சர்வதேச கல்விச் சுற்றுலாவுக்கு அனுப்ப திட்டமிட்டு, அதற்கு ரோட்டரி சங்கத்தின் ஆதரவைக் கோரியுள்ளார். அதற்கு நாங்கள் உதவ முன் வந்துள்ளோம் என்றார் சந்தக்.



பள்ளித் தலைமையாசிரியர் லலித் புரோகித், புதிய நூலகம் உருவாக்கப்பட்டதால் ஏற்பட்ட மாற்றத்தை நேரில் பார்த்தார். மாணவிகள் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நூலகம் அவர்கள் சென்று படிக்கும் இடமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார். குழுவாகவும், தனிப்பட்ட முறையில் படிப்பதற்கான அமர்வுகளும் நடத்தப்படுகின்றன. பெண்கள் புத்தகங்களை படித்து உலக விஷயங்களை தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் இருக்கிறார்கள். 3 அல்லது 4-ஆம் வகுப்பில் படிக்கும் மாணவிகள் படிப்பது மட்டுமல்ல ஆங்கிலத்திலும் பேசத் தொடங்கியுள்ளனர் என்று பெருமையுடன் அவர் குறிப்பிட்டார்.■

# பெண்களுக்கு கல்வி அளிக்க ஒரு கலைக் கண்காட்சி

ரோட்டரி செய்திக் குழு

சமீபத்தில், தில்லியில் உள்ள சிலி தூதரகத்தில் பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் நிதி திரட்டல் கலைக் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. சிலி தூதர் ஜுவான் அன்குலோ அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட இந்தக் கண்காட்சியில் பலவிதமான ஓவியங்கள், ஏராளமான வண்ணங்கள் நிறைந்திருந்தன. ப்ளூ மூன் அமைப்பின் ஆதரவில், மீனு குமார் அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட இந்த ஓவியங்கள் ஏலம் விடப்பட்டன.

முதல் ஓவியத்தை மெக்சிகோ-வைச் சேர்ந்த ஆலோசகர் ஒருவர் ரூ.18,000 செலுத்தி வாங்கினார். அதன் பதிவு விலை ரூ.10,000ஆக இருந்தது. இதையடுத்து, ரூ.2.15 லட்சம் மதிப்புள்ள ஓவியங்கள் விற்கப்பட்டன. இன்னும் பல ஓவியங்கள் (ரூ.30 லட்சம் மதிப் புள்ளவை) அடுத்த விற்பனைக்கு முன்பதிவு செய்யப்பட்டன என்றார் ப்ளூ மூனைச் சேர்ந்தவரும் ரோட்டரி யனுமான ஜூலியா கங்வானி. மொத்த விற்பனையில் நான்கில் ஒரு பகுதி பெண் கல்விக்குச் செல்லும், மேலும் 25% பெண்களுக்குத் திறன் அளிக்கப் பயன்படும், மீதிப் பகுதி ஓவியர்களுக்குச் செல்லும்.

RILM தலைவர் மற்றும் PRID கமல் சங்வி இந்தக் கண்காட்சியில் கலந்துகொண்டார், கலைக் கண்காட்சி யை நடத்த உதவிய சிலி தூதருக்கு நன்றி தெரிவித்தார்.■



**வலதிலிருந்து:** *சிலி தூதர் ஜுவான் அன்குலோ, PRID கமல் சங்வி, ஜூலியா கங்வானி மற்றும் மீனு குமார்.*

# பார்வைக் குறைபாடு கொண்டோர் பள்ளிக்கு ஒரு பேருந்து



1987ல், RC சோலாப்பூர் நார்த், RID 3132, உறுப்பினராக இருந்த ஷாம்சுந்தர் டோஷ்னிவால் அவர்களால் தொடங்கப்பட்ட, பார்வைக் குறைபாடு கொண்ட மாணவர்களுக்கான உண்டுறை பள்ளி, பைரூரதன் தமானி பார்வைக் குறைபாடு கொண்டோர் பள்ளி. இந்தச் சங்கம் இந்தப் பள்ளிக்குப் பிரெயில் நூலகம், ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனிக் கழிப்பறைகள், படுக்கை அறைகள், சமையலறை, உண்ணும் அறை, வகுப்பறைகள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், மாணவர்களைக் கவனித்துக்கொள்வோர் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்கியுள்ளது. மாணவர்களுக்கு மெழுகுவர்த்திகள், கைத்தறித் தயாரிப்புகள், பைகள், செயற்கைப் பூக்கள் போன்றவற்றைச் செய்யும் தொழில் சார்ந்த பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இங்கு உண்டுறை வசதி இருந்தாலும், சிலர் வீட்டிலிருந்து வந்து படிக்கிறார்கள். இவர்களுடைய கண் பார்வைக் குறைபாட்டால், பெற்றோர் இவர்களைப் பொதுப் போக்குவரத்தில் அனுப்பத் தயங்குகிறார்கள். அதனால், சென்ற ஆண்டு, இந்தச் சங்கம் நிகார் புர்டெ தலைமையில், ரூ.27 லட்சம் மதிப்புள்ள, 30 இருக்கைகளைக் கொண்ட, ஸ்ரீராம் ரெட்டி என்ற தொழில்முனைவோர் பரிசளித்த பேருந்து ஒன்றை இந்தப் பள்ளிக்கு வழங்கியது.

இந்தச் சங்கம் இந்தப் பள்ளியில் பிரெயில் ஆதரவு கொண்ட வன்பொருள், மென்பொருளுடன் கணினி ஆய்வகம் ஒன்றை அமைக்கவும், இங்குள்ள மாணவர்கள் செய்த கைவினைப் பொருட்களைச் சந்தைப்படுத்து வதற்கு உதவவும் திட்டமிடுகிறது.■

# ஜெய்ப்பூர் மூட்டுகள் மூலம் நம்பிக்கையை அளிக்கிறோம்

ரஷீதா பகத்

ரோட்டரி ஜெய்ப்பூர் லிம்ப் (RJL), UK, RIBI (ரோட்டரி இன்டர்நேஷனல் அஃப் கிரேட் பிரிட்டன் அண்ட் அயர்லாந்த்) இன் விருப்பமான தொண்டு நிறுவனம், அது ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் செயற்கை மூட்டு முகாம்களுக்கு நிதியளிப்பதற்கும் ஆதரவளிப்பதற்கும் நீண்ட ஆண்டுகளாக உழைத்துள்ளது. அதன் 32 ஆண்டுகால வரலாற்றில் பெனின், கானா, ஹைட்டி, இந்தியா, ஐவரி கோஸ்ட், கென்யா, மலாவி, நேபாளம், நைஜீரியா, ருவாண்டா, இலங்கை மற்றும் தான்சானியா ஆகிய நாடுகளில் வெற்றிகரமான திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

PDG ரிச்சர்ட் கிரீன், அறக் கட்டளையின் அறங்காவலர்களில் ஒருவர், இந்தியாவின் பொறுப்பு இயக்குனர், ரோட்டரி நியூஸுக்கு அளித்த ஜூம் நேர்காணலில், இந்தியாவில், 1990 முதல் நாங்கள் ஒன்பது மையங்களை நிறுவி, பல ரோட்டரி சங்கங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஏராளமான மெகா மூட்டு முகாம்களுக்கு நிதியுதவி அளித்துள்ளோம். ஆப்பிரிக்காவில், நாங்கள் 24 மையங்களைத் தொடங்கினோம், 18 இன்னும் செயலில் உள்ளன, சில உள்ளூர் இடையூறுகள் மற்றும் கிளர்ச்சி நடவடிக்கைகளால் சில மூடப்பட்டன; நான்கு புதிய மையங்கள் 2023இல் திட்டமிடப் பட்டுள்ளன என்று கூறினார்.

கேரளாவில் 600 மூட்டுகளை வழங்குவதற்கான வெற்றிகரமான $34,000 உலகளாவிய மானிய விண்ணப்பத்தின் “மகிழ்ச்சியான செய்தி”யுடன் அவர் நேர்காணலைத் தொடங்கினார். “நான் பிப்ரவரியில் இந்தியாவிற்கு வந்தேன், இந்தியாவுக் கான எங்கள் தலைமை தூதர் PDG ஸ்காரியா ஜோஸ் காட்டூர் (RID 3211), ஆரம்பக்கட்ட பணிகளை செய்வதற்கு பெரும் உதவியாக இருந்தார்.” RID 3211இன் ஐந்து வருவாய் மாவட்டங்களிலும் முகாம்கள் நடைபெறும்.

வளரும் நாடுகளில், மக்கள்



*ரோட்டரி ஜெய்ப்பூர் லிம்ப் இந்தியா இயக்குனர் PDG ரிச்சர்ட் கிரீன் LN-4 செயற்கை கை பயனாளியுடன்.*

தொகையில் 1,000 பேரில் ஒருவர் மூட்டுகளை இழந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த மதிப்பீட்டின் படி இந்தியாவில் மட்டும் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் இருப்பார்கள்.

கடந்த RI இயக்குனர் மற்றும் RIBIஇன் தலைவரும், தற்போதய RJL தலைவருமான பிரையன் ஸ்டோயல் மற்றும் PDG கிரீன் இருவரின் மதிப்பீட்டின்படி, இந்தியாவில் இந்த பிரிட்டிஷ் தொண்டு நிறுவனம் 50,000க்கும் மேற்பட்ட கால்கள், ஏராளமான ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள் மற்றும் முச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது மற்றும் 18 TRF உலகளாவிய மற்றும் பொருந்தக்கூடிய மானியங்களைப் பெற்றுள்ளது. ஆப்பிரிக்காவிற்கான எண்ணிக்கை 30,000 மூட்டுகள் மற்றும் 28 TRF உலகளாவிய மற்றும் பொருந்தக்கூடிய மானியங்கள்.

**ஆரம்பம்:**

ஜெய்ப்பூரில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் மிகப்பெரிய அமைப்புகளில் ஒன்றான BMVSS (பகவான் மகாவீர் விக்லாங் சஹாயதா சமிதி) இன் மூட்டுகளை உருவாக்கும் பட்டறைகளை இங்கிலாந்தைச் சேர்ந்த பீட்டர் பெட்ரிட்ஜ் என்பவர் பார்வையிட்ட பிறகு RJL தொடங்கப்பட்டது. “இது 1985-இல் நடந்தது, அப்போது அவர் விடுமுறையில் இருந்தார். அங்கு அதை கண்டு மிகவும் உற்சாகமடைந்து, இங்கிலாந்தில் ஒரு தொண்டு நிறுவனத்தைத் தொடங்க முடிவு செய்தார். இங்கிலாந்தில் இருந்து ஒரு ரோட்டேரியர் இந்தியாவிற்கு வருகை தந்ததன் விளைவுதான் முழு செயல்முறையையும் தொடங்கியது.

அந்த தொண்டு நிறுவனம் 1988இல் தொடங்கப்பட்டு 1995இல் பதிவு செய்யப்பட்டது, அதன் பின்னர் இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள குழு இந்த காரணத்திற்காக நிதி சேகரித்து வருகிறது. ஜெய்ப்பூர் லிம்ப்ஸ் - கால் மற்றும் LN-4 கை இரண்டிற்கும் தேவை அதிகம் என்று கிரீன் கூறுகிறார். LN-4 கைத் திட்டத்தை இயக்கும் இந்தியாவில் உள்ள ரோட்டேரியர் மோகன்குமார்,

# *வாழ்க்கையை மாற்றிய அனுபவம்*



*PDG ஸ்காரியா ஜோஸ் (இடமிருந்து 2வது) RID 1120 PDG ஜான் வில்டன் மற்றும் டோமி கனயம்ப்லக்கல் ஆகியோருடன்.*

*“நான் இந்த UK தொண்டு நிறுவனத்தில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வருகிறேன்; நான் 1992-இல் RJL உடன் பணிபுரியத் தொடங்கினேன், UK-வில் உள்ள மிகவும் இரக்கமுள்ள ரோட்டேரியர்களின் குழுவால் அது ஆதரிக்கப்படுவதைக் கண்டேன். நான் முதல் செயற்கை மூட்டு முகாமைச் நடத்திய போது, எனக்கு 21 வயது மற்றும் TRF மானியத்தைப் பற்றிய எனது அறிவு அப்போது பூஜ்ஜியமாக இருந்தது, என்று PDG ஸ்காரியா ஜோஸ் காட்டூர் நினைவு கூர்ந்தார்.*

*1990-களின் மெதுவான தகவல் தொடர்பு பரிமாற்றத்தை பற்றி அவர் நினைவு கூர்ந்து, RJL-இன் அறங்காவலர் ஒருவர் இந்தியாவுக்கு கடிதங்களை அனுப்புவார், அது 40 நாட்களுக்குப் பிறகு வரும்! அடுத்ததாக 250 ரூபாய்க்கு தொலைநகல் வந்தது, அது 21 வயது இளைஞனான எனக்கு மிகவும் விலை உயர்ந்தது! என கூறினார்*

*பல ஆண்டுகளாக UK தொண்டு நிறுவனத்தின் அறங்காவலர்கள் அவரை வழிநடத்தினர்; “கிரீனும் அவரது குழுவினரும் இந்த வேலையைச் செய்யும் சங்கங்களுக்கு மிகுந்த ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறார்கள், மேலும் GG தொடர்பான அனைத்து TRF கேள்வி களுக்கும் பதிலளிக்க இந்தியாவில் உள்ள சங்கங்களுக்கு நான் உதவுகிறேன்.*

*அவரது முதல் மேட்சிங் க்ராண்ட் 1995-இல் 1,000 மூட்டுகளுக்கான திட்டம். இது என் வாழ்க்கையை மாற்றிய திட்டமாகும் என்று காட்டூர் மேலும் கூறுகிறார். இந்திய சங்கங்களை இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கொள்ளுமாறு அவர் வலியுறுத்துகிறார். RJL, UK, மேலும் பல விழிப்புணர்வு முகாம்களை ஏற்பாடு செய்ய விரும்புகிறது; அவர்கள் இங்கிலாந்தில் உள்ள ரோட்டரி சங்கங்கள்/மாவட்டங்கள் இந்திய சங்கங்கள்/மாவட்டங்களுடன் இணைந்து உலகளாவிய மானியங் களைப் பெற ஊக்குவிக்கின்றனர். மூட்டு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அவர்கள் இந்தியா / இங்கிலாந்தில் உள்ள சங்கங்கள் / மாவட்டங்களுக்கு அவ்வப்போது வருகை தருகிறார்கள்.* ■

இந்தியாவில் 50 லட்சம் மாற்றுத் திறனாளிகள் இருப்பதாக சமீபத்தில் என்னிடம் கூறினார். இந்தியாவில் 80 சதவீத உடல் உறுப்புகள் துண்டிக் கப்படுவது மின்சார தாக்குதலால் ஏற்படுவது என்பதை அறிந்தபோது ஆச்சரியமாக இருந்தது. மேலும் இவர்களில் பெரும்பாலோர் LN-4 கை பொருத்தப்பட்டுள்ளனர். சாலை மற்றும் ரயில் விபத்துகள், பண்ணைகளில் விபத்துக்கள் போன்றவை மற்ற காரணங்கள் ஆகும். UK தொண்டு நிறுவனத்தால் நிறுவப்பட்ட விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் நிரந்தர மூட்டு மையங்கள் ஆகியவற்றில் பெரும்பாலானவை மருத்துவமனைகளில் உள்ளன, அவற்றில் பாலினம் மற்றும் வயது வேறுபாடின்றி அனைவருக்கும் சிகிச்சையளிக்கின்றனர். "பிறவி குறைபாடுகள் காரணமாக இளம் குழந்தைகளுக்கு பெரும்பாலும் செயற்கை மூட்டுகள் தேவைப் படுகின்றன, மேலும் இந்தியா போலியோவை அழிக்கும் முன், பலர் போலியோவால் பாதிக்கப்பட்டிருந்தனர்'' என்று கிரீன் கூறுகிறார். எங்கள் மையங்களும், முகாம்களும் வயது காரணமாக யாரையும் மறுப்பதில்லை; இதில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், செயல்படும் மூட்டு மூலம் ஒருவர் வேலையையும் வருமானத்தையும் பெறமுடியும்'' என ஸ்டோயல் மேலும் கூறுகிறார்,

2008-இல் பெங்களூரில் இருந்து படிப்பு பரிமாற்றக் குழுத் தலைவர் ஒருவரை அவர் தன்னுடன் தங்கவைத்த பின், இந்தியாவில் ஜெய்ப்பூர் மூட்டுகளைப் பொருத்துவதில் கிரீனின் ஈடுபாடு தொடங்கியது. அவர் என்னை பெங்களூரில் உள்ள ராமையா மருத்துவமனையில் உள்ள JLCக்கு அழைத்துச் சென்றார். சாலையில் சென்று கொண்டிருந்தபோது, 40 வயதிற்குட்பட்ட ஒருவர் சாலையோரம் நொண்டி நடந்து கொண்டிருப்பதைக் கண்டோம். என் நண்பர் அவரிடம் பேசியபோது, போலியோ என்ற வார்த்தையைக் கேட்டேன். நாங்கள் அவரை மூட்டு முகாமிற்குள் அழைத்துச் சென்றோம், இரண்டு மணி நேரத்திற்குள் அவரின் அளவு எடுக்கப் பட்டது, மேலும் அடுத்த நாள் வந்து இலவச மூட்டைப் பொருத்தி கொள்ளலாம் என்று அவரிடம் கூறப் பட்டது.



அவர்கள் கார் பார்க்கிங்கிற்குத் திரும்பிச் சென்ற போது, 'அந்த மனிதர் நொண்டிக் கொண்டு வந்து, என்னை கட்டிபிடித்து "நன்றி ரோட்டரி, என்னால் இப்போது வேலைக்குச் சென்று என் குடும்பத்தை ஆதரிக்க முடியும்' என்றார்.

இந்த முகாம்களுக்கு வர மக்கள் நீண்ட தூரம் பயணம் செய்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு ஒரு நாள் உணவளித்து தங்க வைக்கிறோம், ஆனால் பாரம்பரிய முறையைப் பயன்படுத்தி மூட்டு பொருத்துதல் செய்ய சுமார் ஆறு மணி நேரம் ஆகும். ஆனால், இந்த முகாம்களில் ஏராளமானோர் கலந்துகொள்வதால், முதல் நாளில் அளவு எடுக்கப்பட்டு, மறுநாள் மூட்டு பொருத்தப்படுகிறது.

தொழில்நுட்ப வல்லுநர்களைப் பயிற்றுவிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்று அவர் மேலும் கூறுகிறார்.

இந்தியாவில் ஒரு மூட்டுக்கான சராசரி விலை 70 பவுண்டுகள் (ரூ. 6,000). ஊனமுற்றவர் எங்கள் தொழில்நுட்ப வல்லுநருக்கு முன்னால் அமர, அந்த வல்லுநர் வெட்டப்பட்ட இடத்தை பிளாஸ்டர் ஆஃப் பாரிஸால் சுற்றி நிரப்புகிறார். அது மிக விரைவாக உலர்கிறது. இந்த அளவீடுகளின்படி அச்சு செய்யப்படுகிறது; நாம் பெறுவது PVCஆல் செய்யப்பட்ட ஒரு வடிகால் குழாய் ஆகும், இது உறுதியானது மற்றும் நீடித்திருக்கும். அதன் அடிப்பகுதியில் ஜெய்ப்பூர் கால் உள்ளது, இது மிகவும் கடினமான, பல ஆண்டுகள் நீடிக்கும் ரப்பர் கலவையால் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க தயாரிப்பு ஆகும் என செயல்முறையை விளக்குகையில் கிரீன் கூறுகிறார். சில பெறுநர்கள், குறிப்பாக குழந்தைகள் வளர்வதால் மறு சீரமைப்புக்காக வருகிறார்கள்.

"ஜெய்ப்பூர் கால், உலகிலேயே மிகவும் செலவு குறைந்த செயற்கை மூட்டு. நீங்கள் ஒரு தனியாரிடம் சென்றால், இந்தியாவில் ஒரு



ஜெய்ப்பூர் காலுக்கு ரூ.30,000 செலவாகும், ஆனால் நாங்கள் ஒரு மூட்டுக்கு சுமார் ரூ.6,000 மட்டுமே செலவழித்து, பெறுபவர்களுக்கு இலவசமாக வழங்குகிறோம் என PDG காட்டூர் கூறுகிறார்.

**ஆப்பிரிக்காவின் நிலைமை**

RJL அறங்காவலரும் ஆப்பிரிக்கா இயக்குநருமான டான் ஷார்ட் ஆப்பிரிக்கா வின் நிலையை பற்றி கூறுகையில், ஆப்பிரிக்கா வில் ஏற்கனவே 26 பட்டறைகள் நிறுவப்பட்டு செயல்படுகின்றன, மேலும் நான்கு பட்டறைகள் தற்போது காங்கோ, ருவாண்டா, காம்பியா மற்றும் எத்தியோப்பியாவில் வர உள்ளன. கோவிட் மற்றும் உள்ளூர் காரணங்களால் இவை அனைத்தும் தாமதமாகின. காம்பியா மற்றும் எத்தியோப்பியா பட்டறைகள் தலா 1,000 மூட்டுகளையும், மற்ற இரண்டு 500 மூட்டுகளையும் உருவாக்கும் திறனைக் கொண்டிருக்கும்.

ஆப்ரிக்காவில் உள்ள எலும்பியல் மருத்துவமனை நெட்வொர்க் இந்தியாவைப் போல் பெரியதானது இல்லை என ஷார்ட் கூறுகிறார். இந்தியாவைப் போலல்லாமல், ஆப்பிரிக்காவில் நோயாளிகள் மூட்டுக்கு பணம் செலுத்துகிறார்கள், இந்த நிதியை கொண்டு அடுத்தடுத்த பொருட்கள் வாங்கப்படுகிறது. முழங்காலுக்கு மேல் மற்றும் முழங்காலுக்குக் கீழே உள்ள செயற்கைக் கருவிகளுக்கு $250 மற்றும் $150 என விலை நிர்ணயம் செய்ய RJL பரிந்துரைக்கிறது. “அவர்களிடம் பணம் இல்லை என்றால், அவர்கள் நிதிக்காக மீண்டும் எங்களிடம் வரலாம். நாங்கள் நிதி திரட்டி, அந்த பட்டறையைத் தொடரலாம்” என PRID ஸ்டோயல் கூறுகிறார்.

துண்டிக்கப்படு வதற்கான முக்கிய காரணமாக மின்சார தாக்குதல் கொண்ட இந்தியாவைப் போலல்லாமல், ஆப்பிரிக்காவில் ஒரு பரந்த வரம்பு உள்ளது, மிகவும் பொதுவானது சாலையிலோ அல்லது பணியிடத்திலோ விபத்து ஏற்படுவது. கண்ணிவெடிகளால் கைகால்களை இழந்ததைப் பற்றி கேட்ட போது, ஸ்டோயல் இவ்வாறு பதிலளிக்கிறார்: உண்மையில் ருவாண்டா வில் கண்ணி வெடிகள் ஒரு காரணியாக இருக்கின்றன அல்லது இருந்தன. நான் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு ருவாண்டாவில் உள்ள ஒரு பட்டறைக்குச் சென்றிருந்தேன், அப்போது அங்கு ஏழு மாற்றுத் திறனாளிகள் இருந்தனர்; அவர்கள் அனைவரும் கண்ணி வெடியால் பாதிக்கப் பட்டவர்கள்.

ஆபிரிக்காவில் RJL இந்த பிரச்சனைகளில் எந்தளவுக்கு தீர்வு காண முடிந்தது? ஷார்ட்டின் பதில்: செயற்கை உறுப்பு கிடைக்காத பலர் ஊன்றுகோல் கொண்டு நடக்கிறார்கள் அல்லது ஒரு கம்பத்தைப் பயன்படுத்துகிறார்கள் அல்லது நகராமல் இருக்கின்றனர். ஆப்பிரிக்காவில் இனக் கலவரம், வன்முறைகள் அதிகம் உள்ளன, இதனால் ரோட்டரிக்கு அங்கே வேலை



*இந்தியாவின் திட்டத்தலைவர் பீட்டர் ஸ்வின்ஸ்கோ RC மூவாட்டுப்புழாவில் ஒரு செயற்கை மூட்டு பொருத்தும் முகாமில்.*



செய்ய வாய்ப்புகளும் அதிகம் உண்டு. இதுபோன்ற விபத்துகள் தொலைதூர பகுதிகளில் ஏற்படும் போது, போதிய மருத்துவ வசதிகள் இல்லாத சிறிய அறை மட்டுமே அந்த இடங்களில் இருக்கும். காயமடைந்த நபர் மருத்துவமனைக்கு கொண்டுவரப்படும் நேரத்தில், உயிரைக் காப்பாற்றுவதற்கான ஒரே வழி துண்டித்தலாக மட்டுமே இருக்கிறது. அதனால் தேவை யில்லாமல் உடல் உறுப்பு துண்டிக்கப் படுகின்றன.

மின்சாரம் தாக்குதல், சில சமயங்களில் சட்ட விரோத மாகத் திருடப்படுவதால், இந்தியாவில் உடல் உறுப்புக்கள் துண்டிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தாலும், இது வட இந்தியாவில் மட்டுமே மிகவும் பொதுவானது என்று நான் நம்புகிறேன். தெற்கில், சாலை விபத்துக்களால் அதிகமாகவும், கேரளாவில் சர்க்கரை நோயினாலும் ஏற்படுகிறது என்கிறார் கிரீன்.

இந்தியாவில் க்ரீனின் அனுபவம் என்னவென்றால், செயற்கை மூட்டு களைப் பெறும் இளம்பெண்கள் தங்கள் புதிய உறுப்புகளுக்கு மிக எளிதாகத் தகவமைத்துக் கொள்கிறார்கள். சிலர் இந்த உறுப்பு களுடன் நடனமாடுவதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் நீண்ட பாவாடைகளை அணிவதால், அந்த பெண்ணுக்கு செயற்கை மூட்டுள்ளது என்று சொல்ல கூட முடியாது!

LN-4 கையை உருவாக்கும் அமெரிக்க தொண்டு நிறுவனம், 2012இல் பெங்களூருவில் RJL-ஆதரவு திட்டத்திற்காக முதலில் அந்த கைகளை வழங்கியது என்று அவர் மேலும் கூறுகிறார். “கை அதன் அணிபவர்களுக்கு ஒரு கோப்பையைப் பிடிக்கவும், ஒரு மண்வெட்டி அல்லது கருவியை கொண்டு வேலை செய்யவும் மற்றும் சைக்கிள் ஓட்டவும் உதவுகிறது. ஒரு ஆரம்ப பயனர் விரைவில் கையில் பேனாவைப் பிடித்து மீண்டும் எழுதத் தொடங்கினார். உலகெங்கிலும் உள்ள பல மாற்றுத் திறனாளிகளுக்கு ஜெய்ப்பூர் மூட்டு வழங்கப்படுவது




இயக்கம் தருவது மட்டுமல்லாமல், சுதந்திரத்தையும் புதிய வாழ்க்கையையும் வழங்குகிறது.

இந்தியாவில் தூதர்களை அமைக்கும் முறை நன்றாக செயல்படுத்தப்பட்டிருந்தாலும், ஆப்பிரிக்காவில் அது செயல் படவில்லை. இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவில் மட்டுமல்லாமல், RJL நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கையிலும் நிரந்தர மையங்களை நிறுவியுள்ளது. 2010-ஆம் ஆண்டு நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, ஹைட்டியில் ஒரு பணிமனை, நோயாளி விடுதி, பயிற்சி மையம் மற்றும் 4x4 ஆம்புலன்ஸ் ஆகியவற்றை நிறுவியது.

### TRF-இன் முக்கிய பங்கு

இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும், மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால்களைப் பெற உதவுவதற்காக நிதி திரட்டுவதில் உறுதுணையாக உள்ள ரோட்டேரியன்களின் குழு ஒன்று இங்கிலாந்தில் உள்ளதாக கிரீன் விளக்குகிறார். மேலும் அந்த தொண்டு நிறுவனம், UK மற்றும் பிற நாடுகளில் உள்ள ரோட்டரி சங்கங்களை இந்தியாவிலுள்ள சங்கங்களுடன் இணைந்து பணியாற்றவும், உலகளாவிய மானியத்திற்கு விண்ணப்பிக்கவும் கண்டறிந்துள்ளது. “பல GGகள் மூலம் TRFல் இருந்து எங்களுக்கு உதவியும் ஆதரவும் கிடைத்துள்ளது; TRF இல்லாமல் இந்த வேலையை நாங்கள் செய்திருக்க முடியாது!

ஆனால், கோவிட்க்குப்பின், நிதி சேகரிப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது, மேலும் ரோட்டேரியன்களின் மனநிலை மாறி விட்டதையும் காண்கிறோம். செலவு மற்றும் கார்பன் தடம் இரண்டையும் குறைக்க, “புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொலைதூரப் பயிற்சிக்கு மாற்றியமைக்க முயற்சிக்கிறோம், அதன் மூலம் நாங்கள் எங்கள் வீடுகளில் அமர்ந்து, இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவின் புறநகரில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சியளிக்க உதவுகிறோம்.”

ஆனால், இந்தப் பணியைத் தொடர உறுதியுடன், RJL இன் ஏழு அறங்காவலர்களும் போதுமான நிதியைத் திரட்டுவதற்கான வழிகளைப் ஆராய்கின்றனர். “உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியர் களிடமிருந்து எங்களுக்கு இன்னும் கொஞ்சம் உள்ளீடு தேவை. TRF உடன் எங்களுக்கு நல்ல உறவு உள்ளது, நாங்கள் எங்கள் திட்டங் களை முழுமையாக பட்டியலிடு கிறோம் மற்றும் அறக்கட்டளையில் இருந்து எந்த நிராகரிப்புகளும் இது வரை இருந்ததில்லை. தேவை, எங்கள் பணி மற்றும் நாங்கள் என்ன செய்ய முயற்சிக்கிறோம் என்று மக்களுக்குச் சொல்லி நிதி திரட்ட உங்கள் கட்டுரை உதவும் என்று நம்புகிறோம்.■

ADVT.

# Shri Vaishnav Vidyapeeth Vishwavidyalaya, Indore

**City Office:** Shri Vaishnav Vidya Parisar, 177 Jawahar Marg, South Rajmohalla, **INDORE**-2
**Campus:** Indore-Ujjain State Highway, **INDORE**-453111. **Mob.:** 9303700163, 9303700164, 9303700165, 9303700166, 9303700168

THINK EXCELLENCE LIVE EXCELLENCE



**ADMISSIONS 2023-24**

# LEARN, UNLEARN AND RELEARN AT SVVV.

**Register at SVVV for skills, global exposure and industry-readiness!**

**Approved under Section 2(f) of the UGC Act, 1956**

- EXCELLENT TRACK RECORD • Relief for the Children of COVID-19 Warriors
- Scholarships for the Meritorious Students • Registrations Open- Register@www.svvv.edu.in

↗ MoU with Hanyang University, South Korea ; St. Cloud State University, USA ; University of Science & Technology, Meghalaya for Student/Faculty Exchange and Joint Research. ↗ MoU with TCS for Technical Collaboration. ↗ MoU with NRDC (Ministry of Science & Technology) for transfer of technology to industry. ↗ MoU with NCSSS (National Cyber Safety and Security Standards) for Technical Collaboration. ↗ MoU with Tata Power Ltd. for Technical Collaboration. ↗ Agreement with CISCO Network Academy. ↗ Agreement with Bosch India. ↗ MoU with Microsoft Corporation (India) Pvt. Ltd. for Technical Collaboration. ↗ MoU with IBM for Technical Collaboration. ↗ MoU with Red Hat for Technical Collaboration. ↗ Apple Authorised Training Centre Agreement for Education. ↗ MoU with Mitsubishi Electric India. ↗ MoU with ICT Academy ↗ MoU with Mahatma Gandhi National Council of Rural Education (MGNCRE), Government of India, Ministry of Education. ↗ MoU with Impetus Technology India Pvt. Ltd. for Technical Collaboration. ↗ MoU with Manmade Textiles Research Association (MANTRA) for Technical Collaboration ↗ MoU with ICAR- Indian Institute of Soybean Research ↗ Fees Structure is approved by the Government of Madhya Pradesh. ↗ Ranked jointly by Innovation Cell of the Ministry of Education (Government of India) and AICTE in Top 50 Most Preferred Institutions in 2021.

## ENGINEERING AND TECHNOLOGY

**B. Tech.** (4 years)
Agricultural Engineering/Automobile Engineering/ AE (Electric Vehicle Engineering)/ Civil Engineering/Electronics and Computer Science Engineering/Electrical Engineering (Solar Energy-Tata Power)/Electrical & Electronics Engineering/Electrical Engineering/ Electronics and Communication Engineering/ EC (Internet of Things)/ ME (Artificial Intelligence & Machine Learning)/ CE (Artificial Intelligence & Machine Learning)/ ECE (Artificial Intelligence & IoT)/ Electronics and Instrumentation Engineering/ Instrumentation & Control Engineering/ Mechanical Engineering/Mechanical Engineering (Plant Engineering-Tata Power)/ Mechatronics/ Railway Engineering/Robotics and Automation/Electronics (VLSI Design & Technology)

**M. Tech.** (2 years)
Civil (Geotechnical Engineering)/ Civil (Structural Engineering)/Civil (Transportation Engineering)/Civil (Water Resources Engineering)/Digital Communication/ Digital Instrumentation/ Embedded System & VLSI design/Industrial Engineering/ Mechanical (Thermal and Design Engineering)/ Power Electronics/Power System / Renewable Energy/ Virtual Instrumentation/ Construction Technology & Management/ Automation & Robotics

**Diploma Programs** (3 years)
Automobile Engineering /Civil Engineering/ Electrical Engineering /Electronics and Instrumentation Engineering/Electronics Engineering/Mechanical Engineering/ Mechatronics Engineering/ Solar Energy / Integrated Circuit (IC) Manufacturing

**B. Tech.** (4 years)
Computer & Communication Engineering/ Computer Science & Business Systems- (TCS)/ Computer Science Engineering/CSE (Mobile Applications)-Apple (AATCE)/ CSE (Artificial Intelligence - IBM)/ CSE (Big Data and Cloud Engineering-Impetus)/CSE (Data Science-IBM)/ CSE (Enterprise System- red hat)/ CSE (FullStack Development & Blockchain- IBM)/ CSE (Information and Cyber Security-NCSSS)/ CSE (Artificial Intelligence and Machine Learning-Microsoft)/Information Technology/ IT (Data Science-IBM)/ IT (FullStack Development & Blockchain-IBM)/ CSE (Internet of Things-IBM)

**M. Tech.** (2 years)
Computer Science Engineering/ Computer Science Engineering (Big Data Analytics)/ Computer Communication Engineering/ Information Security

**Dual Degree Programs**
**B. Tech. + M. Tech.** (4+2 years)
Computer Science Engineering/ Computer Science Engineering (Big Data Analytics)/ Computer Science Engineering (Cloud Computing)/Computer Science Engineering (Cyber Forensic)/Information Communication Technology/ Information Technology.

**B. Tech. + MBA** (4+2 years)
Computer Science Engineering/ Information Technology

**Diploma Program**
**One-Year** Post Graduate Diploma in Computer Applications (PGDCA)
**Six-Months** Diploma in Computer Hardware and Networking (DCHN)

**B. Tech.** (4 years)
Garment & Fashion Technology/ Textile Engineering/ Technical Textiles

**M. Tech.** (2 years)
Textile Engineering/Textile Chemistry

**B. Sc.** (4 years) Fashion Design

**B. Des** (3 years) Fashion Design

**Diploma Program** (3 years)
Textile Engineering

## FORENSIC SCIENCE

**B.Sc. (Hons.)** (4 years)
Digital & Cyber Forensics

**B.Sc.** (3 years)
Forensic Science/ Forensic Psychology

**B.A./ B.Sc.** Criminology

**M.Sc.** (2 years) Forensic Science/ Forensic Psychology/ Cyber Forensics

**M.A./ M.Sc.** (2 years) Criminology

**Dual Degree Program**
**B.Sc.+ M.Sc.** (3+2 years)
Forensic Science/ Forensic Psychology

## ARCHITECTURE

**B.Arch.** (5 years)

**B.Des.** (4 years) Interior Design/ Product Design/Graphics & Animation

**M.Des.** (2 years) Interior Design

**M.Des.** Graphics & Animation

**Dual Degree Program**
**B.Des.+ M.Des.** (4+2 years)
Interior Design/ Product Design/ Graphics & Animation

## PLANNING

**B.Plan** (4 years)

**M.Plan** (2 years) (Urban Planning)

## MANAGEMENT

**MBA** (2 years)
Engineering Management/ Family Business & Entrepreneurship/ International Business/ Media Management/Agri-business/ Business Analytics/Advertising and Public Relations/Tourism/ Rural Management-MGNCRE/ Hospital & Healthcare Management/ Marketing/ Human Resource/ Finance/ Fintech

**BBA (Hons.)** (4 years)
**BBA** (3 years)
**BBA (Fintech)** (3 years)
**BBA (Rural)** (3 years)

**Dual Degree Programs**
**BBA + MBA** (3+2 years)
Marketing/HR/Finance/Operations/ Fintech/Rural Management-MGNCRE

**MBA** (2 years) (Industrial Management)
Open to Engineering Graduates only.

## JOURNALISM AND MASS COMMUNICATION

**M.A.** (2 years)
Journalism and Mass Communication/ Hindi Journalism

**Dual Degree Program**
**B.A. + M.A.** (3+2 years)
Journalism and Mass Communication

## FINE ARTS

**BFA** (4 years)
Painting/ Animation

**MFA** (2 years)
Painting/ Animation

## AGRICULTURE

**B.Sc. (Hons.)** (4 years) Agriculture

**M.Sc.** (2 years)
**Agriculture/ Horticulture**
Genetics and Plant Breeding/ Entomology/ Plant Pathology/ Soil Science & Agricultural Chemistry/ Agronomy/ Horticulture (Fruit Science)/ Horticulture (Vegetable Science)/ Agricultural Economics/ Agricultural Extention Education / Live Stock Production & Management

## SCIENCE

**B.Sc.** (3 years)
Physics/ Chemistry/ Maths/ Life Science/ Computer Science/ Biotechnology/ Electronics/ Instrumentation/ Statistics/ Economics

**B.Sc. (Hons.)** (4 years)
Physics/ Chemistry/ Maths/Computer Science/Biotechnology/Electronics/ Instrumentation/Statistics/Economics

**M.Sc.** (2 years)
Physics/ Chemistry/ Maths/ Environmental Science/ Analytical Chemistry/Biotechnology

**Dual Degree Program**
**B.Sc. + M.Sc.** (3+2 years)
Physics/ Chemistry/ Maths/ Statistics

## COMPUTER APPLICATIONS

**BCA** (3 years) Big Data Analytics-IBM

**B.Sc.** (3 years) Data Science

**M.Sc.** (2 years) Computer Science

**MCA** (2 years) Banking Technology

**MCA** (2 years)

**Dual Degree Programs**
**BCA + MCA** (3+2 years)
**BCA + MCA** (3+2 years)
Banking Technology

## SOCIAL SCIENCES, HUMANITIES AND ARTS

**B.A.** (3 years)

**B.A. (Hons.)** (4 years)
Psychology/ Economics/ Public Administration/ English Literature/ Sociology/Political Science/ Anthropology/ History/ Hindi Literature/ Sanskrit

**B.S.W.** (3 years)

**M.A./M.Sc.** (2 years)
Psychology/ Applied Psychology/ Public Administration/ Clinical Psychology/ Counselling Psychology/ English Literature/ Sociology/ Economics/ Education/Anthropology/History/ Political Science/ Hindi Literature/Sanskrit

**M.S.W.** (2 years)

**Dual Degree Program**
**B.S.W. + M.S.W.** (3+2 years)

**B.Lib. I.Sc. + M.Lib. I.Sc.**

**One- Year Advanced Diploma in French**

## COMMERCE

**B.Com (Hons.)** (4 years)
Banking & Finance/ Entrepreneurship/ Tax Procedure/ Computer Applications

**B.Com** (3 years)
Banking & Finance/ Entrepreneurship/ Tax Procedure/ Computer Applications

**M.Com** (2 years)

**Dual Degree Programs**
**B.Com+ M.Com** (3+2 years)
**B.Com + MBA** (3+2 years)

## LAW

**LL.B (Hons.)** (3 years)

**LL.M** (2 years) Business Law/ Criminal Law

**LL.M** (1 year)
(Business Law, Criminal Law, Human Rights)

**Integrated Programs** (5 years)
**B.A.LL.B (Hons.)**
**B.B.A.LL.B (Hons.)**
**B.Com. LL.B (Hons.)**

## HOME SCIENCE

**M.Sc.** (2 years) Food & Nutrition

**Dual Degree Program**
**B.Sc.+ M.Sc.** (3+2 years) Food & Nutrition

## PARAMEDICAL SCIENCES

**Bachelor of Medical Labratory Technician** (3 years)

**DIPLOMA PROGRAMS** (2 years)
X ray Radiographer Technician/ Medical Lab. Technician/ Cath. Lab. Technician/ Dialysis Technician/ Optometric Refraction/ Optometrist Contact Lens/ Anesthesia Technician/ Yoga/ Naturopathy

deepak

SEPARATE HOSTEL FACILITY FOR BOYS & GIRLS.



**Campus visit:**
All Parents and Students are invited to visit SVVV campus.

## FACULTY OF DOCTORAL STUDIES & RESEARCH

All Seats of Ph.D program have been filled up.

**Teaching Assistanceship (TA) of ₹12,400 (Rupees Twelve Thousand Four Hundred Only) for all GATE Qualified Candidates admitted in 02 years full time M.Tech Program, subject to MoE/UGC/AICTE Guidelines.**

**Note: (1) Lateral Entry seats are available in B.Tech. (2) SVET (Shri Vaishnav Entrance Test) will be held on August 6 and 20, 2023. The seats in various programs will be filled on the basis of prescribed Tests/ SVET-2023.**

**Toll Free: 1800 233 9111**
**Helpline: 1800 102 9191**

For details, visit: www.svvv.edu.in admission@svvv.edu.in

# ஊரகப் பெண்களுக்கு ஆங்கிலப் பேச்சுத்திறன் அளிக்கும் RID 3212

ஜெய்ஸ்ரீ



IPDG VR *முத்து புராஜெக்ட் பஞ்ச் பங்கேற்பாளர்களுடன்.*

சிவகாசி ஸ்ரீவித்யா கலைக் கல்லூரி மாணவி தீபா, பார்வையாளர்களை கவரும் விதத்தில் சரளமாக ஆங்கிலத்தில் பேசிய அந்த சில நிமிடங்கள் மறக்கமுடியாதவை. மேடையில் நின்றுகொண்டு தாம் சமீபத்தில் கற்றுக்கொண்ட புதிய மொழியில் அவர் பேசியது நம்பிக்கையை வெளிப்படுத்தியது. RID 3212-ன் முக்கிய திட்டமான புராஜெக்ட் பஞ்ச் மூலம் தமக்கு கிடைத்த பெருமை இது என்று அவர் குறிப்பிட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை நான் மேடையில் நின்று பார்வையாளர்கள் முன்பு ஆங்கிலத்தில் பேசுவேன் என்று கனவில்கூட நினைக்கவில்லை. ஏனெனில் இலக்கணப் பிழை இல்லாமல் என்னால் ஆங்கிலத்தில் ஒரு வாக்கியத்தைக்கூட பேசியிருக்க முடியாது என்றார்.

தீபா மற்றும் 5,500-க்கும் மேலான மாணவர்களிடம் மாற்றத்தை ஏற்படுத்துவதில் புராஜெக்ட் பஞ்ச் முக்கிய பங்காற்றியுள்ளது. ஆங்கிலத்தில் பேசுவதற்கான பயிற்சி மற்றும் பொது மேடையில் பேசுவதற்கான பயிற்சிகள் இந்த இளம் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது.

IPDG V R முத்து கூறுகிறார்: பெற்றோர்களும், கல்வி நிறுவனங்களின் தலைவர்களும் மாணவர்கள் ஆங்கில மொழியை சரளமாக பேசுவதற்கு ஆவன செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டதை அடுத்து இந்த திட்டத்தை நாங்கள் உருவாக்கி செயல்படுத்தினோம் என்றார்.

RID 3212 தென்மாவட்டங்களான கன்னியாகுமரி, ராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி பகுதிகளை உள்ளடக்கியது. இந்த பிராந்தியங்களில் மக்கள் பொதுவாக ஆங்கிலத்தை முக்கிய தொடர்பு மொழியாக கருதுவதில்லை. இங்குள்ள ஆங்கில வழி பள்ளிகளில்கூட ஆசிரியர்கள் மாணவர்களுடன் ஆங்கிலத்தில் உரையாடுவதை தவிர்த்து தமிழிலேயே பேசிவருகின்றனர். பணி நிமித்தமாக நான் நான்கு ஆண்டுகள் மும்பையில் இருந்த போது ஆங்கிலம் பேசுவதின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டேன். எனக்கு மராத்தி அல்லது ஹிந்தி மொழியோ தெரியாத நிலையில் அரைகுறை ஆங்கிலம்தான் எனக்கு உடனடியாக கை கொடுத்தது. காலப்போக்கில் நான் ஆங்கிலத்தை சரளமாக பேசுவதற்கு கற்றுக்கொண்டேன் என்கிறார் முத்து.

பி.எட் படிப்பவர்களையும் இத்திட்டத்தில் சேர்த்துள்ளோம். ஏனெனில் வருங்கால ஆசிரியர்கள்

ஆங்கிலத்தில் தடையின்றி சரளமாக பேசவேண்டும் என்றார்.

RC விருதுநகர் உறுப்பினர் A ஷியாம்ராஜ், நடத்திவரும் பீஹெவ் கம்யூனிகேஷன்ஸ் கிளப்பைச் சேர்ந்த திறன்வாந்த பயிற்சியாளர் ஆங்கில பேச்சு பயிற்சி அளித்தனர். ஜூன் மாதம் இறுதிவரை 50 பயிற்சிப்பட்டறைகள் நடைபெற்றுள்ளன.

இந்த திட்டம் என்பது ஆங்கிலத்தில் ஒரு சில வார்த்தைகள் பேசுவதோ அல்லது இலக்கணம் கற்றுக்கொள்வதோ மட்டும் அல்ல, மாணவர்கள் ஆங்கிலத்தில் சரளமாக பேசவும், விவாதங்களில் பங்கேற்கவும், உலகத்துடன் தங்களை இணைத்துக் கொண்டு முக்கிய பங்காற்றுவதும் ஆகும் என்கிறார் ஷியாம்ராஜ். எங்களது நோக்கம் மாணவர்கள் எந்தவித தயக்கமும் இல்லாமல் மேடை ஏறி மைக்கை பிடித்து சரளமாக பேசுவதற்கான பயிற்சி அளிப்பதாகும் என்றார் பயிற்சியாளர் பிரீதா.

இந்த திட்டம் இப்போது இரண்டாம் நிலைக்கு தயாராகி வருகிறது. ஐந்து மாணவர்கள் மேம்பட்ட இரண்டுநாள் அமர்வு பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படு வார்கள். அதில் அவர்கள் எந்த முன்தயாரிப்பும் இல்லாமல் பேசுவார்கள் மற்றும் நிகழ்ச்சிகளை நடத்துவார்கள்.

IPDG முத்துவின் விருதுநகர் ரோட்டரி சங்கம் சார்பில் நடை பெற்ற நிகழ்வில் புராஜெக்ட் பஞ்ச் மற்றும் 55 அமர்வுகள் கொண்ட யாதுமானவள் ஆகிய முத்தான திட்டங்களை மாவட்ட ஆளுநர் முத்தையா பிள்ளை மற்றும் முன்னாள் ஆளுநர்கள் சாத்தப்ப பெரியண்ணன், விஜய குமார், ஷாஜஹான், ஷேக் சலீம் உள்ளிட்டோர் வெகுவாக பாராட்டினர்.

யாதுமானவள் (ஏப்ரல் 23 ரோட்டரி நியூஸ்) 70,000-த்துக்கும் மேலான இளைஞர்களைச் சென்றடைந்ததில் மகிழ்ச்சி தெரிவிக்கிறார் கடந்த ஜூன் 30 ஆம் தேதி மாவட்ட ஆளுநர் பதவியிலிருந்து விலகிய முத்து. கலாம் திட்டம் 10,000-த்துக்கும் மேலானவர்களுக்கு தொழில் வழிகாட்டியுள்ளது. விஞ்ஞான ரதம் ஒரு லட்சத்துக்கும் மேலான மாணவர்களிடம் அறிவியல் ஆர்வத்தை தூண்டியுள்ளது. இறைவி திட்டம் 33,000-த்துக்கும் மேலான வளர் இளம் பெண்களின் சவால்களுக்கு தீர்வுகண்டுள்ளது. 5,000 ஏழை சிறுமிகளுக்கு உள்ளாடை கள் வழங்கப்பட்டுள்ளன.

நீங்கள் அன்புடன் கொடுத்த சானிடரி நாப்கினை பொருத்திக் கொள்ள எங்களில் பலருக்கு உள்ளாடைகள் இல்லை என்று ஒரு பெண் தயக்கத்துடன் கூறிய போது எனது கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. ஏழைகளுக்கு நாப்கின் வழங்கும் அதேவேளையில் 3 உள்ளாடைகள் அடங்கி ஒரு பேக்கை விநியோகிப்பதையும் திட்டத்தில் சேர்த்துள்ளோம் என்றார் இறைவி திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் காயத்ரி மாரிராஜ்.■

# திருப்பூரில் மிகப் பெரிய ரோட்டரி மருத்துவமனை

ரோட்டரி செய்திக்குழு



*ரோட்டரி மருத்துவமனையின் ஒரு பகுதியை PRID C பாஸ்கர், IPDG இளங்குமரன், PDG முருகனாதன் (இடதிலிருந்து 3வது) முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.*

திருப்பூர் வெஸ்ட் ரோட்டரி சங்கம், RID 3203, ரூ.6.5 கோடி ($800,000) செலவில் ரோட்டரி திருப்பூர் மேற்கு ரோட்டரி பொது மருத்துவமனையைக் கட்டியுள்ளது. மூன்று பன்னாட்டு நல்கைகளின் உதவியுடன் கட்டப்பட்டுள்ள இந்த மருத்துவமனை பொது மருந்து, டயாலிசிஸ், நீரிழிவு மற்றும் குழந்தைகள் நலச் சேவைகளை வழங்கும், கண் மற்றும் பல் குறைபாடுகளையும் குணப்படுத்தும். இங்கு டிஜிட்டல் எக்ஸ்-கதிர், நோய் அறிதல் ஆய்வகம், மருத்துவ உதவி வண்டிகள் உள்ளன.

ஜூன் மாதத்தில், PRID C பாஸ்கர், IPDG B இளங்குமரன், சங்கத் தலைவர் P சண்முகசுந்தரம், பல்லடம் MLA ஆனந்தன், மாவட்டத்தின் முன்னாள் ஆளுநர்கள் முன்னிலையில், தகவல் மற்றும் விளம்பர அமைச்சர் M P சுவாமிநாதன் இந்த மருத்துவமனையைத் தொடங்கிவைத்தார்.■

# இதய அறுவைச் சிகிச்சைக்குப்பின், மாரத்தான் ஓட்டத்தில் வெற்றி

**சேகர் மேத்தா**

நரேஷ் குமார் ஜலான். என்னுடைய சங்கமாகிய RC கல்கத்தா மகாநகர் உறுப்பினர். இவர் 2016ல், 57 வயதில், ஓடுவதில் பேரார்வத்தை வளர்த்துக் கொண்டார். நரேஷ் 500 மீட்டர் ஓட்டத்துடன் தன் பயணத்தைத் தொடங்கினார். தன் பயணத்தைத் தொடங்கிச் சில மாதங்களுக்குள், ஜனவரி 29 அன்று, அவர் தன்னுடைய முதல் மினி மாரத்தான் (5 கிமீ) ஓட்டத்தில் பங்கேற்றார், வியக்கவைக்கும் செய்தி, அவர் அதில் வெற்றியும் பெற்றார்!

இது அவருடைய பயணத்தை இன்னும் விரைவாக்கியது. 2017, 2018, 2019 மற்றும் 2020ல் BRC மினி மாரத்தான்கள், 2018ல் CSC மினி மாரத்தானில் அவர் பங்கேற்றார், அனைத்திலும் வென்றார், ஒவ்வொரு முறையும் தன்னுடைய ஓடும் விரைவை இன்னும் கூடுதலாக்கினார். 2019ல் நடை பெற்ற டாடா ஸ்ட்ரக் சுரா-வில் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த 5,000 பங்கேற்பாளர்களில் இவர் 25வதாக வந்தார். எங்கள் சங்க உறுப்பினர்கள் இவரை ‘நரேஷ் மில்கா சிங் என்று அழைக்கத் தொடங்கினார்கள். தான் புதிதாகக் கண்டறிந்த பேரார்வத்தை அவர் மகிழ்ந்து அனுபவித்தார். ஆனால், வாழ்க்கை விநோதமான ஒரு திட்டத் துடன் அவரைத் தாக்கியது. 2021ல் உலகம் Covid நோய்ப்பரவலின் இரண்டாவது அலையுடன் போராடிக் கொண்டிருந்தபோது, நரேஷுக்கு ஓர் அரிய இதய நோய் இருப்பது கண்டறியப்பட்டது. அவருக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. அவருடைய உலகம் நொறுங்கிப்போனது. அவர் அறுவைச் சிகிச்சை அறைக்குள் சென்றார். மருத்துவர்கள் அவருடைய மனைவி நீலம், அவருடைய மகள் டாக்டர் கரிஷ்மா (தீவிர சிகிச்சை வல்லுனர்) ஆகியோரிடம் பெரிய பலன் எதையும் எதிர்பார்க்கவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் மோசமான சூழ்நிலைக்குத் தயாரானார்கள். ஆனால், நரேஷின் மன உறுதியில் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. அவர் இதைக் கடந்து வருவார் என்று அவர்கள் நம்பினார்கள். அவருடைய பெருநாடி அடைப்பான் மற்றும் ஏறும் பெருநாடி ஆகியவற்றுக்குப் பதில் ஓர் உலோகக் குழாய் பொருத்தப்பட்டது. இது ஓர் அரிய மற்றும் சிக்கலான அறுவைச் சிகிச்சை ஆகும்.




RC கல்கத்தா மகாநகர் உறுப்பினர்
நரேஷ் குமார்

குறிப்பாக, அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய குணமாதல் மிகவும் கடினமாக இருந்தது. எங்கும் கோவிட் பரவல், கட்டுப்பாடுகள், முடக்கங்களால் அது இன்னும் சிக்கலானது.

இருள் ஆழமாகும்போதுதான் நமக்குக் குடும்பத்தின் ஆற்றல் உண்மையாகப் புரிகிறது. நரேஷைப் பொறுத்தவரை, ரோட்டரி குடும்பமும், நம்முடைய சக ரோட்டரியன்களுடைய தன்னலமில்லாத பணியும் அவருடைய குடும்ப உறுப்பினர் களுக்குத் தேவையான உணர்வு மற்றும் தளவாட உதவிகளைக் கொண்டுவந்தன, தேவைப்பட்ட ரத்தமும் கொடையாளர்கள் வழியாகக் கொண்டுவரப்பட்டது.

மெதுவாக, அவர் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப விரும்பினார். அவர் மீண்டும் நடக்கவேண்டும் என்று மட்டும் விரும்பவில்லை, மீண்டும் ஓட விரும்பினார். மன உறுதி, ஒழுக்கம் ஆகிய இரண்டும் அவரிடம் நிறைந்திருந்தன.

சிகிச்சை நிறைவடைந்து சில மாதங்களுக்குப்பின், அவர்

மெதுவாக நடக்கத் தொடங்கினார். அடுத்த சில நாட்கள், வாரங்களில் அவர் தன்னுடைய விரைவைக் கூட்டினார், பின்னர் 100 மீட்டர் மெது ஓட்டம், 200 மீட்டர், 500 மீட்டர், 1 கிமீ என்று முன்னேறினார்.

சரியாக 21 மாதங்களுக்குப்பிறகு, ஜனவரி 28, 2023 அன்று, நரேஷ் மீண்டும் BRC மினி மாரத்தானில் கலந்துகொண்டார். அவருடைய மனைவியும் மகளும் கடவுளை வழிபட்டபடி காத்திருந்தார்கள், ஓட்டப் பந்தயம் தொடங்கியது. நிமிடங்கள் ஓடின, எங்கள் இதயங்கள் இன்னும் விரைவாகத் துடித்தன. நிறைவாக, அவர் எல்லைக் கோட்டைக் கடந்தார்.

நரேஷ் வென்றுவிட்டார். வாழ்க்கையின் சவால்கள் அனைத்தையும் அவர் வென்று விட்டார். தன்னுடைய பிரிவில் அவர் முதல் இடத்தைப் பிடித்திருந்தார், அனைத்து வகைகளிலும் சுமார் 500 பேரில் முதல் 5 இடங்களுக்குள் வந்திருந்தார்.

“மற்ற நாடுகளைப்பற்றி எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், இந்தியாவில் இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒருவர் ஒன்றரை ஆண்டுகளுக்குப்பிறகு மாரத்தானில் கலந்துகொண்டு ஓடி வெற்றி பெற்றதை நாங்கள் கேள்விப் பட்டதில்லை” என்று அவருடைய மருத்துவர்கள் சொன்னார்கள்.■




# பெண்களுக்குத் தற்காப்புப் பயிற்சி

ரோட்டரி செய்திக் குழு

பல பள்ளிகள், கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 2,500 பெண்களுக்கு, ஜப்பானியத் தற்காப்புக் கலைகளில் ஐந்தாம் நிலைக் கருப்புப் பட்டை வல்லுனரான சென்செய் P வாசு அவர்கள் தற்காப்புப் பயிற்சி அளித்துள்ளார். RC சென்னை ஈஸ்ட் R A புரம், RID 3232, முன்னாள் தலைவரான வாசு, இந்த மாவட்டத்தில் உள்ள வேறு நான்கு ரோட்டரி சங்கங்களுடன் (RCகள் சென்னை மித்ரா, கோல்ட் கோஸ்ட், மெட்ரோஜோன் மற்றும் ஆலந்தூர்) இணைந்து இந்த மாணவர்களை அடையாளம் கண்டார். மெட்ராஸ் பே சிட்டி இன்னர் வீல் சங்கம் தொண்டு இல்லங்களிலிருந்து, 6 முதல் 14 வயது கொண்ட 150 குழந்தைகளுக்குத் தற்காப்புப் பயிற்சி அளிக்கப் பரிந்துரைத்தது.

“அனைத்துப் பயிற்சிகளும் 10 மாதங்களில் நிறைவுபெற்றன. ஒவ்வொரு நிகழ்வின்போதும், இளம் பெண்களுடைய தன்னம்பிக்கையை மேம்படுத்தித் துணிச்சலைக் கட்டமைப்பதில் கவனம் செலுத்தும் சிறப்புக் கருத்தரங்கத்தையும் நாங்கள் நடத்தினோம்” என்கிறார் வாசு.■



*RC சென்னை ஈஸ்ட் R A புரம் முன்னாள் தலைவர் P வாசு மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கிறார்.*

# தானேவில் ஒரு மூங்கில் பேருந்து நிறுத்தம்

ரஷீதா பகத்

பெரும் பணக்காரர்களுடன் தொடர்புப்படுத்தப் படும், அழகான மற்றும் ஆடம்பரமான வில்லா அல்லது ரிசார்ட்கள் இந்தியாவின் பல பகுதிகளில் முளைத்து வருவதால் அவை பெரும்பாலும் நம் தலையை திரும்ப செய்வதில்லை. ஆனால், RC தானே இம்பீரியல் நிறுவிய சொகுசான ஒரு புதிய மூங்கில் பேருந்து நிறுத்தம் கனவுகளின் நகரமான தானேவின் பக்கம் தலைகளை திரும்பச் செய்துள்ளது.

செயற்கை புல்வெளி, நேர்த்தியாக அமைக்கப்பட்ட மூங்கில் கூரைகள் மற்றும் தூண்கள், மற்றும் பொதுப் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளுக்கு அழகான மூங்கில் பெஞ்சுகள் கொண்ட அந்த தானேவின் புதிதான பேருந்து நிழற்குடை ஒரு அற்புதமான உணர்வை உருவாக்கியுள்ளது.

இந்த தனித்துவமான மற்றும் புதுமையான திட்டம் சங்கத்தலைவர் ரீத் குமார் மற்றும் அவரது சங்கத்தை சேர்ந்த இரண்டு இன்டீரியர் டிசைனர்களான ஜியா லாட் (சங்கச் செயலாளர்) மற்றும் திட்டத் தலைவர் பரீக்ஷித் லாட் ஆகியோரின் சிந்தனையில் உருவானது.

இந்த ஆண்டு, எங்கள் குழு ஒரு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை திட்டத்தை செய்ய விரும்பியது, இது எங்கள் மாவட்ட கருப்பொருளான FAB (அற்புதமான) திட்டங்களின் கீழ் வரும். எங்கள் ஹவுசிங் சொசைட்டிக்கு அருகில் இருந்த இந்த பாழடைந்த இடம் இருட்டாகவும், மங்கலாகவும், முற்றிலும் அசுத்தமாகவும் இருந்தது அது வியாபாரிகள், மது அருந்துபவர்

*RC தானே இம்பீரியல் அமைத்துள்ள மூங்கில் பேருந்து நிழற்குடை.*



களால் ஆக்கிரமிக்கப்பட்டு, சிறுநீர் கழிக்கும் இடமாக பயன் படுத்தப்பட்டது. இதனால் உள்ளூர்வாசிகள் கடுமையான சுகாதாரம், தூய்மை மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். அந்த இடத்தில் கொசுக்கள் பெருகின, உரிமையாளர் இல்லாத வாகனங்கள் நிறுத்தப்பட்டன. பாதசாரிகள் மற்றும் வழிப்போக்கர்கள் அந்த இருண்ட இடத்தை புகைபிடிப்பதற்கும் மது அருந்துவதற்கும் பயன்படுத்தினர் என இந்த புதுமையான திட்டத்தைப் பற்றிய விவரங்களை அளித்து ரீத் கூறுகிறார்.

அந்த இடம் மீட்கப்பட காத்திருந்தது, எனவே சங்க உறுப்பினர்கள் அங்கு பேருந்து நிழற்குடை ஒன்றை அமைக்க முடிவு செய்தனர். மிகவும் குறைவான செலவில் இருக்கும் வழக்கமான ஸ்டீல் மற்றும் கான்கிரீட் பேருந்து நிழற்குடைக்கும் அல்லது தலையைத் திரும்பச்செய்யும் தனித்துவமான மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புமிக்க ஒன்றுக்கும் இடையே தேர்வு செய்ய வேண்டியிருந்தது. ரோட்டரியின் ஏழாவது கவனம் செலுத்தும் பகுதியான சுற்றுச்சூழல் பாதுகாப்பை செயல்படுத்துவது அமைப்பின் பொது உருவத்தையும் மேம்படுத்தும் என கருதப்பட்டது.

சங்கத்தலைவரே இன்டீரியர் டிசைனிங் படித்திருப்பதாலும், இரண்டு சங்க உறுப்பினர்கள் திறமையான இன்டீரியர் டிசைனர்கள் என்பதாலும், அஸ்ஸாமில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரத்யேகமாக பதப்படுத்தப்பட்ட மூங்கிலால் பேருந்து நிழற்குடையை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இப்போது தான் மிகவும் கடினமான பணி அவர்களுக்கு காத்திருந்தது; தானே முனிசிபல் கார்ப்பரேஷனுக்கான பேருந்து நிழற்குடை அமைக்கும் திட்டம் என்பதால் ஏராளமான அனுமதிகள் தேவைப்பட்டன. ஒரு அரசு துறையிடம் இருந்து தேவையான அங்கீகாரத்தையும் கையொப்பத்தையும் பெறுவது எவ்வளவு கடினம் என்பதை நாம் அனைவரும் அறிவோம்; இந்த வழக்கில் நாங்கள் ஐந்து வெவ்வேறு அரசாங்க அமைப்புகளை சமாளிக்க வேண்டியிருந்தது மற்றும் ஐந்து கையொப்பங்களைப் பெற வேண்டியிருந்தது'' என்று கூறி ரீத் சிரிக்கிறார்.

ஆனால் அவர்களின் விடாமுயற்சி பலனளித்தது மற்றும் தேவையான கையொப்பங்கள் பெறப்பட்டது. அடுத்து சிறந்த மூங்கிலைத் தேர்ந்தெடுக்கும் கேள்வி வந்தது; உள்ளூர் அல்லது சாதாரண மூங்கில் போதாது ஏனெனில் ஒரு மும்பை பருவமழை அத்தகைய கட்டமைப்பில் கடுமையான

## *ஏன் மூங்கில் சிறப்பானது*




*மூங்கிலின் சிறப்புக் குணங்களை பற்றி கூறுகையில், RC தானே இம்பீரியல் தலைவர் ரீத் குமார், முதலில் அது சுற்றுசூழலுக்கு உகந்தது மற்றும் நிலைதன்மை கொண்டது என்று கூறுகிறார்; மூங்கில்களை வேரோடு பிடுங்குவதற்குப் பதிலாக புல்லைப் போல வெட்டலாம், மேலும் இது தரமற்ற மண்ணை புத்துயிர் பெற உதவுகிறது. இது விரைவாகவும் அடர்த்தியாகவும் வளர்கிறது, இதனால் குறைந்த இடம் மற்றும் நீரே தேவைப்படும், அவைகளுக்கு பூச்சிக்கொல்லிகள் அல்லது உரங்கள் தேவையில்லை. ''கரிம மூங்கில் நூறு சதவிதம் மக்கும் தன்மை கொண்டது, அவை மண் அரிப்பைத் தடுக்கிறது மற்றும் நெறிமுறையாக வளர்ந்தால், உள்ளூர் பொருளாதாரங்களுக்கு உதவலாம் மற்றும் மரத்தின் தேவையை குறைக்கலாம்.''*

*மூங்கிலின் மற்ற நன்மைகள் என்னவென்றால், அது மென்மை யானது, நுண்ணுயிர் எதிர்ப்பு, நீர் எதிர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் நல பண்புகளைக் கொண்டுள்ளது; அது கூர்மையான அல்லது கடினமான கூறுகளைக் கொண்டிருக்கவில்லை மற்றும் அவற்றில் உள்ள நுண்ணிய துளைகளின் காரணமாக சிறந்த காற்றோட்டத்தை வழங்குகிறது.*

*''மூங்கிலில் உள்ள வெப்பநிலை சீரமைக்கும் பண்புகள் வானிலை வெப்பமாக இருக்கும் போது உங்களை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றன என்பதை எங்கள் ஆராய்ச்சி காட்டுகிறது. அவற்றின் காற்றோட்டம் மற்றும் ஈரப்பதத்தை உறிஞ்சும் தன்மை வெப்பமான நாட்களில் வசதியாக இருக்க அனுமதிக்கிறது. மூங்கில் சூரியனின் தீங்கு விளைவிக்கும் UV கதிர்களிடமிருந்து பாதுகாக் கிறது, UV கதிர்வீச்சை 97.5 சதவிதம் வரை வடிகட்டுகிறது. இயற்கை மூங்கில் ஹைபோஅலர்ஜெனிக் ஆகும்; இது உணர்திறன் வாய்ந்த சருமத்திற்கு ஏற்றது, ஏனெனில் இது ஒவ்வாமை எதிர்வினைகளை ஏற்படுத்தாது'' என்கிறார் சங்க செயலாளர் ஜியா லாட்.*

சேதத்தை ஏற்படுத்த போது மானதாக இருக்கும். எனவே, இந்திய பசுமைக் கவுன்சில் கட்டிட விதிமுறைகளால் அங்கீகரிக்கப்பட்ட, வில்லாக்கள் மற்றும் ஓய்வு விடுதிகளுக்குப் பயன்படுத்தப்படும் அஸ்ஸாமின் உயர்ரக மூங்கில்களைப் பெற முடிவு செய்யப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் மற்ற இரண்டு நோக்கங்கள் செயல்படுத்தப்பட்டன, அது ஸ்வச் பாரத் அபியானுக்கு மட்டுமல்லாமல் மற்றொரு அரசாங்கத் திட்டமான- பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய மூங்கில் திட்டம் மற்றும் தேசிய மூங்கில் மிஷனிற்கும் பங்களிக்கப்பட்டது என அவர் சுட்டிக்காட்டினார். இந்தியாவில் பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தடுப்பது அல்லது குறைப்பது மற்றும் மூங்கிலைப் பரவலாகப் பயன்படுத்துவதன் மூலம் வருமானத்தை ஈட்டி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஆதரிப்பது தான் இந்தத் திட்டத்தின் நோக்கம்; அனைத்து நோக்கங்களும் ரோட்டரியின் நோக்கங்களுடன் ஒற்றுப்போனது.

மூங்கில் தொழில்நுட்பத்தில் பணிபுரியும் சிறப்பு இன்டீரியர் டிசைனர்களின் கட்டணம் உட்பட, அத்தகைய நிழற்குடையின் செலவு சுமார் ரூ.6 முதல் 7 லட்சம் வரை இருக்கும், ஆனால் வடிவமைப்பாளர்கள் தன்னார்வலர் களாக பணி புரிந்ததால் சங்கத்தால் செலவை ரூ.3 லட்சத்தில் கட்டுப்படுத்த முடிந்தது. ஒரு வழக்கமான சிமெண்ட்/ஸ்டீல் பேருந்து நிழற் குடையானது TMCஆல் தயாரிக் கப்படும் போது, அது மொத்தமாக கொள் முதல் செய்யப்படும் கட்டணங்களின் அனுகூலத்தைப் பெறுவதால் சுமார் ரூ.2 லட்சம் மட்டுமே செலவாகும்.



இந்த மூங்கில் கட்டமைப்பின் நீண்ட ஆயுளைப் பற்றி கூறு கையில், மூங்கில், வில்லாக்கள் மற்றும் ஓய்வு விடுதிகளுக்காக சிறப்பாகச் பதப் படுத்தப்படுவதால் அவை 10 முதல் 12 ஆண்டுகள் வரை நீடிக்கும் என்று அவர் கூறுகிறார்.

பாலி கார்பனேட் தாள்களால் மூடப்பட்டுள்ளதால், மழையின் போது நீர் கசிவு ஏற்படாமல் கூரை பாதுகாக்கப்பட்டுள்ளது. மூங்கிலால் செய்யப்பட்ட அழகான குப்பைத் தொட்டி களும், எளிதில் அகற்றக்கூடிய வகையில் இங்கு வைக்கப் பட்டுள்ளன. திருடும் நபர்களுக்கு அவை அளிக்கும் சலனம் குறித்த கேள்விக்கு, அவை சிமெண்டால் பதிக்கப் பட்டிருப்பதால் அது சாத்தியமில்லை! என ஜியா சிரித்துக்கொண்டே கூறுகிறார்: மேலும் இடத்தின் பாதுகாப்பை அதிகரிக்க ரோட்டேரியர்களால் கேமராக்களும் நிறுவப்பட்டுள்ளன. இந்த பேருந்து நிழற்குடையை மூன்று ஆண்டுகளுக்கு சங்கம் பராமரிக்கும் என்று TMCக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

தொடக்க விழாவில் IPDG கைலாஷ் ஜெதானி மற்றும் TMC கமிஷனர் அபிஜித் பங்கர் ஆகியோர் உள்ளூர் சமூகத்திற்கு செய்த சேவைக்காக சங்க உறுப்பினர்களைப் பாராட்டினர். ரோட்டரியுடன் இணைந்து, இதுபோன்ற புதுமையான திட்டங்களுக்கான முன்மொழிவுகள் பரிசீலிக்கப் பட்டு வரவேற்கப்படும் என்று பங்கர் கூறினார்.

இந்த வழக்கத்திற்கு மாறான பேருந்து நிறுத்தத்திற்கு உள்ளூர் சமூகம் மற்றும் பிற சங்கங்களின் நடவடிக்கை பற்றி ரீத் கூறுகையில், “நிச்சயமாக, இந்த நிழற்குடை தனித்துவ மானது என்பதால், ஆச்சரியமான உணர்வு ஏற்படுத்தியுள்ளது. இன்னும் சில சங்கங்கள் ஆர்வமாக எங்களை அணுகியுள்ளனர், மேலும் TMC கமிஷனரும் தன் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார், மேலும் இந்த செயல்முறையை நாங்கள் அறிந்திருப்பதால் மற்றும் எங்கள் சங்கத்தில் திறமையான வடிவமைப்பாளர்கள் இருப்பதால் நாங்கள் மகிழ்ச்சியுடன் உதவுவோம்.■

ADVT.

# BLOOD BANK EQUIPMENT

## Precision

that ensures you don't have to use a microscope to view the happiness



- 4.3" Colour HMI with touch screen
- 200000 data storage capacity
- Configurable maintenance reminder
- 7 days circular chart recorder
- Caster wheels for ease of mobility
- Self-diagnostic system with error messages
- Email, SMS and call alert up to 15 users
- Connectivity to central monitoring software
- Multilevel password protected HMI
- High speed ethernet connectivity
- Multi-level password protected HMI
- Micro controller based programs
- Frost free refrigeration system
- Micro controller based programs

- Blood Collection Monitor
- Blood Donor Couch
- Blood bag tube sealer
- Cryofreeze (-80.0°C )
- Plasma Freezer (-40.0°C )
- Laboratory Centrifuge
- Cryoprecipitate bath
- Plasma Thawing bath
- Platelet Incubator and agitator
- Blood Bank Scale
- Centrifuge Equaliser
- Walk in Blood Bank Refrigerator
- Laboratory refrigerators
- Plasma expressor
- Laminar air flow



Refrigerated Centrifuge



Lab refrigerator



Blood Bank Refrigerator



Platelet incubator



Ultra Plasma freezer

**Labtop Instruments Pvt. Ltd.**

ISO 13485 : 2012

Labtop House, Plot No. 59, Waliv Phata, Sativali Road, Vasai (E),
Dist - Palghar - 401208, Maharashtra, India. Tel.:+918446053761 to 70 (10 lines)
Email: info@labtopinstruments.com
Web: www.labtopinstruments.com

LABTOP®
Quality Lab Equipment

# இளைஞர்களின் எதிர்காலம் கருதி அவர்களையும் ஈடுபடுத்துங்கள்: பானர்ஜி

ரஷீதா பகத்

இன்று கோவிட் பற்றிய பயம் தணிந்திருக்கலாம். ஆனால், மக்கள், குறிப்பாக இளைஞர்கள், ஐ.ஐ.டி. போன்ற படிப்புகள் படித்தவர்கள் மனதில் எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது. எப்படி வாழப்போகிறோம் என்ற கவலையும் அவர்கள் மனதில் உள்ளது. நான் மருத்துவர் அல்ல, நோய்க்கு மருந்து கொடுப்பதற்கு. ஆனால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை முழு ஈடுபாட்டில் வைத்திருப்பது இதற்கு தீர்வாகலாம் என்றார் PRIP கல்யாண் பானர்ஜி.

2024–25-ஆம் ஆண்டில் 3233 புதிய மாவட்டத்தின் தலைவராக பொறுப்பேற்கும் DGN மஹாவீர் போத்ரா மற்றும் அடுத்த ஆண்டு DGND ஆக பொறுப்பேற்கும் D தேவேந்திரன் ஆகியோருக்கு சென்னையில் நடந்த பாராட்டு விழாவில் கல்யாண் பானர்ஜி உரையாற்றினார்.

ரோட்டரி நியூஸ் இதழின் சென்ற இதழில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் கார்டன் மெக்கினலியின் சென்னை வருகையைப் பற்றி படித்ததாக அவர் கூறினார். அவர், யாரும் பேசாத ஒரு தலைப்பில் பேசி அனைவரின் மனதைத் தொட்டார். அவர் பேசியது மனநல பிரச்னைகள் பற்றியது. நம்நாட்டில் உள்ள ரோட்டேரியன்கள் எண்ணற்ற சமூக சேவைத் திட்டங்களை உருவாக்கி, அதைச் செயல்படுத்த நிதியும் திரட்டியுள்ளனர். ஆனால், மெக்கினலி சொன்ன விஷயம் யாரும் அதிகம் கவனம் செலுத்தாததாக இருக்கலாம்.

ஆனால், குஜராத்தில் நான் வசிக்கும் வாபியில், வாபி ரோட்டரி சங்கம், ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தி நிர்வாக கல்லூரியை நடத்தி வருகிறது. இதைச் செய்வது இளம் தலைமுறையினருக்கு வெற்றிகளையும், ரோட்டேரியன் களான எங்களுக்கு மகிழ்ச்சியையும், சமூகத்தினருக்கு திருப்தியையும் அளித்துள்ளது.

போலியோவை முற்றிலுமாக ஒழிக்க ரோட்டரி தொடர்ந்து போராடி வருவது பற்றியும் மெக்கினலி பேசினார். துரதிருஷ்டவசமாக ரோட்டரி உலகத்தினர் போலியோ கிட்டத்தட ஒழிக்கப்பட்டு விட்டது. இனி அடுத்த பிரச்னைக்கு போகலாம் என்று நினைக்கின்றனர்.

போலியோ தடுப்பூசி, சொட்டு மருந்து கொடுக்கும் பணி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிதி ஆதரவு பெறுவது உள்ளிட்ட பணிகள் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் முழுமையாக ஒழிக்கப்படும் வரை தொடரும் என்று அவர் கூறினார்.

1990-களில் தாம் அடிக்கடி சென்னை வந்துள்ளதை பானர்ஜி நினைவுகூர்ந்தார். இங்கு நான் கிருஷ் சிட்டாலேவை (மெட்ராஸ் ரோட்டரி சங்கம்) அடிக்கடி சந்தித்து உரையாடியது நினைவிருக்கிறது.



தட்டம்மை நோயை ஒழிப்பதற்கு போராடிய தலைவர்களில் அவரும் ஒருவர். அதன் பிறகு தான் போலியோவை ஒழிப்பதற்கான நம் போராட்டம் தொடங்கியது. அதில் நாம் வெற்றியும் கண்டோம். அப்போது நான் பல இரவுகளை மறைந்த PDG இராமகிருஷ்ண ராஜாவின் போயஸ் கார்டன் வீட்டில் தங்கியிருக்கிறேன். அவரது மனைவி ராஜலட்சுமி தயாரித்து கொடுத்த தோசைகளை விரும்பி சாப்பிட்டிருக்கிறேன். அதன் பிறகு பலமுறை மாவட்ட மாநாடுகளில் பங்கேற்றிருக்கிறேன். ரோட்டரி இயக்குநர் வெங்கி, மாவட்ட ஆளுநராக இருந்தபோதும் நான் சென்னைக்கு வந்திருக்கிறேன். சென்னையில் சமீபத்தில் மறைந்த ரேகா ஷெட்டியையும் சந்தித் திருக்கிறேன். அவர் எனக்கு பல புத்தகங்களை பரிசாக கொடுத்துள்ளார். முன்னாள் இயக்குநர் P T பிரபாகரையும் அவரது இல்லத்தில் சந்தித்திருக்கிறேன். ரோட்டரி மற்றும் கிரிக்கெட் குறித்து நாங்கள் விரிவாக பேசுவோம் என்று நினைவு கூர்ந்தார்.

RID 3232 IPDG நந்தகுமாரின் சிறப்பான தலைமைக்காக அவரை பாராட்டினார். சுமார் 7,400 உறுப்பினர்களைக் கொண்ட அந்த சங்கம் பிரிக்கப்பட உள்ளது. அதாவது ஒரு ஆண்டுக்குப் பிறகு இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் தலா 3,700 உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பார்கள். இதிலிருந்தே சென்னையில் ரோட்டரியின் அபரிமிதமான வளர்ச்சியைப் புரிந்து கொள்ளலாம். பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரிஜனலாக தொடங்கப்பட்ட மாவட்டம் 3230 பின்னர் 3231 மற்றும் 3232-களாகப் பிரிக்கப்பட்டது. இப்போது மீண்டும் இரண்டாக பிரிக்கப்படுகிறது.

ரோட்டரி இந்தியாவில் புதிதாக பூத்துக் குலுங்கி இரட்டிப்பாகிறது. ஆனால், ரோட்டரி தொடங்கப்பட்ட நாடுகளில் அவை சுருங்கிக் கொண்டே வருகிறது. அதனால் இன்றைய ஹீரோக்களிடம் நான் கேட்க விரும்புவது என்ன வென்றால் உங்கள் ஆண்டில் ரோட்டரியை எப்படி ஒளிரச் செய்யப் போகிறீர்கள் என்பதுதான்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ரோட்டரி இயக்குநர் A S வெங்கடேஷ், எதிர்காலத்தில் மாவட்ட ஆளுநர்களாக வரவிருக்கும் போத்ரா மற்றும் தேவேந்திரனுக்கு சில அறிவுரைகளை வழங்கினார். முதலில் அவர்கள் தங்கள் உடல்நலத்தை கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கும். ஏனெனில் அவர்கள் தங்கள் ஆண்டுக்கு மட்டுமல்ல, தாங்கள் ஆளுநராக இருக்கும் காலத்திலும் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும் என்றார்.

அடுத்து அவர் S S (Silence and Smile) பார்முலாவை ஒவ்வொரு மாவட்ட ஆளுநர்களும் பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார். முதல் விஷயம் என்னவென்றால் அமைதியாக இருப்பது. தேவை யில்லாமல் பேசக்கூடாது. இல்லையென்றால் பிரச்னையில் சிக்கிக்கொள்ள வேண்டி வரும்.

PRIP *கல்யாண் பானர்ஜி மற்றும்* PRID *பாஸ்கர் அவர்களுடன்* DGN *மஹாவீர் போத்ரா (இடமிருந்த 3வது), அவர் மனைவி ஜெயஸ்ரீ,* DGND D *தேவேந்திரன், அவர் மனைவி அர்ச்சனா மற்றும்* PDG R *ஸ்ரீனிவாசன் ஆகியோர் கௌரவிக்கபடுகின்றனர்.* PDGs *நாசர், முத்துபழனியப்பன், நந்தகுமார், அவர் மனைவி சுமேதா மற்றும் மாலா பாஸ்கர் ஆகியோரும் உள்ளனர்.*





PRID AS *வெங்கடேஷ் மற்றும்* PDG *நாசர்.*

எனவே அமைதியாக இருக்க வேண்டும். மௌனமும் புன்னகையும் உங்கள் பதவிக்காலத்தை வெற்றி கரமாக கொண்டு செல்லும் என்றார்.

எனது சொந்த மற்றும் பிற ஆளுநர்கள் அனுபவத்தின் அடிப்படையில், உங்களுக்கு இது மன அழுத்தம் தரும், சவால்கள் நிறைந்த ஆண்டாக இருக்கலாம். பதவியின் அடிப்படையில் நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டி யிருக்கும். உங்களுக்கு நிர்பந்தங்கள் வரலாம். ஆனால், உண்மை என்ன வெனில் மாவட்டம் உங்களை தலைவராக தேர்ந்தெடுத்துள்ளது. அதாவது உங்கள் தலைமை மீது நம்பிக்கை வைத்துள்ளனர். எனவே அதை காப்பாற்றும் வகையில் நீங்கள் செயல்பட வேண்டியிருக்கும் என்றார்.

இந்த ஆண்டு உங்களுக்கு கிடைக்கும் நேரத்தில் ஒவ்வொரு சங்கத்தையும் அதன் பலம் என்ன, பலவீனம் என்ன. எந்த வகையான திட்டங்களைச் செயல்படுத்தலாம், வேறு ஏதாவது செய்யமுடியுமா என்பதை புரிந்துகொள்ள செல விடுங்கள் என்று வெங்கடேஷ் அறிவுறுத்தினார்.

போத்ரா மற்றும் தேவேந்திரனை வாழ்த்திய PRID C பாஸ்கர், நிகழ்வை ஒருங்கிணைத்த ISAK நாஸர் தலைமையிலான ஏற்பாட்டுக் குழுவினரை பாராட்டினார்.

எல்லோருக்கும் மாவட்ட ஆளுநராகும் வாய்ப்பு கிடைப் பதில்லை. இது ஒரு அரிய வாய்ப்பு என்பதை எனது அனுபவத்தில் உணர்ந்து கொண்டேன். உங்கள் சங்கம் மற்றும் மாவட்டத்துடன் மட்டுமே உங்களது வெளிப்பாடு இருக்கலாம். ஆனால், ரோட்டரி ஆளுநர் என்ற முறையில் நீங்கள் எங்கெல்லாம் செல்கிறீர்களோ அங்கெல்லாம் உங்களுக்கு மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். உலகின் மிகப்பெரிய சேவை நிறுவனத்தை பிரதிநிதித்துவ படுத்துகிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கடவுள் உங்களுக்கு நல்லது செய்யும் வாய்ப்பை கொடுத்திருக்கிறார் என்றார்.

நான் மாவட்ட ஆளுநராக இருந்த போது இந்தியாவின் நிலைமை முற்றிலும் மாறு பட்டதாக இருந்தது. உலகளாவிய மானியங்களுக்காக நாங்கள் மற்ற நாடுகளைச் சேர்ந்த ரோட்டேரியன்களை நாடிச் செல்ல வேண்டியிருந்தது. இன்று இந்தியாவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு நன்றி. இன்று உலகில் TRF-க்கு அதிக நன்கொடை அளிக்கும் இரண்டாவது மிகப்பெரிய நாடாக நாம் இருக்கிறோம். கடந்த 8 ஆண்டுகளில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

உங்களது முன்னோடிகள் என்ன செய்தார்கள் என்று பார்க்காதீர்கள். நீங்களே ஒரு புதிய அட்டவணையை உருவாக்குங்கள் என்றார் அவர். இன்றைய ரோட்டேரியன்கள் வேடிக்கையை விரும்புகிறார்கள். அதை அவர்களுக்கு கொடுங்கள். நம்மை பொருத்தவரை மக்கள் ரோட்டரிக்குள் வரவேண்டும். வேடிக்கையாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் சமூக சேவையில் ஈடுபடவும் தயாராக இருக்க வேண்டும் என்பதுதான். ஸ்டீவ் ஜாப்ஸ் கூறியதை மேற்கோள்காட்டிய அவர், சாதாரண சங்கத்தை சுறு சுறுப்பான, துடிப்பான சங்கமாக மாற்றுவதற்கு ஆளுநர்களுக்கு ஆர்வம், கவனம், ஆற்றல் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு தேவை. அசாத்தியமான கற்பனைகளுடன் வித்தியாசமான முறையில் செயல்பட வேண்டும். பேச்சுத்திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் மைக்கிற்கு முன்னால் எப்படி பேசுகிறீர்கள், மின்னஞ்சலில் எப்படி தகவல்கள் அனுப்புகிறீர்கள் என்பதை வைத்துத்தான் மக்கள் உங்களை எடைபோடுவார்கள். உங்கள் தகவல் தொடர்புகளை மேம்படுத்து வதற்காகத்தான் ரோட்டரி உங்களை முன்கூட்டியே தேர்வு செய்துள்ளது என்றார்.

IPDG நந்தகுமார் மற்றும் PDG நாஸர் இருவரும் உள்வரும் ஆளுநர் களுக்கு பாராட்டு தெரிவித்தனர். தங்கள் மாவட்டம் அவர்களிடமிருந்து பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளது என்றும் அவற்றை நிறைவேற்ற பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

போத்ரா, தேவேந்திரன் ஆகியோருடன் மாவட்டத்தின் CoL பிரதிநிதியாக தேர்ந்தெடுக் கப்பட்ட PDG சந்திரமோகன் மற்றும் இயக்குநர்கள் நியமனக் குழுவில் இடம்பெற்றுள்ள PDG ஆர்.ஸ்ரீனிவாசன் ஆகியோரும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். 3231 மாவட்ட DG J K N பழனி, DGE சரவணன், DGN வினோத் சாரோகி (இருவரும் RID 3234) மற்றும் தமிழக மாவட்டங்களைச் சேர்ந்த PDG-கள் பலர் இதில் பங்கேற்றனர்.■

Rotary PEOPLE OF ACTION

# கை இழந்தோருக்கு எலக்ட்ரானிக் கைகள்

ரோட்டரி செய்திக்குழு

RC ஹிரானந்தானி எஸ்டேட், RID 3142, RC பூனா டௌன்-டவுன், RID 3131, இனாலி அறக்கட்டளை, நியூ எரா இன்ஃபர்மாடிக் உடன் இணைந்து நடத்திய இரண்டு நாள் செயற்கைக் கை, கால் வழங்கல் முகாமில், கை இழந்த 65 பேருக்கு மின்கலன் மூலம் இயங்குகிற எலக்ட்ரானிக் 'இனாலி' கைகள் பொருத்தப்பட்டன.

இந்த முகாம், இந்தச் சங்கம் நடத்துகிற, தானே-யில் உள்ள ஹிரானந்தானி அறக்கட்டளைப் பள்ளியில் நடைபெற்றது. இனாலி அறக்கட்டளையின் CSR நல்கை ஒன்றின்கீழ் இந்தச் சங்கம் 175 பொருத்தல்களைப் பெற்றது, "இந்த முகாமுக்கென மகாராஷ்டிரம் முழுவதிலுமிருந்து 1,895 பேர் பதிவு செய்திருந்தார்கள். RC பூனா டௌன்-டவுன் இனாலி தன்னார்வலர்கள் உதவியுடன் நாங்கள் அவர்களை ஆராய்ந்து, செயற்கைக் கைக்கான தேவையை முகாமுக்கு மூன்று வாரங்களுக்குமுன் மதிப்பிட்டோம்" என்றார் திட்டத் தலைவர் Dr நம்ரதா ஸ்ரீவஸ்தவ். இன்ஃபோசிஸ் சமூகப் புதுமைச் சிந்தனையைச் சேர்ந்த ஜேம்ஸ் டைசன், இனாலி அறக்கட்டளையின் நிறுவனரான நாஸ்காம் விருது பெற்ற பிரசாந்த் காடெ இருவரும் பலன் பெறுவோரை மதிப்பிடுவதில் இச்சங்கத்துக்கு உதவினார்கள்.

பலன் பெறுவோர் தங்களுடைய அன்றாடப் பணிகள் மற்றும் செயல்பாடுகளுக்குச் செயற்கைக் கையைப் பயன்படுத்துவது எப்படி என்று பயிற்சி பெற்றார்கள். மேலும் 91 பேருக்குப் புணே-யில் உள்ள இனாலி அறக்கட்டளை மையத்தில் செயற்கைக் கை, கால்கள் பொருத்தப்படும்.

மாவட்டங்களுக்கிடையிலான இந்தச் செயற்கைக் கை, கால் பொருத்தல் முகாமைப் பெரிய அளவில் வெற்றி பெறச் செய்த இந்தச் சங்கத்தின் தலைவர் அமித் ராஜெ, டாக்டர் நம்ரதா, இணைத் தலைவர்கள் அருணிமா சிங் மற்றும் அனுபா கராபெ ஆகியோரை IPDG கைலாஷ் ஜெதானி பாராட்டினார்.

பலன் பெற்றோரில் ஒருவரான தனஸ்ரீ சம்பாஜி போசலே எலக்ட்ரானிக் கையைப் பெற்றபின் உணர்ச்சிவயப்பட்டார். அவருடைய கணவர் சொன்னார், "என் மனைவிக்குப் பிறப்பிலேயே இந்தக் கை இல்லை. ஆனால், அவர் படித்துள்ளார், எனக்கும் என் மகனுக்கும் பிறருக்கும்கூட ஒரே கையுடன் எல்லாப் பணிகளையும் செய்கிறார். இப்போது, இந்தப் புதிய கையின்மூலம், நன்றாக இரு சக்கர வண்டி ஓட்டவேண்டும் என்ற அவருடைய கனவு நனவாகும்."

PRID அசோக் மகாஜன், DG மிலிந்த் குல்கர்னி, DGN ஹர்ஷ் மகோல் ஆகியோர் முகாமிற்கு வந்தார்கள். இந்த இனாலி கை இரண்டு ஆண்டு உத்தரவாதத்துடன் வருகிறது. முந்தைய ஐந்து ஆண்டுகளில் இனாலி அறக்கட்டளை 7,000 மாற்றுத் திறனாளிகளுக்கு இப்படிப்பட்ட செயற்கைக் கை, கால்களை வழங்கியுள்ளது. ■

*முகாமில் PRID அசோக் மகாஜன், திட்ட ஒருங்கிணைப்பாளர் நம்ரதா ஸ்ரீவஸ்தவ் ஆகியோர் பயனாளிகளுடன்.*





# Bridging Gaps, Empowering Dreams

*இயக்குநர்* 2022–24, RC *கராச்சி கர்சாஜ், இன்ட், பாகிஸ்தான்*

பாகிஸ்தானைச் சேர்ந்த முதல் ரோட்டரி இயக்குநர். இவர் 1987ல் ரோட்டரியில் இணைந்தார், 1993ல் RC கராச்சி கர்சாஜ் பதிவு உறுப்பினர் ஆனார். இவர் பாகிஸ்தானில் RILM நிறுவனர் மற்றும் தலைவர் ஆவார். இவர் Service Above Self விருது, TRFன் Distinguished Service விருது மற்றும் TRF Citation for Meritorious Service விருது பெற்றுள்ளார். இவரும் இவருடைய மனைவி உஜ்மா-வும் ரோட்டரி அறக்கட்டளையின் Major Donors.



**யோஷியோ சாடோ**

*இயக்குநர்* 2022–24, RC *ஒகாயாமா-சவுத், ஜப்பான்*

1989லிருந்து ரோட்டரியனாகச் சேவையாற்றி வரும் யோஷியோ மாவட்டம் 2690 ரோட்டரி அறக்கட்டளைத் தணிக்கைக் குழுத் தலைவராகவும் ரோட்டரி ஜப்பான் நூற்றாண்டுச் செயற்குழு மற்றும் RI ஜப்பான் இளைஞர் பரிமாற்றப் பல மாவட்ட உறுப்பினராகவும் ரோட்டரிக்குச் சேவையாற்றியுள்ளார். யோஷியோ AKS உறுப்பினராக, பால் ஹாரிஸ் சமூக உறுப்பினராக, Major Donor மற்றும் Bequest Society உறுப்பினராக TRFஐ ஆதரிக்கிறார்.



**லேனா J ம்ஜெர்ஸ்கௌக்**

*இயக்குநர்* 2022–24, RC *எனெபக்க், நார்வே*

லேனா 1997ல் ரோட்டரியில் இணைந்தார், அவருடைய சங்கத்தின் முதல் பெண் உறுப்பினராகவும், அப்போது அதன் மிக இளைய உறுப்பினராகவும் ஆனார். RC, CoL பிரதிநிதியாக, RIPRஆகச் சேவையாற்றியுள்ளார். இவர் Benefactor மற்றும் Major Donorஆக TRFஐ ஆதரிக்கிறார்.



**பெத் ஸ்டப்ப்ஸ்**

*இயக்குநர்* 2023–25, RC *மேரிவில்லெ, அமெரிக்கா*

ஸ்டப்ப்ஸ் 1991ல் ரோட்டரியில் பதிவு உறுப்பினர் ஆனார். இவர் தன்னுடைய மாவட்டத்தின் நிதி, அறக்கட்டளை மற்றும் தலைமைப்பண்பு மேம்பாடு மற்றும் கல்விக் குழுக்களின் தலைவராகத் தன் மாவட்டத்துக்குச் சேவையாற்றியுள்ளார். இவர் 21 பன்னாட்டு மாநாடுகளில் பங்கேற்றுள்ளார், ஐக்கிய நாடுகளில் ரோட்டரி நாளுக்கென நியூ யார்க் நகரத்துக்குப் பயணம் செய்துள்ளார். இந்தியாவில் போலியோ சொட்டு மருந்து முகாம்களில் சேவையாற்றியுள்ளார். சங்கக் கூட்டுப்பணித் திட்டங்களுக்கென மெக்சிகோ-வுக்குப் பயணம் செய்துள்ளார், இவரும் இவருடைய கணவர் டோனியும் AKS உறுப்பினர்கள்.



**அனிருதா ராய் சௌத்ரி**

*இயக்குநர்* 2023–25, RC *கல்கத்தா மெகா சிட்டி, இந்தியா*

ராய் சௌத்ரி 1995ல் ரோட்டரியில் பதிவு உறுப்பினர் ஆனார். RPIC, ARC, ARFC, ஐந்து முறை RIPR, TRFன் தொழில்நுட்ப ஆலோசகர்கள் குழு உறுப்பினராகச் சேவையாற்றியுள்ளார். இவர் 27 மில்லியன் பள்ளி மாணவர்களை இலக்காகக் கொண்டு இலவச டிஜிட்டல் உள்ளடக்கத்தை வழங்கும் RILMன் செயற்குழு உறுப்பினராகச் செயலாற்றுகிறார். இவர் Service Above Self விருது, Citation for Meritorius Service, Distinguished Service விருதைப் பெற்றுள்ளார். இவரும் இவருடைய இணையர் ஷிப்ராவும் நிலை 3 Major Donors, Bequest Society உறுப்பினர்களாகவும் அறக்கட்டளையை ஆதரிக்கிறார்கள்.



**யியோங் ஹோ யுன்**

*இயக்குநர்* 2023–25, RC *மசான் சவுத், கொரியா*

யுன் 1983ல் ரோட்டரியில் இணைந்தார், 2013–14ல் DG ஆனார். இவர் நன்கொடை நிறுவல்/மிகப் பெரிய பரிசுகள் ஆலோசகராக மூன்று ஆண்டுகள் சேவையாற்றிய போது, தன் பகுதியில் 51 கூடுதல் AKS உறுப்பினர்களைக் கண்டறிய உதவினார். அத்துடன், ARPICஆகவும், இரண்டு முறை பயிற்சித் தலைவராகவும் இவர் RIக்குச் சேவையாற்றியுள்ளார்.

யுன் Service Above Self விருது, TRFன் Distinguished Service விருதைப் பெற்றுள்ளார். இவரும் இவருடைய மனைவி ஹோ சுக் லீ-யும் AKS Trustees Circle உறுப்பினர்கள்.



**ஜான் ஹ்யூக்கோ**

*பொதுச் செயலாளர் மற்றும்* CEO, RC *க்யிவ், உக்ரைன்*

ஜான் ஹ்யூக்கோ RI மற்றும் TRFன் பொதுச் செயலாளர் மற்றும் CEO ஆவார். இவர், இவான்ஸ்டனில் உள்ள RI தலைமை அலுவலகம், 6 பன்னாட்டு அலுவலகங்களில் பலவிதமான 800 பணியாளர்களை வழிநடத்துகிறார். இவரும் இவருடைய கூட்டாளர் மார்கா-வும் Major Donors.

TRF அறங்காவலர்கள் அடுத்த இதழில்

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

உலகெங்கும் 130க்கும் மேற்பட்ட விற்பனையாளர்களுக்கு ரோட்டரி சின்னங்களைக் கொண்ட பொருட்களை உருவாக்கவும் விற்கவும் உரிமம் வழங்கியுள்ளது RI. உரிமம் பெற்ற விற்பனையாளர்களுடைய விற்பனையின் ஒரு பகுதி ரோட்டரிக்கு வழங்கப்படுகிறது, சங்கங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு வழங்கப்படும் செயல்பாட்டுச் சேவைகளுக்கு இது உதவுகிறது. நம்முடைய உரிமம் பெற்ற விற்பனை யாளர்களைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் ரோட்டரியை ஆதரிக்கிறீர்கள், தரமான, பிராண்ட் கொண்ட பொருட்களைப் பெறுகிறீர்கள். அனுமதியற்று உருவாக்கப்படும் பொருட்கள் ரோட்டரியின் பிராண்ட் அல்லது தோற்றத்தைப் பாதிக்கலாம். நம் விற்பனையாளர்களின் பட்டியலை இணையத்தில் காணலாம். உரிமம் பெறாத விற்பனையாளர்களை RI உரிமக் குழுவிடம் புகார் செய்யலாம். உங்கள் பார்வைக்கு, உரிமம் பெற்ற, இந்தியாவைச் சேர்ந்த விற்பனை யாளர்களுடைய பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

மேலும் தகவல்களுக்கு *rilicensingservices@rotary.org* அல்லது 847-866-4463ல் RI உரிமக் குழுவைத் தொடர்புகொள்ளுங்கள். சட்டம் மற்றும் பணி மனப்பான்மை மேலாளர் ராஜேஷ் ஆனந்த் அவர்களையும் *rajesh.anand@rotary.org* மற்றும் 011–42250144ல் தொடர்புகொள்ளலாம்.

| Licenced vendors | Address | E-mail ID & website |
|---|---|---|
| Better Services | 350, A to Z Industrial Estate, G K Marg, Lower Parel (West), Mumbai 400013 | better@betterservices.org www.better.in |
| Mohan Plastics Limited | 63, Roshanara Plaza Complex, Roshanara Road, New Delhi 110007 | mohanplastic@yahoo.com/ info@mohanindustries.org www.mohanindustries.org |
| Tej Brothers | 4806/24, Bharat Ram Road, Darya Ganj, New Delhi 110002. | tejbrothers@gmail.com www.tejbrothers.com |
| Sacheti & Company | Shivaji Nagar, Opposite Jain Temple, Kishangarh 305801, Rajasthan | sacheti_co@usa.net www.sacheti.org |
| Naveen Enterprises | 11, Naveen Mansion, 1st Main Road, 4th 'T' Block, Jaya Nagar, Bangalore- 560041 | naveen@naveenenterprises.net www.naveenenterprises.in |
| BK AD Gifts | 130 C, Kottur Road, Palayamkottai, Tirunelveli, Tamil Nadu 627002 | netparkkannan@gmail.com |

### இந்திய ரோட்டரி அறக்கட்டளை பங்களிப்புக்கான கட்டாயத் தேவைகள்

காசோலை/DD வழியாகச் செய்யப்படும் பங்களிப்புகளுக்கு, கொடையாளர் தகவல்கள் அனைத்தையும் (பெயர், உறுப்பினர் ID, நிதி வகை மற்றும் PAN) கொண்ட பங்களிப்புப் படிவம்/அறிமுகக் குறிப்பு. தொகை எதுவாக இருந்தாலும் PANஐக் கண்டிப்பாகக் குறிப்பிடவேண்டும். கொடையாளர் அல்லது அவருடைய குடும்பத்தால் கட்டுப்படுத்தப்படும் தொழில்/அறக்கட்டளைக் கணக்கிலிருந்து பங்களிப்பு செய்யப்பட்டால், பெருநிறுவனக் கடிதம்.

### Rotary.org வழியாக இந்திய ரோட்டரி அறக்கட்டளைக்குப் பங்களிக்க வழிகாட்டுதல்கள்

மாற்று ID உருவாக்கத்தைத் தவிர்க்கவும், உங்கள் பங்களிப்புக்கு உங்கள் சங்கத்தின் கீழ் சரியான நேரத்தில் அங்கீகாரம் பெறவும், *MyRotary* வழியாக உள்நுழை யுங்கள். *MyRotary* உள்நுழைவு இல்லாவிட்டால், அதை உருவாக்குங்கள், அல்லது, இணையத்தில் பங்களிக்கும் போது பயன் படுத்திய பதிவுசெய்த மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்துங்கள்.

குடும்ப அறக்கட்டளை/நிறுவனப்பங்களிப்புகளுக்கு, RISAOக்குக் காசோலை/வங்கி வரைவோலை அனுப்புங்கள். இந்தப் பங்களிப்புகளை என் ரோட்டரியில் செய்யவேண்டாம்.

உங்கள் 80-G ரசீதில் சரியான PAN குறிப்பிடப்படுவதற்கு, சமர்ப்பிக்குமுன் உங்கள் PANஐ மீண்டும் சரிபாருங்கள்.

### கற்றல் மையப் பயிற்சிகள்

ரோட்டரியன்கள், தலைவர்களாகிய நீங்கள், உங்கள் தலைமைப் பொறுப்பில் உங்களுக்கு உதவும் பல பயிற்சிகளை வழங்கும் ரோட்டரியின் இணையக் கற்றல் மையத்தை அணுகலாம். கொடையாளர்களை அடையாளம் காண்பதுபற்றிக் கற்றுக்கொள்ள, கற்றல் மையத்தில் நிதி திரட்டல் அடிப்படைகளை அணுகுங்கள், சிற்றேட்டு யோசனைகள், பார்வை வழிகாட்டிகள், PPTகள் மற்றும் நிதி திரட்டல் கருவிகளுக்கு, அறக்கட்டளை வழங்கல் கற்றல் தலைப்பை அணுகுங்கள். மேலும் தகவல்களுக்கு, பயிற்சிப் பட்டியலைப் பாருங்கள்.■

# பிளாஸ்டிக்கை தவிர்க்கும் வழிகள்

ப்ரீதி மேஹரா

*பிளாஸ்டிக்கை சார்ந்திருப்பதைக் குறைக்க உதவும் சில பயனுள்ள பரிந்துரைகள்.*

சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசாங்கங்களின் அனைத்து தடைகள் மற்றும் உற்சாகமான பிரச்சாரங்கள் நடந்தாலும், பிளாஸ்டிக் இன்னும் உலகெங்கிலும் இருக்கிறது. காய்கறி விற்பனையாளர் முதல் பெரிய கடைகள், உணவகங்கள் மற்றும் விமான நிறுவனங்கள் வரை, கேரி பேக்குகள், கட்லரிகள், பாட்டில்கள், காபி-கப் மூடிகள் மற்றும் ரேப்பர்கள் என எல்லா இடங்களிலும் பிளாஸ்டிக் அதன் ஆதிக்கத்தை காட்டுகிறது. பல மதிப்பீடுகளின்படி, நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பிளாஸ்டிக்கில் 90 சதவிகிதம் தூக்கி எறியப்பட்டு, குப்பைக் கிடங்குகளில் சேருகிறது அல்லது நமது நதிகளை அடைத்து, நமது கடல்களை மாசுபடுத்துகிறது.

இயற்கை அன்னையின் மீது பிளாஸ்டிக் சுமையைக் குறைக்க குடிமக்களாகிய நாம் நிச்சயமாக நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். முதலாவதாக, பிளாஸ்டிக் ஷாப்பிங் பையில் இருந்து ஆரம்பிக்கிறேன். ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் கூற்றுப்படி உலகம் ஒரு நிமிடத்திற்கு பத்து லட்சம் பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்துகிறது! பாலித்தின் ஷாப்பிங் பைகள் 1965-இல் ஸ்வீடிஷ் நிறுவனமான செல்லோப்ளாஸ்ட் நிறுவனத்தால் காப்புரிமை பெற்றது என்பதை நினைவில் கொண்டால் இது ஒரு அதிர்ச்சியூட்டும் புள்ளி விவரம் என்பது உங்களுக்கு புரியும். அதாவது 58 ஆண்டுகளில் இது ஒரு புதுமையான பொருள் என்பதிலிருந்து உலகம் தீர்க்க போராடும் ஒரு பெரிய பிரச்சனையாக வளர்ந்துள்ளது.

ஷாப்பிங் செல்லும் போது பிளாஸ்டிக் பைகளை வேண்டாம் என்று சொல்லி பிளாஸ்டிக் இல்லாத உலகத்திற்கான நமது முயற்சி களை ஆரம்பிக்கலாம். உள்ளூர் சந்தையில் இருந்து மளிகைப் பொருட்களை வாங்க குடும்ப உறுப்பினர்கள் பயன்படுத்துவதற்கு ஏராளமான துணிப் பைகளை வீட்டில் வைக்கலாம். சந்தர்ப்பம் வரும்போது பயன்படுத்துவதற்காக குடும்ப காரில் ஒரிரு பைகளை வைக்கலாம். பல மால்களில் நீங்கள் கொஞ்சம் கூடுதல் கட்டணம் செலுத்தினால் துணி அல்லது சணல் பைகளை வழங்கப் படுகின்றன.

நீங்கள் வீட்டில் உணவை ஆர்டர் செய்யும்போது அல்லது வாங்க



செல்லும்போது உணவுடன் தரப்படும் பிளாஸ்டிக் கட்லரிகளை வேண்டாம் என்று வலியுறுத்தலாம்.

பிளாஸ்டிக் பாட்டிலில் அடைக்கப்பட்ட தண்ணீர், நம்மில் பெரும்பாலோருக்கு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும். பொது இடங்களில் குடிநீர் இல்லாததால், 2022ஆம் ஆண்டில் $22.72 பில்லியன் சந்தை அளவுடன் பாட்டில் குடிநீர் இந்தியாவில் மிகப்பெரிய மற்றும் வளர்ந்து வரும் தொழிலாக மாறியுள்ளது, இது 2030-ஆம் ஆண்டில் $32.61 பில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல பிரபலமான பிராண்டுகள் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களுக்கு மாறுவதாகக் ஒருபுறம் கூற, ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பாட்டில்களை சுற்றுலா தலங்களில் நாம் காணலாம்.








மறுசுழற்சி செய்யக்கூடிய பாட்டில்கள் மற்றும் பேக்கேஜிங் ஆகியவற்றை கண்மூடித்தனமாக அப்புறப்படுத்துவதற்குப் பதிலாக சேகரித்து, மறுசுழற்சி செய்பவர்களுடன் தொடர்புள்ள காயிலான் கடைகளில் அவற்றை வழங்குவதே அடுத்த சிறந்த வழி. ஆனால் பெரும்பாலும் மக்கள் இந்த பாட்டில்களை கடற்கரையிலோ அல்லது தங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள குப்பைக் கிடங்கிலோ எறிந்து விடுகிறார்கள். பிளாஸ்டிக் குப்பை மக்காதது என்பதால், அவை 1,000 ஆண்டுகளுக்கும் மேலாக மண்ணில் இருக்கும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீங்கள் வாங்கும் பெரும்பாலான உணவுப் பொருட்கள் பிளாஸ்டிக் கொள்கலன்கள் மற்றும் பாக்கெட்டு களில் வருகின்றன. மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களால் செய்யப்பட்டதா என்பதை அறிய, பேக்கேஜிங்கில் உள்ள குறிப்பைப் பார்க்கவும். அப்படி இருந்தால், அதை மறுசுழற்சி செய்பவர்களிடம் அனுப்பலாம். குப்பைத் தொட்டியில் அதை அப்புறப்படுத்தாதீர்கள், அது பெரும்பாலும் நகரத்திற்கு வெளியே ஒரு குப்பைக் கிடங்கில் தான் சென்றடையும்.

1980களின் முற்பகுதியில் நாட்டைப் பற்றிக் கொண்ட சாஷே புரட்சி நம்மில் சிலருக்கு நினைவிருக்கலாம். தமிழ்நாட்டின் சிறிய நகரமான கடலூரில் தொடங்கிய அந்த மார்க்கெட்டிங் புரட்சி விரைவில் FMCG உற்பத்தியாளர்களை கவர்ந்தது. இன்று ஷாம்புகள், டூத்பேஸ்ட், டால்கம் பவுடர், தக்காளி சாஸ் மற்றும் தண்ணீர் உட்பட பல பொருட்கள் சாஷேக்களில் கிடைக்கின்றன.

ஆனால், நாடு முழுவதும் இவை தீவிர சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது இப்போது தெரியவந்துள்ளது. இந்தியாவின் கிராமப்புறங்களில் பிளாஸ்டிக் பாட்டில்கள், தண்ணீர்ப் பாக்கெட்கள் மற்றும் ஒருமுறை பயன்படுத்தும் அழகுசாதன பைகள் ஆகியவை ஓடைகள் மற்றும் ஆறுகளில் அடைப்பை ஏற்படுத்து கிறது. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், ஹோட்டல்களில் இலவசமாக வழங்கப்பட்டாலும் சாஷேக்களில் வரும் சோப்பு, ஷாம்பூகளை பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்து வார்கள். உண்மையில், சிறிய பாக்கெட்டு களை வாங்குவதை விட, நீண்ட காலம் நீடிக்கும் பெரிய கொள்கலன்களில் பொருட்களை மொத்தமாக வாங்குவது இன்றைய உலகில் புத்திசாலித்தனம்.

மத்திய சுற்றுச்சூழல் அமைச் சகத்தின் கூற்றுப்படி, இந்தியா ஆண்டுதோறும் 35 லட்சம் டன் பிளாஸ்டிக் கழிவுகளை உருவாக்குகிறது, மேலும் அதில் பெரும்பாலானவை சுத்திகரிப்பு அல்லது மறுசுழற்சி செய்யப்படு வதில்லை. இது காற்று மற்றும் நீரை மாசுபடுத்துகிறது மற்றும் சுற்றுச் சூழல் சீரழிவுக்கு குறிப்பிடத் தக்க பங்களிப்பை வழங்குகிறது. பூமியைக் காப்பாற்ற நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டிய நேரம் இது.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.



# ரோட்டரி ஆளுநர்



## மெகுல் ரத்தோட்

வழக்கறிஞர், RC அகமதாபாத் மெட்ரோ, RID 3055

### நீர்த் திட்டங்களுக்கு முக்கியத்துவம்

மெகுல் ரத்தோடை ரோட்டரிக்கு ஈர்த்தது, அதன் பன்முகத்தன்மைதான். “என்னுடைய மறைந்த தந்தை மருத்துவர் H V ரத்தோட் RC தீசா தலைவராகச் பணியாற்றினார். குழந்தையாக நான் அதைப் பார்த்தேன், அவருடைய சேவையால் ஈர்க்கப்பட்டேன். என் உடன்பிறந்தவரான PDG சசாங்க் ரத்தோட் எனக்கு ஊக்கம் அளிக்கிறார்” என்கிறார் DG ரத்தோட்.

இவர் 10 புதிய சங்கங்களைத் தொடங்கவும் 450 புதிய ரோட்டரியன்களைச் சேர்க்கவும் விரும்புகிறார், நீர் தொடர்பான திட்டங்களில் கவனம் செலுத்தவுள்ளார். ஜல் சஸ்க்ரதா (நீர் அறிவு) திட்டத்தின்மூலம் இந்தச் சங்கம் பள்ளிகள், கல்வி அமைப்புகளில் பல கூட்டுப் பணிகளின் வழியாகக் குறைந்தது ரூ.1.5 கோடி மதிப்புள்ள, நீர் தொடர்பான திட்டங்களில் ஈடுபடும்.

மருத்துவமனைகளுக்கு மருத்துவக் கருவிகள் கொடையளிக்கப்படும், ராஜஸ்தானில் ஒரு ரோட்டரி ரத்த வங்கி மேம்படுத்தப்படும். 20 பள்ளிகளும் 20 முதியோர் இல்லங்களும் புதுப்பிக்கப்படும். “நான் ஆண்டு நிதிக்கு $300,000 பங்களிக்க ஒவ்வொரு ரோட்டரியனிடமிருந்தும் $26.5 (1917ல் இந்தத் தொகையுடன் முதல் நன்கொடை நிறுவல் நிதி உருவாக்கப்பட்டது) திரட்ட விரும்புகிறேன். TRF இலக்கு $800,000.” இவருடைய மனைவி பாவனா ரோட்டரி நிகழ்வுகளை ஆர்வத்துடன் பின்பற்றுகிறார். இவருடைய மகன் அபிஜீத் ரோட்டராக்டர் ஆவார். ரத்தோடும் முன்பு ரோட்டராக்டராகச் செயல்பட்டவர்தான்.■



## சுவாதி ஹெர்கல்

தகவல் தொழில்நுட்ப அறிவுறுத்துநர், RC வாய் (Wai), RID 3132

### 100 கிராமங்களை மாற்றத் திட்டமிடுகிறார்

ரோட்டரியன்கள் “வாழ்க்கைகளை மாற்றுவதற்கு ஓய்வின்றி உழைப்பதைப் பார்த்து, 1999ல் நான் ரோட்டரிக்கு இழுக்கப் பட்டேன்” என்கிறார் சுவாதி ஹெர்கல். இவருடைய முதன்மை நோக்கம், இவருடைய சங்கங்கள் ஏற்கெனவே தத்தெடுத்துள்ள, அவற்றின் RCCக்கள் சமூகத் திட்டங்களைச் செய்துவருகிற 100 கிராமங்களை மாற்றுவதுதான். பரிவர்த்தன் என்ற திட்டம் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான 10 அம்சத் திட்டத்தின் வழியாகக் கிராமங்களை முன்னேற்றும் நோக்கத்தைக் கொண்டுள்ளது: திருஷ்டி, சிருஷ்டி, ஸ்வச்ச் (பள்ளிகளில் WASH), ஆஸ்தா (மாதச் சுழற்சித் தூய்மை), சக்ஷம், சுவயம், பூமி, ஜல் தாரா (ஆற்றோர மரக் கன்றுகள்), வித்யா மற்றும் ஆயி (தாய்).

இவருக்குப் பிடித்த முன்னெடுப்புகளில் ஒன்று, சதாரா மாவட்டத்தில் மூன்று கிராமங்களில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டு வருகிற மண் மறு உருவாக்கத் தொழில்நுட்பம் (SRT), இதில் பங்கேற்கும் 70 விவசாயிகளும் “இதனால் நல்ல அறுவடை, மண் தர மேம்பாடு உள்ளதாகச் சொல்கிறார்கள்.” SRT 1,000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குக் கொண்டு செல்லப்படும். NGOக்களின் உதவியுடன் சுமார் ஒரு லட்சம் மரக் கன்றுகள் நடப்படும். ரோட்டரி சங்கங்கள் இந்த ஆண்டு 10 அறுவைச் சிகிச்சை முகாம்களை நடத்தும். “என் இலக்கு 100க்கும் மேற்பட்ட மகிழ்ச்சிப் பள்ளிகளை அமைப்பது. மின் ஆசிரியர் திட்டத்தின்கீழ், 1,000க்கும் மேற்பட்ட கிராமப்புறப் பள்ளிகளில் டிஜிட்டல் வகுப்பறைகள் நிறுவப்பட்டு அவை டிஜிட்டல் பள்ளிகளாக மாற்றப்படும்” என்றார். இவருடைய TRF இலக்கு, $500,000.■

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்



**P பரணிதரன்**
கட்டட வல்லுனர், RC காஞ்சிபுரம் டெம்பிள் சிட்டி, RID 3231

## எழுத்தறிவு, நலன் சுற்றுச்சூழலில் கவனம்

இந்த மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் 1 ஜூலை அன்று ஒரு மணிநேரத்தில் 245 கிராமங்களில் ஒரு லட்சம் மரக் கன்றுகளை நட்டுள்ளார்கள், அதன்மூலம் உலகச் சாதனைப் புத்தகத்தில் நுழைந்துள்ளார்கள். “இந்த ஆண்டு நாங்கள் ரூ.1 கோடி மதிப்புள்ள பலவிதமான திட்டங்களை நிறைவேற்றுவோம்” என்கிறார் பரணிதரன்.

சென்னை – பெங்களூரு நெடுஞ்சாலையில் ரூ.40 லட்சம் செலவில் ஏழு பால் ஹாரிஸ் சமூகக் கழிப்பறைகள் அமைக்கப்படும். “காஞ்சிபுரத்தில் $70,000 GG வழியாக, 7 இயந்திரங்களுடன் ரோட்டரி டயாலிசிஸ் மையம் அமைக்கப்படும்.

1,000க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளில் மின் கற்றல் செயலி அறிமுகப்படுத்தப்படும். இவர் 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் 10 புதிய சங்கங்களைத் தொடங்கவும் விரும்புகிறார்; TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $200,000. 2001ல் இவருடைய மகன் ஜிஷ்ணு பிறந்தபோது, “அவனுடைய எடை மிகுதியாக இருந்தது (4.5கிலோ), அவனால் மூச்சு விடவோ, அழவோ இயலவில்லை. அவன் வேலூரில் உள்ள CMC-யில் இருக்கும் ICUக்கு மாற்றப்பட்டான்.” இவருடைய ரோட்டரி நண்பர்கள் “உடனடியாக வந்து ரத்தம் கொடுத்து என் மகனைக் காப்பாற்றினார்கள்.” ரோட்டரியன்களுடைய தன்னல மற்ற மனப்பான்மையைக் கண்டு வியந்த இவர், 2001ல் தன்னுடைய சங்கத்தின் பதிவு உறுப்பினராக இணைந்தார்.■



**G செங்குட்டுவன்**
உற்பத்தித் துறை, RC தஞ்சாவூர் மிட் டவுன், RID 2981

## ரோட்டரி இவருடைய வாழ்க்கையைக் காப்பாற்றியது

2009ல், தீவிர நோய்த்தொற்றால் DG செங்குட்டுவனுடைய இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்தன. அவர் தஞ்சாவூரில் ரோட்டரியன் ஒருவரால் நடத்தப்படும் KDR மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருடைய பரிந்துரையின் அடிப்படையில், “சென்னை அருகிலுள்ள ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பட்டு, முழுமையாகக் குணமடைந்தேன்.” மீண்டும், 2020ல், இடம் பெயர்ந்த 400 குடும்பங்களுக்கு இவர் உணவு வழங்கிக்கொண்டிருந்தபோது, கோவிடால் பாதிக்கப்பட்டு ICUல் இருந்த, எனக்கு “ரோட்டரியன்கள் தன்னம்பிக்கையை வழங்கினார்கள்.”

இவர் ரோட்டரி சின்னத்துடன் 40 கடிகாரக் கோபுரங்களை (ரூ.25 லட்சம்) நிறுவவும், இரு சக்கர வண்டியோட்டிகளுக்கு 3,000 தலைக் கவசங்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளார். மூன்று டயாலிசிஸ் மையங்களும் (GG: தலா ரூ.27 லட்சம்) புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான இரண்டு மருத்துவப் பிரிவுகளும் (GG: தலா ரூ.28 லட்சம்) அமைக்கப்படும். அரசுப் பள்ளிகளில் கழிப்பறைத் தொகுதிகளும் (GG: ரூ.40 லட்சம்) 100 கை கழுவும் நிலையங்களும் (ரூ.25 லட்சம்) கட்டப்படும். ஒரு லட்சம் மாங்குரோவ் மரக்கன்றுகள் நடப்படும். இவருடைய TRF வழங்கும் இலக்கு, $1 மில்லியன். 2006ல், இவர் ரோட்டரியில் சேர்ந்தார்.■

இசை & மெல்லிசை

# சுசீலா, தென்னாட்டின் கானக்குயில்

**SR மது**

1969-இல் P சுசீலாவைப் பற்றி மெல்லிசை ராணி லதா மங்கேஷ்கர் கூறுகையில், “அவரது குரல் வசீகரமானது” என கூறினார். அதற்கான சந்தர்ப்பம்: சிறந்த பெண் பின்னணிப் பாடகிக்கான முதல் தேசிய விருதை வென்ற P சுசீலாவைக் கௌரவிக்க AVM உரிமையாளர் சரவண செட்டியார் சென்னையில் நடத்திய ஒரு நிகழ்ச்சி (பாடல்: உயர்ந்த மனிதன் படத்தில் பால் போலவே). AVM சார்பில் சுசீலாவுக்கு ஒரு சின்ன வீணையை பரிசாக அளித்த லதா, பின்னர் அவரது வீட்டிற்குச் சென்றார்.

லதா தமிழ்ப் பாடல்களின் ஒரு தொகுப்பை பம்பாய்க்கு எடுத்துச் சென்றார், மேலும் அதன் இசையமைப்பையும் பாடல்களையும், குறிப்பாக பாசமலர் மற்றும் பாவ மன்னிப்பு படங்களின் பாடல்கள் மீது பாராட்டு மழை பொழிந்தார்.

சுசீலா பம்பாயில் லதாவைச் சந்தித்தபோது, அவர் மிகவும் அரவணைப்புடனும் பாசத்துடனும் வரவேற்கப்பட்டார்: “தெற்கில் ஒருவர் உட்பட உண்மையில் ஐந்து மங்கேஷ்கர் சகோதரிகள் உள்ளனர்” என லதா கூறினார். ஆஷா போஸ்லே சுசீலாவை “திதி” (அக்கா) என்று அழைத்தார். ஒருமுறை சென்னையில் நடந்த விழா ஒன்றில் மூன்று சுசீலா பாடல்களைப் பாடினார்.

லதா பாலிவுட்டின் சிறந்த



P சுசீலா

இசை ஜாம்பவான் என்றால், சுசீலா தெற்கின் நம்பர் 1 பின்னணிப் பாடகி ஆவார், அவர் 1952-இல் தொடங்கி 11 மொழிகளை உள்ளடக்கிய 60 வருட இசை பயணத்தை மேற்கொண்டார். அவரது உச்சக் காலம் 1960-கள் மற்றும் 1970-கள் ஆகும், அப்போது அவரது குரல் இடம் பெறாத திரைப்படமே கிடையாது. 1969, 1971, 1977, 1982 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளில் சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருதினை வென்றார் (இரண்டு முறை தமிழ்ப் மற்றும் மூன்று முறை தெலுங்கு

பாடல்களுக்காக) மற்றும் பல மாநில அரசு மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளையும் வென்றுள்ளார். 2008-ஆம் ஆண்டு பத்மபூஷன் விருது அவருக்கு வழங்கப்பட்டது.

1970-இல், சுசீலா மற்றும் TMS (TM சௌந்தரராஜன்) ஆகியோர் தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ பாடலை (நீராரும் கடலுடுத்த) பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அன்றிலிருந்து இன்று வரை அனைத்து அரசு விழாக்களிலும் அப்பாடலே இசைக்கப்படுகிறது.

2016-ஆம் ஆண்டில், 80 வயதில், சுசீலா 1960-ஆம் ஆண்டு முதல் தமிழ் மற்றும் தெலுங்கு உட்பட 12 இந்திய மொழிகளில் 17,695 தனி, டூயட் மற்றும் கோரஸ் பின்னணியிலான பாடல்களைப் பாடியதற்காக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றார். அதற்கு தேவையான கடினமான ஆவணங்களை அவரது ரசிகர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஏற்பாடு செய்தனர். (ஒரு பாடல் இசை நிறுவனங்களால் உறுதிப் படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு, குறைந்தது 100,000 பதிவுகள் விற்றிருந்தால் மட்டுமே கின்னஸ் அதனை அங்கீகரிக்கிறது.)

சுசீலாவின் முழு இசைப்படைப்பு 40,000 பாடல்களைக் கொண்டது. அவரது தீவிர ரசிகரும் கூட அவரது பாடல்களில் 35 சதவீதத்திற்கு மேல் கேட்டிருக்க மாட்டார்கள் என சுசீலாவின் நண்பர்கள் மற்றும் தன்னார்வ உதவியாளர்களின் உள்வட்டத்தைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப நிபுணரும், இசை விமர்சகருமான ஸ்ரீராம் லக்ஷ்மன் கூறுகிறார்.

அவரது பாடல்கள் தமிழ் சினிமாவின் மறக்கமுடியாத சில காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளை நினைவூட்டுகின்றன, அவற்றின் மேல் தான் இந்த கட்டுரை கவனம் செலுத்துகிறது.



*L R ஈஸ்வரி மற்றும் வாணி ஜெயராமுடன் P சுசீலா.*

*2016-ஆம் ஆண்டில், 80 வயதில், தமிழ் மற்றும் தெலுங்கு உட்பட 12 இந்திய மொழிகளில் 17,695 தனி, பாடல்களைப் பாடியதற்காக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றார்.*



*A R ரஹ்மானுடன்.*

“நான் விரும்பும் பாடகி என்றால் அது சுசீலா தான்” என்று தனது K M மியூசிக் கன்சர்வேட்டரியின் ஒரு பிரிவைத் திறப்பதற்கு அவரை அழைத்த A R ரஹ்மான் கூறினார். இறப்பதற்கு முன் தன் கடைசி ஆசை, தனிமையில், கதவுகளை மூடிக்கொண்டு சுசீலா பாடலைக் கேட்பதாக இருக்கும் என்று தமிழ்க் கவிஞரும் பாடலாசிரியருமான S வைரமுத்து தெரிவித்துள்ளார்.

நான்கு காரணிகள் அவரை ஒரு சிறந்த பாடகியாக மாற்று கின்றன என வைரமுத்து கூறுகிறார். அவரது “புரிந்து கொள்ளும் சக்தி” (இசை யமைப்பாளர் விருப்பம், ஒரு தருணத்தின் தேவை, ஒரு

*2004-ல் அண்ணா விருது பெறுவதற்கு அவர் மேடையை நெருங்கிய போது ஜெயலலிதா எழுந்து வந்து, அவரை கட்டிப்பிடித்து, இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்.*

நடிகரின் பாவனைகள் ஆகியவற்றை புரிந்துகொள்வது); இனிமையான மற்றும் தனித்துவமான குரல்; அவரது தாய்மொழி தெலுங்காக இருந்தாலும் தெளிவான மற்றும் குறைபாடற்ற தமிழ் உச்சரிப்பு; மற்றும் அவரது உணர்ச்சிப்பூர்வமான குரல். அது காதல், மகிழ்ச்சி, பரவசம், துக்கம், மனச்சோர்வு, பக்தி, உற்சாகம், அமைதி, சுயபரிசோதனை, குடும்ப பாசம் என எந்த உணர்வுக்கும் அழகை சேர்க்கும்.

புதிய முகம் (1993) படத்திற்காக "கண்ணுக்கு மை அழகு" எனும் பாடலுக்கு வரிகளை எழுதியபோது, சுசீலா மட்டுமே அப்பாடலை பாட வேண்டும் என்று A R ரஹ்மானிடம் கூறியதாக வைரமுத்து கூறுகிறார். ஏன் என்று ரஹ்மான் கேட்டதற்கு, அழகு என்ற வார்த்தை பாடலில் அடிக்கடி வரும், சுசீலாவால் மட்டுமே அதை சரியாக உச்சரிக்க முடியும் என கூறியுள்ளார். ரஹ்மானும் அதனை ஒப்புக்கொண்டார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்காக ஐந்து மொழிகளில் 100 படங்களில் 300 பாடல்களுக்கு மேல் சுசீலா பாடியுள்ளார். 2004-ல் அண்ணா விருது பெறுவதற்கு அவர் மேடையை நெருங்கிய போது ஜெயலலிதா எழுந்து வந்து, அவரை கட்டிப்பிடித்து, இரு கன்னங்களிலும் முத்தமிட்டார். ஜெயலலிதா முதல்வராக பதவியேற்ற மூன்று விழாக்களிலும் சுசீலாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

**சுசீலாவின் சில அருமையான பாடல்கள் என் தனிப்பட்ட விருப்பங்களின் ஒரு குறுகிய பட்டியல் இங்கே:**

- பிருந்தாவனமும் நந்தகுமாரனும் -1955 (மிஸ்ஸியம்மாவில்


2


3


1

1. P சுசீலா முகமது ரஃபியுடன்.
2. லதா மங்கேஷ்கருடன்.
3. P B ஸ்ரீநிவாசுடன்.
4. முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியுடன்.
5. லதா மற்றும் உஷா மங்கேஷ்கருடன்.
6. கவியரசு கண்ணதாசனுடன்.
7. முன்னாள் முதலமைச்சர் J ஜெயலலிதாவுடன்.
8. நௌஷதுடன்.





4



5



6





7



8

AM ராஜா மற்றும் P சுசீலா. இசையமைப்பாளர்: S ராஜேஸ்வர ராவ்)

- விண்ணோடும் முகிலோடும் - 1957 (புதையலில் C S ஜெயராமனுடன். இசையமைப்பாளர்கள்: விஸ்வநாதன்-ராமமூர்த்தி)
- என்னை போல் பெண்ணல்லவோ - 1957 (வணங்காமுடி. இசை யமைப்பாளர்: G ராமநாதன்)
- அமுதைப் பொழியும் நிலவே - 1957 (தங்கமலை ரகசியம். இசையமைப்பாளர்: T G லிங்கப்பா)
- முல்லை மலர் மேல் -1958 (உத்தம புத்திரனில் TMS உடன். இசையமைப்பாளர்: எராமநாதன்)
- உன்னை கண்டு நானாடா - 1959 (கல்யாண பரிசு இசையமைப்பாளர்: A M ராஜா)
- காதலிலே தோல்வியுற்றாள் - 1959 (கல்யாண பரிசு. இசையமைப்பாளர்: A M ராஜா)
- அத்தான் என்னத்தான் - 1961 (பாவ மன்னிப்பு. இசையமைப்பாளர்: M S விஸ்வநாதன்)
- மாலைப் பொழுதின் மயக்கத்திலே - 1961 (பாக்ய லக்ஷ்மி. இசையமைப்பாளர்கள்: விஸ்வநாதன் ராமமூர்த்தி).
- ராஜாவின் பார்வை ராணியின் பக்கம், 1966 (அன்பே வாவில் TMS உடன். இசையமைப்பாளர்: M S விஸ்வநாதன்)
- மன்னவன் வந்தானடி - 1967 (திருவருட்செல்வர். இசையமைப்பாளர்: K V மகாதேவன்)

*“நான் விரும்பும் பாடகி என்றால் அது சுசீலா தான்” என்று A R ரஹ்மான் கூறினார்.*

- நலந்தானா – 1968 (தில்லானா மோகனாம்பாள். இசையமைப்பாளர்: K V மகாதேவன்)



S P *பாலசுப்ரமணியம்,* S P *சைலஜா,* P *சுசீலா மற்றும்* S *ஜானகி.*

**அவரது இசை பயணத்தின் பரிணாமம்**

சுசீலா விஜயநகரத்தில் இசை நாட்டமுள்ள குடும்பத்தில் பிறந்தவர். அவரது தந்தை ஒரு வழக்கறிஞர் மற்றும் வீணை கலைஞர். அவர் சுசீலாவுக்கு கர்நாடக இசையில் முறையான பயிற்சியை ஏற்பாடு செய்தார், அடிக்கடி இசைக்கலைஞர்கள் மற்றும் விமர்சகர்களை வீட்டிற்கு அழைத்து, சுசீலாவை பாடச் செய்தார். தன் மகள் இன்னொரு M S சுப்புலட்சுமியாக மலர வேண்டும் என்பதே அவரது லட்சியம். ஆனால் சுசீலா திரைப்பட இசையில் ஈர்க்கப்பட்டார், பள்ளி நாட்களில் பல போட்டிகளில் பங்கேற்று, பரிசுகளால் வீட்டில் அலமாரிகளை நிரப்பினார். விஜயநகரம் மகாராஜாஸ் இசைக் கல்லூரியில் இசைப்படிப்பில் டிப்ளமோ பட்டம் பெற்றார்.

*லதா தமிழ்ப் பாடல்களின் ஒரு தொகுப்பை பம்பாய்க்கு எடுத்துச் சென்றார், மேலும் அதன் இசையமைப்பையும் பாடல்களையும், குறித்து பாராட்டு மழை பொழிந்தார்.*

சுசீலாவின் முதல் பொது நிகழ்ச்சிகள் அகில இந்திய வானொலியில் குழந்தைகள் நிகழ்ச்சியான ‘‘பாப்பா மலர்’’ என்பதாகும். 1951-ஆம் ஆண்டில், தயாரிப்பாளர் P நாகேஸ்வர ராவ், குழந்தைகள் படத்திற்கு ஒரு பெண் பாடகியை பரிந்துரைக்கும்படி அகில இந்திய வானொலியிடம் கேட்டார். அவர்கள் பரிந்துரைத்த ஐந்து பெண்களில் சுசீலாவும் ஒருவர். பாடல் தேர்வில், பைஜு பாவ்ராவிலிருந்து லதாவின் உணர்ச்சிப்பூர்வமான மோஹே பூல் கயே சவாரியா பாடலைப் பாடினார். நௌஷத்தின் ரசிகரான தயாரிப்பாளர் அழுதுவிட்டார். அவர் சுசீலாவுக்கு அவரது முதல் திரைப்பட பணியை வழங்கினார் – பெற்ற தாயில் A M ராஜாவுடன் ஒரு டூயட்.

AVM தயாரிப்பு நிறுவனத்தில் பின்னணிப் பாடகியாகச் சேர்ந்து, அந்நிறுவனத்தில் மூன்று ஆண்டுகள் பணிப்புரிந்தார். A V மெய்யப்பன் அவருக்கு தமிழில் ஒரு சிறப்புப் பயிற்சியை ஏற்பாடு செய்தார், அப்பயிற்சி அவரை வாழ்க்கையில் நல்ல இடத்தில் நிறுத்தியது.

லதாவிற்கு 1949-ஆம் ஆண்டைப் போல, 1955-ஆம் ஆண்டு அவருக்கு திருப்பு முனையாக இருந்தது. கணவனே கண்கண்ட தெய்வம் மற்றும் மிஸ்சியம்மா ஆகிய படங்கள் வெளிவந்தன; இரண்டுமே அமோக வெற்றி பெற்றன, மேலும் அப்படங்களில் சுசீலாவின் பல பாடல்கள் அவரைப் புகழின் உச்சத்திற்கு கொண்டு சென்றது.

அவர் பின்னணி உலகில் நுழைந்த போது, P லீலா, ஜிக்கி, M L வசந்த குமாரி மற்றும் ஜமுனா ராணி போன்ற பாடகர்களால் நெரிசலாக இருந்தது. ஆனால் சுசீலா மிக விரைவாக முதலிடத்தை அடைந்தார். சிவாஜி-பத்மினி நடித்த புதையல், மல்லிகா மற்றும் உத்தம புத்திரன் ஆகியவை காதல், மகிழ்ச்சி, மனச்சோர்வு என எல்லா வகையான வெற்றிப் பாடல்களையும் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டுகள்: தங்க



M S *விஸ்வநாதன் மற்றும்* T M *சௌந்தரராஜன் அவர்களுடன்.*



மோகன தாமரையே (புதையல்), நீல வண்ண கண்ணனே (மல்லிகா), முல்லை மலர் மேலே (உத்தம புத்திரன்). தங்கமலை ரகசியம் படத்தில் பல பாடகர்கள் பாடியிருந்தாலும் மிகவும் பிரபலமானது சுசீலாவின் மெல்லிசை பாடலான 'அமுதைப் பொழியும் நிலவே'. எங்கிருந்தாலும் உங்களை நிறுத்தும் வகையிலான பாடல்.

1959-இன் கல்யாண பரிசு சுசீலாவுக்கு ஒரு தொழில் பரிசு. அப்படத்தில் இரண்டு தனிப்பாடல்கள் மற்றும் மூன்று டூயட்கள் பாடினார், இவை அனைத்தும் எவர்கிரீன் ஹிட்ஸ். பாடகர் A M ராஜா இந்தப் படத்தின் மூலம் இசையமைப்பாளராக மாறினார்.

1960களில், சுசீலா மகுடம் சூடாத பின்னணி பாடல் ராணியாக இருந்தார். அத்தசாப்தத்தில் ஏறக் குறைய ஒவ்வொரு படத்திலும் அவரது பாடல் இருந்தது. ஒவ்வொரு பாடலும் மனதை தொடுகிறது என்கிறார் திரைப்பட இசை வரலாற்றாசிரியர் வாமனன். கற்பகம், மன்னாதி மன்னன், களத்தூர் கண்ணம்மா, புதிய பறவை, காதலிக்க நேர மில்லை, கர்ணன், வெண்ணிற ஆடை, ஆயிரத்தில் ஒருவன், பட்டணத்தில் பூதம், அன்பே வா, வானம்பாடி, சரஸ்வதி சபதம், நெஞ்சில் ஓர் ஆலயம், திருவருட் செல்வர் மற்றும் தில்லானா மோகனம்பாள் போன்ற படங்கள் அவரை முன்னணி பாடகியாக உயர்த்தியது.

பெரும் இசையமைப்பாளர் களான விஸ்வநாதன்-ராமமூர்த்தி, K V மகாதேவன் மற்றும் G ராமநாதன் ஆகியோருக்கு அவர் மிகவும் பிடித்த பாடகியானர். பத்மினி, சாவித்திரி, K R விஜயா, தேவிகா, காஞ்சனா, சௌகார்ஜானகி, ஜெயலலிதா போன்ற முன்னணி நடிகைகள் சுசீலாவின் பாடல்கள் தங்களின் தோற்றத்தை மேம்படுத்தி, அவர்களின் நடிப்புக்கு ஆழம், பளபளப்பு மற்றும் கவர்ச்சியை அளித்தன என்பதை உணர்ந்து அங்கீகரித்தனர். AM ராஜா, TMS மற்றும் SPB ஆகியோருடன் மறக்க முடியாத டூயட்களைப் பாடினார்.



ராஜஸ்ரீ, காஞ்சனா மற்றும் சச்சுவுடன் சுசீலா.

1970-களில் அவர் பல தேசிய மற்றும் மாநில விருதுகளை வென்றார் மற்றும் ஹிந்தி படங்களிலும் பாடினார். பல இசையமைப்பாளர்களின் பிரதான பாடகியாக இருந்தார். ஆனால் சுசீலா படிப்படியாக திரைப்படப் பணிகளைக் குறைத்துக்கொண்டு பக்திப்பாடல்களில் கவனம் செலுத்தி, 1000-க்கும் மேற்பட்ட பக்திப் பாடல்களைப் பதிவுசெய்து, இந்தியாவிலும் வெளிநாடு களிலும் நேரடி நிகழ்ச்சிகளை நடத்தினார். அவர் அமெரிக்கா, கனடா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பெரும் பார்வையாளர்களை ஈர்த்தார். பல நகரங்களில், இந்திய சமூகம் சுசீலா மற்றும் அவரது குழுவினருக்கு வீட்டு விருந்தோம்பலை வழங்க முன்வந்தனர்.

2008-இல், P சுசீலா அறக்கட்டளை தொடங்கப்பட்டது. இது தேவைப்படும் இசைக் கலைஞர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்குகிறது. ஒவ்வொரு நவம்பர் மாதமும் நிதி திரட்டும் இசை நிகழ்ச்சி நடத்தப் பட்டு, வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படுகிறது. T M S, P B ஸ்ரீனிவாஸ், வாணி ஜெய்ராம், S ஜானகி, K J யேசுதாஸ், L R ஈஸ்வரி, P ஜெயச்சந்திரன், S P பாலசுப்ரமணியம், ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

"நான் பாடுவதற்காகவே பிறந்தேன்,'' என்று சுசீலா தனது புகழ் பெற்ற மற்றும் நிறைவான கலைப்பயணத்தை பற்றி கூறுகிறார் – அப்பயணம் முழு இசை உலகையும் ஊக்கப் படுத்தியது மற்றும் லட்சக் கணக்கான ரசிகர்களையும், இசை ஆர்வலர்களையும் மகிழ் வித்தது. தன் பணிவு மற்றும் எளிமையால் ஒரு பிரபலமான முன்மாதிரியாகவும் இருந்துள்ளார்.

எழுத்தாளர் மூத்த பத்திரிகையாளர் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சவுத் உறுப்பினர்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்



# சிந்தனைக்கான உணவு

சந்தியா ராவ்

பலருக்கு கோவிட்-19 வைரஸ் பரவியதைத் தொடர்ந்த ஊரடங்கு அவர்களின் சமையல் திறன்களை மறுபரிசீலனை செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும் ஒரு நேரமாக இருந்தது. சிலருக்கு அந்த நேரம் தனிமையை ரசிக்கவும் மற்றும் தங்களுக்குள் உள்நோக்கி பார்க்கும் நேரமாக இருந்தது. புத்தகக் கடையில் ஷோபா நாராயணின் ஃபுட் & ஃபெய்த்: எ பில்க்ரிம்ஸ் ஜர்னி த்ரு இந்தியா என்ற புத்தகத்தைப் பார்த்த போது இவை அனைத்தும் என் ஆழ் மனதில் இருந்திருக்கலாம். தெளிவான எண்ணங்கள், தெளிவான எழுத்து மற்றும் என்னைப் பிரதிபலிக்கும் ஒன்றாக இருந்ததால் பக்கங்களை என்னால் புரட்டாமல் இருக்க முடியவில்லை. ஆனால் ஜாக் ஒயாவின் ‘டைஜஸ்டிங் இந்தியா: எ டிராவல் ரைட்டர்ஸ் சப்-கான்டினென்டல் அட்வென்ச்சர்ஸ் வித் தி டம்மி’யை தற்செயலாக கண்ட பிறகுதான் இந்த புத்தகத்தை படிக்க ஆரம்பித்தேன்.

பெங்களூரைச் சேர்ந்த ஷோபா நாராயண் கலை, கலாச்சாரம், உணவு, பயணம் மற்றும் ஃபேஷன் பற்றி எழுதும் சர்வதேச அளவிலான எழுத்தாளர் ஆவார். ஜாக் ஒயா ஸ்வீடனை சேர்ந்தவர்; நான் அவரை பல வருடங்களுக்கு முன்பு சந்தித்திருக்கிறேன். அவர் ஆங்கிலம் மற்றும் ஸ்வீடிஷ் மொழிகளில் எழுதியுள்ளார், மேலும் அவர் தற்போது வசிக்கும் பெங்களூரை களமாக கொண்ட மெஜஸ்டிக் முத்தொகுப்பு துப்பறியும் நாவல்களின் ஆசிரியர் ஆவார்.

டைஜெஸ்டிங் இந்தியா புத்தகத்தில் ஷாங்காயில் வறுத்த பட்டுப்புழுக்கள் முதல் பூட்டானின் தேசிய உணவான வேகவைத்த காரமான மிளகாய் வரை, ஐஸ்லாந்தில் பேணப்படும் வித்தியாசமான அழுகிய சுறாவிலான உணவு சுவையிலிருந்து ஜிம்பாப்வேயில் குழம்பாக்கப் பட்ட ஆடு குடல் வரை, நேபிள்ஸின் பழமையான பீட்ஸாக்கள் முதல் டென்மார்க்கின் சமைக்கப் படாத இறைச்சி சாண்ட்விச்கள் வரை, ஆயிரக் கணக்கான வியக்கத்தக்க உணவுகளை நான் சாப்பிட்டுள்ளேன்” என அவர் கூறுகிறார். என் எழுத்துக்களில் 50 சதவீதம் அந்தந்த உள்ளூர் உணவு வகைகளைப் பற்றியது என்பதால் இயற்கையாகவே சுற்றுலாப் பயணிகளின் வயிற்றுப்போக்கின் பல வகைகளை நான் அனுபவித்திருக் கிறேன்’ என அவர் தொடர்கிறார். மீதமுள்ளவற்றை நீங்களே கற்பனை செய்து பாருங்கள். இன்னும் சிறந்தது, புத்தகத்தைப் படியுங்கள்.




இருப்பினும், உங்கள் கற்பனையைத் தூண்டுவதற்கு இதோ ஒரு சுவாரசியமான சம்பவம்: R K நாராயணின் ஸ்வாமி அண்ட் பிரண்ட்ஸ் நாவலை அடிப்படையாகக் கொண்டு ஷங்கர் நாக் உருவாக்கிய அற்புதமான தொலைக்காட்சித் தொடரான “மால்குடி டேஸ்” படமாக்கப்பட்ட அகும்பேயில் உள்ள இடங்களை ஒயா பார்வையிடுகிறார். தொடரில் பயன் படுத்தப்பட்ட முக்கிய இடம், 1900 ஆம் ஆண்டு கட்டப்பட்ட தொட்டமனே (பெரிய வீடு) என்று அழைக்கப்படும் ஒரு வீடு என்பதை அவர் கண்டுபிடித்தார். கஸ்தூரியக்கா என்று அழைக்கப்படும் வயதான, நேர்த்தியான பெண் இப்போது அங்கு தன் குடும்பத்தை வழிநடத்துகிறார். ஒயா வருகை தரும் போது, மற்ற இரண்டு வயதான பெண்களுடன் அவர் அமர்ந்திருக்கிறார்: அது என்ன என்று தெரியும் முன், என் கையில் ஒரு டம்ளர் கஷாயம் இருந்தது: இந்த மலைகளில் ஆரோக்கிய பானம் என நம்பப்படும் பால் போன்ற, லேசாக வாசனை திரவியம் (துளசி இலை மற்றும் என்ன என்று என்னால் சொல்ல முடியாத ஏதோ ஒன்றுடன்) சேர்க்கப்பட்ட ஒன்று அது. கஸ்தூரியக்காவின் விருந்தோம்பல் அந்த ஊரில் புகழ்பெற்றது. கிராமத்திற்கு வருபவர்கள் மாடி அறையில் தங்கி கொள்ளலாம் மற்றும் அவர்களால் முடிந்த தொகையை கொடுக்கலாம். ஆனால் அவர் சினிமாக்காரர்களை இப்போது அனுமதிப்பதில்லை.’ கோவா, பம்பாய், உஜ்ஜைன், கொல்கத்தா, டெல்லி மற்றும் பல இடங்களுக்கு பயணித்து கொண்டு, ஒயா அருந்திய உணவை நீங்கள் தொடரலாம்.



ஃபுட் & ஃபெய்த் ஒப்பீட்டளவில் ஒரு வித்தியாசமான பயணம். பஞ்சாமிர்தம், லட்டு, தோசை, பேடா, பூந்தி என பல்வேறு வழிபாட்டுத் தலங்களில் பிரசாதத்தைப் பின் பற்றுவது என ஆரம்பித்தது வரலாறு, புவியியல், கலாச்சாரம், புராணங்கள் மற்றும் ஒருவரின் ஆன்மீகம் மற்றும் நம்பிக்கை மீதான சுயபரிசோதனை ஆகியவற்றின் கண்டுபிடிப்பாக மாறுகிறது; பருவகால பழங்கள் மற்றும் காய்கறிகளை உண்ணுவதை பற்றியும் இதில் உள்ளது.




உடுப்பி, காசி, பழனி, மதுரை, ஜெய்ப்பூர், திருவனந்தபுரம், அமிர்தசரஸ், பூரி, மதுரா போன்ற இடங்களுக்குத் தன் தேடலின் போக்கில் பல கோவில்களுக்கு உங்களை அழைத்துச் செல்கிறார் ஆசிரியர். நீங்கள் அஜ்மீரின் ஷெரீப், கோவாவின் தேவாலயங்களுக்கு செல்வீர்கள், மும்பையில் ஒரு யூதக் குடும்பத்துடன் சேர்த்து ரோஷ் ஹஷனாவைக் கொண்டாடுவீர்கள். நீங்கள் அதை தொடரும்போது, இந்தியாவின் பன்முக கலாச்சாரம், மதம் மற்றும் உள்ளடக்கிய நிலப்பரப்பின் ஒத்திசைவான தன்மையை விவரித்து நினைவுபடுத்தும் போது, எழுத்தாளர் தன்னைப் பற்றிய புரிதலில் மெதுவாக எப்படி வளர்கிறார் என்பதையும் நீங்கள் காண்பீர்கள்.

''மறைந்த கார்ட்டூனிஸ்ட் மரியோ மிராண்டா உட்பட பல உயர்குடி கோவா குடும்பங்கள் தங்கள் பண்டைய இந்து பண்பாட்டை மதிக்கின்றன. அவர் இறப்பதற்கு முன், நான் அவரை நேர்காணல் செய்தபோது, ஒவ்வொரு அறுவடையின் தொடக்கத்திலும் உள்ளூர் துர்கா கோயிலுக்கு ஒரு மூட்டை அரிசி மற்றும் நூறு தேங்காய்களை வழங்குவதாக அவரது முன்னோர்கள் உறுதியளித்ததாக மிராண்டா என்னிடம் கூறினார். குடும்ப நிலங்கள் அனைத்தும் விற்கப்பட்ட போதிலும், அவர் இந்த வாக்குறுதியை இறக்கும் வரை காப்பாற்றினார். மேலும் போர்த்துகீசியம் அவரது தாய் மொழியாக இருந்தது'' என்று அவர் எழுதுகிறார்.

அஜ்மீர் ஷெரீப்பில் அனைவரும் வழிபடுவது அனைவரும் அறிந்ததே. ஒரு பக்தர் சொல்வது போல்: 'இங்கே கங்கா ஜமுனா சமஸ்கிருதி உள்ளது.' நம்பிக்கை, யார் மேல் அல்லது எதன் மேல் இருந்தாலும் அது உதவி அளிக்கிறது. பயபக்தியான சீக்கிய பெற்றோர்களை கொண்ட ஆசிரியரின் நண்பரால் இது சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. ''இருபது வயதான அவர்களின் ஒரே மகனை அவர்கள் சாலை விபத்தில் இழந்தனர்'' என்று அவர் எழுதுகிறார், மேலும் ''தங்கள் மதத்தை கேள்விக் குட்படுத்துவதற்குப் பதிலாக அல்லது அவர்கள் நீண்ட காலமாக வணங்கிய கடவுளால் கைவிடப் பட்டதாக உணருவதற்குப் பதிலாக என் பெற்றோர்கள் சீக்கிய மதத்திலிருந்தே அதை எதிர்கொள்ள தங்கள் முழு பலத்தையும் பெற்றனர். அந்த அசாதாரண கஷ்டத்தின் போது அது அவர்களுக்கு ஒரு உயிர்காக்கும் படகு போன்று துணையாக இருந்தது அது அவர்களை நல்ல மனநிலையில் வைத்திருந்தது மற்றும் வாழ்க்கையை வாழ அனுமதித்தது என அவர் தோழி கூறியதை மேற்கோள் காட்டுகிறார்.

அப்படியானால் எப்படி வாழ்வது என்பது பற்றியது தான் நம்பிக்கை. இந்த வழக்கில், உணவு அதில் காரசாரத்தை சேர்க்கிறது. உதாரணமாக, கேரளாவின் அம்பலபுழாவில் உள்ள கிருஷ்ணர் கோவிலில் பால் பாயாசம் பிரசாதமாக உள்ளது, ''அது சுவையாக இருக்கிறது ஆனால் தண்ணீராக இல்லை. இது பதப் படுத்தப்பட்ட பால், ஆனால் பழைய பாணியில் தயாரிக்கப்பட்டது, ஒரு டின் பதப்படுத்தப்பட்ட பால் சேர்ப்பது சுவையான பாயாசத் திற்கான எனது குறுக்குவழி. ஆனால் இந்த பால் நெருப்பு மற்றும் ஆவியாதல் மூலம் பதப்படுத்தப் படுகிறது. பால் மற்றும் அரிசி விகிதம் சரியானதாக இருக்கிறது''.

நிலாஞ்சனா சென்குப்தாவின் சிக்பீஸ் டு குக் அண்ட் அதர் ஸ்டோரீஸ் வித்தியாசமான முறையில் உள்ளது. சிங்கப்பூரை தளமாகக் கொண்ட பாராட்டப்பட்ட எழுத்தாளரின் இந்த புத்தகம் எந்த வகைப்படுத்தலையும் மீறுகிறது: இது புனைகதை அல்ல, ஆனால் அது முற்றிலும் உண்மையும் இல்லை; இது மக்களின் வாழ்க்கையைப் பற்றியது. சிங்கப்பூரின் பல மத, பல்கலாச்சார கலவையிலிருந்து வேண்டுமென்றே மிகச்சிறிய சமூகங்களைத் தேர்ந் தெடுக்கிறேன் என்று ஆசிரியர் விளக்குகிறார்.

தாவூதி போஹ்ராக்கள், யூதர்கள், நாட்டுக்கோட்டை செட்டியார்கள், யூரேசியர்கள், சீக்கியர்கள், தேரவாத பௌத்த-பர்மியர்கள், சீன-தாவோயிஸ்டுகள் மற்றும் பார்சிகளின் உலகத்தை ஆராய்வதன் மூலமும் நேர் காணல்கள், அவரது தனிப்பட்ட தொடர்புகள் மற்றும் சிங்கப்பூரின் பரந்த சமூக-மத சூழலின் பின்னணியில் மீண்டும் சொல்லப்பட்ட பெண்களின் உண்மையான கதைகள் மூலமும் அவர் இதைச் எழுதியிருக்கிறார். உண்மையில், இந்த புத்தகங்கள் ஒவ்வொன்றும் பூமியில் நமது இடத்தைப் பாதுகாப்பதற்கான வழிகளை வழங்குகிறது, அதே நேரத்தில் ஒவ்வொரு உயிரினத்திற்கும் அவற்றின் இடத்திற்கான உரிமையை அங்கீகரிக்கிறது. உண்மையில், இவை சிந்தனைக்கான உணவே.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# மூளையின் நச்சுக்களை அகற்றுவோம்!

பரத் — ஷலன் சவூர்

ஆற்றல் மிகுந்த, புத்தி சாலித்தனமான, குணப்படுத்தும் சக்திகள் கொண்டவர்கள் மனிதர்கள் என்பதை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம். அற்புதமான மூளை நமக்கு கிடைத்திருக்கிறது. தீங்கு விளைவிக்கும் வகையில் ஏதாவது நடந்தால் மூளை உடனடியாக செயல்படுகிறது. நீங்கள் ஈரமான டைல்ஸில் கால் இடறி விழுந்தால், மூளை நீங்கள் சமநிலையை மீட்டெடுக்க உத்தரவிடுகிறது. நீங்கள் தொடர்ந்து விழுந்தால் உங்கள் கைகளால் தடுக்க சமிக்ஞை கொடுக்கிறது. நீங்கள் தரையில் விழுந்து விட்டால், வலியை ஏற்படுத்தி நீங்கள் காயமடைந்து விட்டதாக கூறுகிறது. அதுமட்டுமல்ல, நீங்கள் அடுத்த முறை ஈரமான அல்லது வழுவழுப்பான தரைகளில் நடக்க முற்படும்போது முந்தைய சம்பவத்தை நினைவுபடுத்தி உங்களை எச்சரிக்கிறது.

ஆனால், விலைமதிப்பற்ற மூளையில், தேவையற்ற தகவல்கள், மன அழுத்தம் மற்றும் நச்சுப் பொருள் களை நாம் சுமந்து கொண்டிருக்கிறோம்

### குழந்தையைப் போல தூங்குங்கள்

நச்சுக் கழிவுகளை அதிகபட்சம் வெளியேற்றுவதற்கும், மூளையை இலகுவாக்குவதற்கும் சரியான வழி இரவில் நன்கு தூங்குவதுதான். ஆழ்ந்த தூக்கத்தை உறுதிப்படுத்த காலையில் நடைப்பயணம் செல்வதுடன் சூரியக்குளியல் போட வேண்டும். இது தூக்கத்தை தூண்டும் மெலோடின் சுரப்பியின் செயல்பாடு களை கட்டுப்படுத்தி மூளைக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இரவில் மெலடோனின் சுரப்பது அதிகமாக இயற்கையாகவே உங்கள் தூக்கத்தை உறுதி செய்கிறது. நீங்கள் ஒரு குழந்தையைப் போல 6 முதல் 8 மணி நேரம் தூங்கலாம். நீங்கள் இடதுபுறம் ஒருக்களித்து படுத்தால் அது கிளம்பாடிக் சிஸ்டத்தை சிறப்பாக செயல்படவைக்கிறது என்கின்றனர் நிபுணர்கள்.

### அழற்சி ஏற்படுத்தாத உணவுகளை சாப்பிடுங்கள்

நாவல் பழங்கள் (பிளாக் பெர்ரி), நெல்லி, தர்பூசணி, களாக்காய் உள்ளிட்டவை ஆக்ஸிஜனேற்றிகள். இவற்றை சாப்பிட்டால் இவை மூளைக்கு இரத்தம் ஓட்டம் தடையில்லாமல் செல்வதை உறுதி செய்து மூளைக்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. கீரைகள், பீட்ரூட், புரோக்கோலி, மிளகு, கேரட் ஆகியவை செல்கள் பாதிப்பை தடுக்கிறது. மூளைக்கு அழுத்தம் கொடுக்கும் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் வெளிப்படும்போது நமது உடலில் ஃப்ரீ ரேடிகிள்ஸ்



உருவாகி அவற்றை அழித்து விடுகின்றன.

இஞ்சி - பூண்டு கலவையானது அழற்சிக்கு எதிரான புரதங்களின் அளவை குறைத்து மூளையை தெளிவாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும். பருப்புகள் மற்றும் விதைகள் நமது நினைவாற்றலை அதிகரித்து வீக்கம் ஏற்படாமல் தடுக்கிறது. தயிர் சாப்பிட்ட பிறகு, உணர்ச்சிகளை கையாளும் சில பகுதிகளில் மூளை நேர்மறையான மாற்றங்களை வெளிப்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பீன்ஸில் நார்ச்சத்து, B வைட்டமின்கள், ஒமேகா கொழுப்பு அமிலங்கள் நிறைந்திருப்பதால் இரத்த-சர்க்கரை வெளிப்பாட்டை கட்டுப்படுத்துகிறது. ஓட்ஸ், பழுப்பு நிற அரிசி ஆகியவை அழற்சி எதிர்ப்பு சக்தி கொண்டவை. அவை செரோடோன் மற்றும் மெலடோனின் அளவை அதிகரித்து அமைதியான தூக்கத்தை ஊக்குவிக்கிறது. கொதிக்க வைத்த அல்லது வடிகட்டிய நீர் மூளையை ஈரப்பதமாக்குவதுடன் அறிவாற்றல் மற்றும் செயல்திறனை அதிகரிக்க உதவுகிறது.

### மந்தநிலையை போக்குங்கள்

உங்கள் இதயத்துக்கு எது நல்லதோ அது உங்கள் மூளைக்கும் நல்லது. நடைப்பயணம், சைக்கிள் ஓட்டுதல், யோகா பயிற்சி செய்தல் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும். நரம்பணுக்களுக்கு இடையிலான பகுதிகள் அவற்றை தொடர்பு கொள்ள அனுமதிக்கின்றன. மேலும் இந்த பயிற்சிகள், மூளைக்கு ஆக்ஸிஜன் நிறைந்த இரத்த ஓட்டத்தை அதிகரிப்பதன் மூலம் ஹிப்போகேம்பஸின் அளவை அதிகரிக்கிறது மற்றும் தினசரி உடற்பயிற்சிகள் மூளையை மென்மைப்படுத்துகிறது. நீங்கள் உண்மையில் புத்துணர்ச்சியுடன் இருப்பீர்கள். மூளையின் நச்சுத் தன்மையை குறைக்க யோகா ஆசிரியர்கள் ஆலாசனம், கபால்பாதி உள்ளிட்ட சில பயிற்சிகளை பரிந்துரைக்கின்றனர்.

**ஆலாசனம்:** இதைச் செய்வதற்கு முதலில் மல்லாந்து படுக்க வேண்டும். பின் மூச்சை இழுத்தபடி இரண்டு கால்களையும் ஒன்று சேர்த்து 90 டிகிரி மேலே உயர்த்த வேண்டும். இரண்டு உள்ளங்கைகளையும் விரிப்பில் அழுத்தி வைக்க வேண்டும் தலைக்கு மேல் கால்களைக் கொண்டு சென்று, முதுகை வளைத்து பாதங்களை தலைக்குப் பின்புறம் தரையில் வைக்க முயற்சி செய்ய வேண்டும். ஐந்து முறை இயல்பான மூச்சு விடுதலுக்குப் பிறகு மீண்டும் ஆரம்ப நிலைக்கு வரவேண்டும்.

**கபால்பாத்தி:** முதலில் உங்கள் முதுகெலும்பை நிமிர்த்தி வசதியாக உட்காருங்கள். பின் உங்கள் கைகளை முழங்கால்களில் உள்ளங்கை வானத்தை பார்க்கும் வகையில் வைக்கவும். ஆழ்ந்த மூச்சை உள்ளே இழுக்கவும். நீங்கள் மூச்சை வெளியேற்றும்போது உங்கள் தொப்புளை முதுகெலும்பை நோக்கி இழுக்கவும். வயிற்று தசைகள் சுருங்குவதை உணர உங்கள் வலது கையை வயிற்றில் வைத்திருக்கலாம். தொப்புள் மற்றும் வயிற்றை நீங்கள் தளர்த்தும்போது சுவாசம் தானாகவே நுரையீரலில் பாயும். கபால்பாத்தியின் ஒரு சுற்று முடிக்க இதுபோன்று 20 சுவாசங்களை எடுத்துக் கொள்ளுங்கள். சுற்று முடிந்ததும் கண்களை மூடிக்கொண்டு ஓய்வெடுக்கவும்.

### தேவையில்லாமல் சிந்திக்காதீர்கள்

இது நடந்தால் என்ற எண்ணம் வரும் போது நாம் அதிகம் சிந்திக்கிறோம். இது நிலையான உள் பதற்றத்திலிருந்து வருகிறது. மேலே விவாதிக்கப்பட்ட உடற்பயிற்சிகளைத் தவிர, மனதில் ஏற்பட்ட பதற்றத்தை தளர்த்துவதற்கு உடற்பயிற்சி அல்லாத தொழில்நுட்பங்கள் முக்கியம். அதற்கு பொழுதுபோக்கு, ஓய்வெடுப்பது, உடல் ஆரோக்கியம் முக்கியமானது. வாழ்க்கையில் மகிழ்ச்சியை எப்படி வரவழைப்பது என்று கேளுங்கள். பாடுவது, தோட்டக்கலை, விளையாட்டு, நடனமாடுவது, நேர்மறை விஷயங்களை எழுதுவது, தியானம், சமையல், மலையேற்றம் போன்றவற்றில் ஈடுபட்டால் பதற்றம் பறந்தோடிவிடும்.

உங்கள் மூளையை நிதான மாகவும், அமைதியாகவும் மகிழ்ச்சி யாகவும் புத்துணர்ச்சியாகவும் வைத் திருக்க சில சுவாரஸ்யமான சோதனைகள் உள்ளன.

**மொஸார்ட் விளைவு:** 1993-ஆம் ஆண்டு பேராசிரியர் பிரான்சிஸ் ரௌஷர் மொஸார்டை கேட்பதன் மூலம் தனது நினைவாற்றல் மற்றும் புத்திசாலித்தனம் மேம்படுவதை உணர்ந்தார். அவர் 36 கல்லூரி மாணவர்களை ஒன்று திரட்டி அவர்கள் முன்னிலையில் மொஸார்ட் பியானோ ஸொனோட்டாவை 10 நிமிடங்கள் வாசித்தார். அவர்கள் ரிலாக்ஸாகவும் நிம்மதியாகவும் ஓய்வாக இருப்பதையும் உணர்ந்தனர். எனினும் அந்த அமைதி வெகுநேரம் நீடிக்கவில்லை. சயின்டிஃபிக் அமெரிக்கனில் எழுதும் டாக்டர் ஜேம்ஸ் ஹார்ட்ஜெல் எழுதிய **சமஸ்கிருத விளைவுகள்** என்னும் கட்டுரையில் விளைவுகள் நீடித்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. வேத மந்திரங்களை மனப்பாடம் செய்வது, குறுகிய கால நினைவாற்றல் போன்ற அறிவாற்றல் செயல்பாடுகளுடன் தொடர்புடைய மூளைப் பகுதிகளின் அளவை அதிகரிப்பதாக அவரது ஆராய்ச்சி காட்டுகிறது.

வேதமந்திரங்களை ஓதுபவர்கள் மற்றும் வேதமந்திரங்களை ஓதாதவர் களை சோதித்து பார்த்தபோது நினைவாற்றல், முடிவெடுத்தல், புலன் உணர்வு ஆகியவை வேதம் ஓதுபவர்களுக்கு அதிகம் இருப்பது தெரியவந்தது.

இறுதியாக நடப்பவைகளை கண்காணிக்க கையடக்க காலண்டரை வைத்திருங்கள். எழுதப்பட்ட அட்டவணையையும் வைத் திருங்கள். நீங்கள் மறந்துவிடாதபடி நடந்த விஷயங்களை குறித்து வைக்கவும். உங்கள் வாழ்க்கையில் நேர்மறையல்லாத எவரையும் பின் தொடர வேண்டாம். உங்கள் நேரத்தை வெளியில் செலவிடுங்கள். இந்த சிறிய பயிற்சிகள் மூளையை சுதந்திரமாகவும் தெளிவாகவும் வைத்திருக்கும்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

## RC சிதம்பரம் மிட்டவுன் — RID 2981



இன்னர் வீல் சங்கம், இன்டராக்டர்கள் மற்றும் ரோட்ராக்ட் சங்க உறுப்பினர் களுக்கு பேச்சு மற்றும் சதுரங்கப் போட்டிகள் நடைபெற்றன.

## RC விசாகப்பட்டினம் — RID 3020



அரசு ஜூனியர் மற்றும் டிகிரி கல்லூரியில் சுத்திகரிக்கப் பட்ட குடிநீர் வழங்கும் ஆலையை IPDG பாஸ்கர் ராம் தொடங்கி வைத்தார்.

## RC புதுக்கோட்டை சிட்டி — RID 3000



செட்டிநாடு சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ மனையுடன் இணைந்து நடத்திய இருதய சிகிச்சை முகாமில் 230 பேருக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டன.

## RC புசாவல் ரயில்சிட்டி — RID 3030



நகரத்தின் நுழைவாயிலில் ரோட்டரி தோட்டம் அமைப்பதற்கு IPDG ஆனந்த் ஜூன்ஜூன்வாலா அடிக்கல் நாட்டினார்.

## RC தில்லி மயூர் விஹார் — RID 3012



ஸ்ரீஜி கோ சதன் கோ சாலையில் மரம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாட்டுத் தீவனம் வாங்க கோசாலைக்கு நிதி நன்கொடையாக வழங்கப்பட்டது.

## RC கந்தேவி — RID 3060



கடாட்டில் உள்ள அம்பிகா உயர்நிலைப் பள்ளிக்கு 15 கணினிகள், 3 மடிக்கணினிகள், 5 புரொஜெக் டர்கள் மற்றும் 2 பிரிண்டர்களை DGE துஷார் ஷா வழங்கினார்.

# செய்திகள்

## RC கரார் — RID 3080




ராடியாலாவில் உள்ள அரசு முதுநிலை பள்ளிக்கு ரோட்டரி சங்கம் சார்பில் நான்கு கழிப்பறை தொகுதிகள் மற்றும் குடிநீர் நிலையம் கட்டித்தரப்பட்டது.

## RC வாரணாசி சென்ட்ரல் — RID 3120

IPDG அனில் அகர்வால், அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் இடைநிலைக் கல்லூரியைச் சேர்ந்த 111 மாணவிகளுக்கு சைக்கிள்களை வழங்கினார்.




## RC சமனா — RID 3090



ரோட்டரி பவனில் நடைபெற்ற கண் பரிசோதனை மற்றும் கண் புரைநோய் சிகிச்சை முகாமில் 290 பேருக்கு பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## RC புனே ஹெரிடேஜ் — RID 3131

அகமதுநகரில் சிறப்பு முகாம் மூலம் ரூ.7 லட்சம் செலவில், 80 மாற்றுத் திறனாளிகளுக்கு பாரத் விகாஸ் பரிஷத் உதவியுடன் செயற்கை கால்கள் பொருத்தப்பட்டன.



## RC பிலிபிட் — RID 3110



விபத்துக்களை தடுக்க, டிராக்டர் மற்றும் இதர வாகனங்களுக்கு ரோட்டரி சார்பில் ஒளிப்பிரதி பலிப்பான்கள் பொருத்தப்பட்டது.

## RC சோலாப்பூர் ப்ரைடு — RID 3132

சோலாப்பூரில் உள்ள யுகாந்தர் பல்நோக்கு சிறப்பு மருத்துவ மனையில் இலவச டயாலிஸ் மருத்துவ மையம் அமைக்கப்பட்டது.



## RC மீரா ரோடு — RID 3141



மழைக் காலத்தில் நகராட்சி பள்ளிக் குழந்தைகளுக்கு உதவும் வகையில் மழை கோட்டுகள் வழங்கப்பட்டன.

## RC ஹொனாவர் — RID 3170



அமெரிக்காவில் உள்ள RC சென்ட்ரல் செஸ்டரைச் சேர்ந்த Dr வசந்த் பிரபு, செல்கோ அறக்கட்டளை மற்றும் பெங்களூரைச் சேர்ந்த மென்டா அறக்கட்டளை அளித்த நன்கொடைகள் மூலம் அரசு தொடக்கப்பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பு நிறுவப்பட்டது.

## RC குண்டூர் விகாஸ் — RID 3150



குண்டூரில் மத்தூர் கிராமத்தில் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு தேநீர் கடை வைப்பதற்கு தேவையான ரூ.50,000 மதிப்புள்ள உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## RC கோயம்புத்தூர் மோனார்க்ஸ் — RID 3201



கோயம்புத்தூர் கேன்சர் அறக்கட்டளைக்கு ஆக்ஸிஜன் செறிவூட்டி மற்றும் தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இம்பெல் பெர்ரோகாஸ்ட் நிறுவனத்துக்கு நன்றி.

## RC பால்கி ஃபோர்ட் — RID 3160



டோம்பரி சேரி பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு போர்வைகள், ஆடைகள், கையுறைகள் மற்றும் மெத்தைகள் வழங்கப்பட்டன.

## RC திரிகார்பூர் — RID 3204



IPDG பிரமோத் நயனார் மருத்துவ கிளினிக்குடன் அமைந்த இரண்டு மாடி ரோட்டரி சமூக மையத்தை திறந்துவைத்தார்.

# செய்திகள்

## RC ஆலப்புழா ஈஸ்ட் — RID 3211



அம்பலப்புழா மற்றும் புன்னப்புராவில் உள்ள இரண்டு அரசு பள்ளி மாணவர்கள் 100 பேருக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகள் விநியோகிக்கப்பட்டன.

## RC கிண்டி — RID 3232

புதிய நிர்வாகிகள் பதவியேற்கும் போது 63,000 டாலர் மற்றும் ரூ.23.5 லட்சம் TRF நிதிக்கு CSR மற்றும் தனிப்பட்ட பங்களிப்பாக பெறப்பட்டது.




## RC சிவகாசி — RID 3212



கோல்டன் ஹார்ட் முகாமில், சென்னை அப்பல்லோ மருத்துவ மனையின் ஆதரவுடன் ரோட்டரி பள்ளியில் 135 குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது.

## RC பொக்காரோ ஸ்டீல் சிட்டி — RID 3250

மமர்குதூரில் உள்ள ஸ்ரீ சாரதா வித்யாலயாவுக்கு குடிநீர் தொட்டி, குளிர்பதன பெட்டி, மற்றும் குளிரூட்டி கருவி ஆகியவை நன்கொடையாக வழங்கப்பட்டன.



## RC வேலூர் நார்த் — RID 3231




PDG C R சந்திரபாப் மற்றும் சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் ஒரு பெண்ணுக்கு ரூ.11,600 மதிப்புள்ள தையல் இயந்திரம் இலவசமாக வழங்கப்பட்டது.

## RC சால்ட் லேக் மெட்ரோபாலிடன் — RID 3291

ரிஷ்ராவில், RC சீராம்பூர் இரத்த சோகை தடுப்பு முகாம் நடத்தப்பட்டது. இரும்புச் சத்து, குடற்புழு நீக்கம் மற்றும் கால்சியம் மாத்திரைகள் வழங்கப்பட்டன.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கு ஒரு இரங்கல்

LBW

**TCA ஸ்ரீனிவாசராகவன்**

பத்து வருடங்களுக்கு முன்பு, ஓய்வுக்குப் பிறகு என்ன செய்வது என்று தெரியாமல் இருந்த நான், அறிவுரை வழங்குவதில் மிகவும் திறமையான ஒரு முன்னாள் சக ஊழியரின் ஆலோசனையைப் பெற்றேன். ஒரு நாவல் எழுதுங்கள் என்று அவர் சொல்லிக் கொண்டிருப்பார். அதனால் ஒன்றை நான்கு வருடங்களாக எழுதி ஐந்து வருடங்களுக்கு முன்பு முடித்தேன். பின்னர் அது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டது.

அது வணிகரீதியாக பெரும் தோல்வியை சந்தித்தது. ஆனால் வெளிப்படையாக பேசும் சில நேர்மையான நண்பர்களும் இது ஒரு நல்ல புத்தகம் என்று என்னிடம் சொன்னார்கள்.

ஆனால் அது எனக்கு மிகச் சிறிய ஆறுதல் மட்டும்தான். 500க்கும் குறைவானவர்களே அப்புத்தகத்தை வாங்கினார்கள். அதனால் இனிமேல் ஒரு நாவல் எழுத மாட்டேன் என்று எனக்கு நானே சத்தியம் செய்துக் கொண்டேன். புத்தகம் எழுதுவது கடினமான பணி, மேலும் பெரும்பாலான புத்தகங்களைப் போல உங்கள் புத்தகமும் தோல்வியடைந்தால் மீண்டும் ஒருமுறை முயற்சி செய்வதற்கான தைரியத்தையும் ஆற்றலையும் திரட்டுவது மிகவும் கடினம்.

ஆனால் கடந்த ஆண்டு எனது மகனையும் அவனது குடும்பத்தினரையும் சந்திக்கச் சென்றபோது மீண்டும் நான் சலிப்படைந்தேன். வீட்டைச் சுற்றுத்திரியும் முதியவனானேன். என் பேரன் காலை மற்றும் மாலையில் குழந்தைகளின் காப்பகத்திற்கு பிரமாண்டமாகச் செல்ல தள்ளுவண்டியைத் தள்ளுவது மட்டுமே எனது கடமையாக இருந்தது. எனவே, ஒரு நாள் பூங்காவின் ஒரு பெஞ்சில் உட்கார்ந்து, என் ஐபோனை எடுத்து ஒரு புதிய நாவலை தட்டச்சு செய்ய ஆரம்பித்தேன். அந்த கதை ஒரு வருடமாக என் மனதில் ஓடிக் கொண்டிருந்தது.

60களின் நடுப்பகுதியில் உள்ள ஆறு ஆண்கள், வட இந்தியாவின் மலைகளில் ஒவ்வொரு ஆண்டும் ஒரே விசாலமான பங்களாவை ஆறு மாதங்களுக்கு வாடகைக்கு எடுக்கிறார்கள். அவர்கள் தங்கள் மனைவிகளை விட்டுச் செல் கிறார்கள், இரு தரப்பினரும் அவர்களுக்கு இடையேயான தொடர்பு மூன்று நிமிடங்களுக்கு மிகாமல் ஒரு வாரத்திற்கு ஒரு அழைப்பு என வரம்பிடப்படும் என்று உறுதியளித்துக் கொண்டனர். மனைவிகளும் தாங்கள் விரும்பியதைச் சுதந்திரமாக செய்யலாம், இந்த ஏற்பாடு எட்டு ஆண்டுகளாக சரியாக வேலை செய்துகொண்டிருந்தது, ஆனால் தற்போது சிக்கல்கள் வரத் தொடங்குகின்றன.

அதுதான் அந்த நாவலின் கரு. என்னால் 15,000 வார்த்தைகளை எழுத முடிந்தது, அதாவது அத்தகைய புத்தகங்களில் நான்கில் ஒரு பங்கு. எனவே நான் இந்தியா திரும்பியதும், பதிப்பக நண்பர்களில் சிலரை அழைத்து, அவர்களிடம் இதனை வெளியிடுவதை பரிசீலிப்பீர்களா என்று கேட்டேன். நான் கண் சிமிட்டுவதற்கு முன் அனைவரும் இல்லை என்றனர். “இந்த நாட்களில் யாரும் எதையும் படிப்பதில்லை, முக்கியமாக நாவல்களை படிப்பதில்லை, அதை விட முக்கியமாக இந்திய எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் எழுதும் நாவல்களை படிப்பதில்லை – அதை விட முக்கியமாக உங்களைப் போன்ற அறியப்படாத நாவலாசிரியர்களின் படைப்பை தொடவும் மாட்டார்கள்” என்றனர். அதனால் நாவல் எழுதுவதை நிறுத்திவிட்டேன்.

இருப்பினும் புத்தகங்களின் நீண்ட கால எதிர்காலத்தைப் பற்றி ஆச்சரியப்படாமல் என்னால் இருக்கமுடியாது. எனது அறிவுரை வழங்கும் இயந்திரம் புத்தகங்கள் உயிர்வாழும் என்று நினைக்கிறது, ஏனென்றால் அவர் யதார்த்தத்தைப் புறக்கணிக்க விரும்பும் ஒரு நம்பிக்கையாளர். ஆனால் நான் அந்த கருத்தை ஏற்கவில்லை. குறைந்த பட்சம் காகிதத்தில் அச்சிடப்பட்ட புத்தகங்கள் தப்பிப்பிழைக்காது. மிங்க் கோட் போன்ற அதிக விலை கொண்ட ஆடம்பரமான பொருளாக பிழைத்தல் மட்டுமே அதனால் முடியும். வெளியீட்டாளர்களின் இடைநிலை நீக்கப்பட்டு அதன் இடத்தில் சுய-வெளியீட்டிற்கான போக்கு நிலவும் என்றும் நான் நினைக்கிறேன். புத்தகங்கள் இணையத்தின் வாயிலாக இலவச மாகக் கிடைக்கும். அதாவது வாழ் வாதாரத்திற்காக புத்தகங்கள் எழுதுவது சாத்தியமற்றதாகிவிடும். ஆயிரக்கணக்கான பிற நாவலா சிரியர்களைப் போலவே, எனது முதல் நாவலுக்கு எனக்கு ராயல்டி எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் ஒன்று என்ன தெரியுமா? நான் முன்பணம் தருமாறு வலியுறுத்திருந்தேன். சிறிய தொகை ஆனால் திருப்திகரமானது. ஆனால் வரும் ஆண்டுகளில் அதுவும் மறைந்து விடும். ஆன்லைன் நாவல்கள் வரம்பற்றதாக மாற, விலை பூஜ்ஜியமாக மாறும்.■

ADVT.

CREATE HOPE in the WORLD

PROJECT PUNCH

A Project by Rotary Club of Virudhunagar Dist-3212

A 3-Day Spoken English Programme

A Spoken English Programme for Student Teachers

Rotary

## What is Project Punch?

Project Punch is a 3-day Spoken English training programme by Rotary Club of Virudhunagar for student teachers (B.Ed. students) to improve their Communicative English and Public Speaking skills.

The programme has been designed in such a way that the participants get the fundamentals to start their journey of communication skills development and that the top performers receive special attention and booster sessions for further improvements.

As on July, 2023

No. of Occurrences **50**

No. of Beneficiaries **5413**

**Contact: Project Chairman - Rtn.A.Shyamraj - 97502 07464**

IDHAYAM

PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/July 23/ Rotary/2

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

